இவ்விதம் உடலைப்பற்றியும், ஜ்ஞானம் பெறக்கூடிய அமானித்வம் முதலிய குணங்கள், அவைகளால், அறியக் கூடிய ஜீவாத்மாவைப்பற்றியும் சுருக்கமாக உனக்குச் சொல்லப்பட்டன. பக்தியுடன் இவைகளை என்னிடமிருந்து கேட்டு அறிந்தவன் என் ஸ்வபாவத்தை (தன்மையை) அடையத் தகுதியுள்ளவனாகிறான்.

இது வரை உடல் உயிர் இவைகளைப் பற்றியும் பரிசுத்த ஜீவாத்மாவை அடைவதற்கு வேண்டிய குணங்களையும் சுருக்கமாகச் சொன்னார் கண்ணன். இதை பக்தி சிரத்தையுடன் என்னிடமிருந்து கேட்டறிந்தவன், சம்சார பந்தத்திலிருந்து விடுபட்டு சில வகையில் என் ஸாம்யத்தைப் பெற தகுந்தவனாகிறான் என்கிறான்.

ப்ரக்ருதிம் புருஷஞ்சைவ வித்தி அநாதீ உபாவபி ।
விகாராஞ்ச குணாஞ்சைவ வித்தி ப்ரக்ருதி ஸம்பவாந் ॥ 19

உடலுக்குக் காரணமான ப்ரக்ருதியும் அநாதி, ஜீவாத்மாவும் அநாதி என்பதை நீ அறிவாயாக. வெறுப்பு விருப்பம் முதலான குணங்களும் அமானித்வம் முதலான நற்குணங்களும் இந்த ப்ரக்ருதியினால் உண்டாகின்றன என்பதை அறி.

ஒரு ஜீவனுக்கு ப்ரக்ருதியினாலான சரீரம் தொடர்ந்து வெகு காலமாக வந்து கொண்டேயிருக்கிறது; விருப்பம் வெறுப்பு முதலான அப குணங்களும், அமானித்வம் போன்ற நற்குணங்களும், ப்ரக்ருதியினாலேயே உண்டாகின்றன. அக்குணங்களுக்கு சேர உடலைச் சேர்ந்த கர்மேந்த்ரியங்கள் ஐந்து, ஜ்ஞானேந்த்ரியங்

acharya.org

கள் ஐந்து, மனம் ஒன்று ஆகிய (பொறி புலன்கள் பதினொன்றி னும்) செயல்கள் செய்யப்படுகின்றன. இதுதான் கர்மா. இந்த கரும பலன்களை அனுபவிக்கிறவன் ஜீவன்.

கருமத்தைச் செய்வதற்கும், ஜீவனுக்கும் உடலின் தொடர்பு வேண்டும். அந்த கரும பலன்களை அனுபவிப்பதற்கும் ஜீவனுக்கு ஓர் உடல் இருந்தே ஆக வேண்டும். இப்படி எப்போதும் ஓர் உடலுடன் சேர்ந்தே இருக்கிறான் ஜீவன்.

கருமத்தைச் செய்வது உடலா, ஜீவாத்மாவா? ஜீவ சம்பந்த மில்லாத உடல் ஒரு செயலையும் செய்ய முடியாதே! தானே செய் யாத கர்ம பலனை ஜீவன் அனுபவிக்கவும் காரணமில்லையே?

ஒரு செயல் உண்டாக ஜ்ஞாநாதி (அறிகிறான்) இச்சதி (விரும்பு கிறான்), யததே (முயல்கிறான்) கரோதி (செய்கிறான்), புங்க்தே (சுவைக்கிறான்) என ஐந்து விதமான செயல்கள் பார்க்கப்படுகின் றன. ஒரு பொருளை அறிகிறவன் ஜீவன், அப்பொருள் வேண்டும் என்று இச்சிக்கிறவன் ஜீவன், அதைப் பெற முயற்சி செய்வதும், அதைப் பெறுவதுமான செயல் உடலைச் சேர்ந்தது, அதைப் பெற்று அனுபவிக்கிறவன் ஜீவன். இப்படி அறிவது விரும்புவது, அதை பெற்ற பிறகு அனுபவிப்பது இம்மூன்றும ஜீவனைச் சேர்ந்தது; பகவானால் கொடுக்கப்பட்ட அறியும் சக்தியைக் கொண்டே சித்சக்தி, இவைகளை ஜீவன் செய்கிறான். சரீரம் பெற்ற ஜீவன் அதைப்பெற முயன்று பெறுகிறான்; அதைப் பெற்ற பிறகு அனுப விப்பது ஜீவனேயாம்.

ஆதலால் புலன்கள் செய்யும் செயல்களுக்கு ஜீவனே காரண மாகிறபடியால் அதன் பலனை அனுபவிப்பவனும் ஜீவனேயாகிறான்.

இப்படி சரீரம் பெற்ற ஜீவனுக்கு, செயலும் அதனால் உண்டா கும் இன்ப துன்பங்களும் ஒரு நாளும் போகாது.

காரிய காரண கர்த்ருத்வே ஹேது: ப்ரக்ருதிர் உச்யதே।
புருஷஸ்ஸுக துக்கானாம் போக்த்ருத்வே ஹேது: உச்யதே ॥ 20 ॥

ப்ரக்ருதியினாலான உடலும் அதைச் சார்ந்த புலன்களுமே கருமம் செய்கின்றன. ஆனால் அதனால் உண்டாகும் சுக துக்கங் களை அனுபவிக்கிறவன் ஜீவன்.

acharya.org

புருஷ: ப்ரக்ருதிஸ்த்தோ ஹி புங்க்தே ப்ரக்ருதிஜாந் குணாந் ।
காரணம் குண ஸங்கோऽஸ்ய ஸதஸத்யோநி ஜந்மஸு ॥ 21

ஜீவன் ப்ரக்ருதியினாலான உடலில் இருந்துகொண்டு, அந்த உடலுக்கு உண்டான ஸத்வ ரஜஸ் தமோ குணங்களினாலான சுக துக்கங்களை அனுபவிக்கிறான். இந்த குணானுபவப் பற்றுதலே ஜீவன் பற்பல பிறவிகள் எடுக்க காரணமாகிறது.

ஸத்வ ரஜஸ் தமோ குணங்கள் உடலுக்கே உள்ளவை. ஸத்வ குணத்தினால் சுகமும், ரஜஸ்ஸினால் துன்பமும் தமஸ்ஸினால் மோஹமும் உண்டாகின்றன. உடலில் இருக்கும் ஜீவன் இவை களில் பற்றுதல் உடையவனாய் அவைகளை அனுபவிக்கிறான். ஸத்வ குணத்தின் பற்றுதலினால் தேவ, மனிதனாகவும், மற்ற இரண்டு குணங்களின் பற்றுதலினால் மிருகம், பறவை, தாவரமாக வும் ஜீவனுக்குப் பிறவிகள் உண்டாகின்றன.

அத்வைத மதத்தின் கொள்கை என்னவென்றால், உடல் உயிர் இவ்விரண்டும் மித்யை (பொய்) அவைகளின் சேர்க்கையும், அதனால் உண்டாகும் குணங்களும், சுக துக்கங்கள் எல்லாம் மித்யை, வெறும் தோற்றம், உண்மையல்ல என்பதேயாம். ஆனால் இங்கே கண்ணன் ப்ரக்ருதியினாலான உடலும் உண்டு; ஜீவன் அதிலிருக்கிறான். உடலுக்குண்டான குணங்களும் அதனால் ஏற் படும் சுக துக்கங்களும் உண்மை. அதை ஜீவன் அனுபவிக்கிறான்; இதனடியாக அவனுக்குப் பற்பல பிறவிகள் உண்டாகின்றன என்பதும் சத்யம் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறான். ஆகவே அத்வைத மதக் கொள்கை, இந்த கீதா சுலோகத்திற்குச் சிறிதும் பொருந்தாது.

அத்வைதிகள் உடல், உயிர் இவைகளின் சேர்க்கை, குணங் கள் சுகதுக்கம் மறுபிறவிகள் எல்லாம் வெறும் தோற்றம், ஆரோ பிதம்-உண்மையல்ல 'தாத்பிதம்' என்கிறார்கள்.

ஆரோபிதம் : ஒரு வெண்மையான துணியின் மீது ஒரு சிவப்பு வண்ண ஒளி (Light) படுகிறது. அந்தத் துணி சிவப்பாகத் தோன்றுகிறது. இது தான் ஆரோபிதம் என்பது.

தாத்பிதம் : அதே வெண்மையான துணியின் பேரில் ஒரு சிவப்பு தண்ணீர் (Red ink) கொட்டிவிடுகிறது. அந்தத் துணி சிவப் பாகி விடுகிறது. இதுவே தாத்பிதம்.

acharya.org

ஆரோபிதமாகயிருந்தால், (அதாவது வெறும் தோற்றமாயிருந்தால்) அதைப் போக்க நாம் முயற்சி செய்ய மாட்டோம்; தாத்விகமாகயிருந்தால், (அதாவது சிவப்பின் சேர்க்கையாக இருந்தால்) அதைப் போக்க முயற்சி செய்கிறோம் அன்றோ!

உபநிஷத், ப்ரஹ்ம சூத்திரம், கீதா சாஸ்திரம் இவை மூன்றையும் ஆதாரமாக அத்வைதிகளும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இவை மூன்றிலும் உடல், ஜீவன் இவைகளின் சம்பந்தம், அதனால் உண்டாகும் சுக துக்கங்கள், கர்மம் இதனால் உண்டாகும் பல பிறவிகளைப் பற்றிச் சொல்லி, அவைகளைப் போக்கி, மறு பிறவியில்லாத முக்தி (மோக்ஷத்தையும்) யையும் சொல்லியிருக்கின்றன. ஆரோபிதமாயிருந்தால் (தோற்றமாக) அவைகளைப் போக்க உபாயத்தை இவைகள் சொல்ல வேண்டியதில்லை; ஆகையினால் உடல் உயிர் இவைகளின் சேர்க்கை கர்மம், மறுபிறவிகள் எல்லாம் தாத்விதமே-உண்மையே என்பது தேறுகிறது

இதற்கு மேல் ஒரு கேள்வி—இவை உண்மையாக (தாத்விதமாக) யிருந்தால், அவை ஔபாதிகமா (ஒரு காரணத்தைப் பற்றினதா), அல்லது ஸ்வாபாவிகமா? இயற்கையாக உண்டானவைகளா?

ஜீவனுக்கு உடலின் சேர்க்கையும், சுக துக்கங்களும், கர்மாவும், மறுபிறவிகளும் எல்லாம் ஒரு உபாதியைப் பற்றி வந்தது; அதாவது ஔபாதிகமேயாம். ஓர் காரணத்தைப் பற்றியவைகளேயாம். இயற்கையானதல்ல; அதனால்தான் அக்காரணங்களை அறிந்து, அவைகளைப் போக்கி மறுபிரவியில்லா ஆத்ம நன்மையைப் பெறவே இந்த கண்ணனின் கீதா உபதேசம் ஏற்பட்டது. மற்ற சுருதிகளும் இவைகளையே கூறுகின்றன.

உபத்ரஷ்டாऽநுமந்தா ச பர்த்தா போக்தா மஹேச்வர: ।
பரமாத்மேதி சாப்யுக்தோ தேஹேஸ்மிந் புருஷ: பர: ॥ 22 ॥

இந்த தேகத்தில் மேலான புருஷனை ஜீவன் பார்த்துக் கொண்டிருப்பவன்; உடலை தாங்குகிறவன், சுக துக்கங்களை அனுபவிக்கிறவன். உடல், புலன்களுக்கு ஈச்வரன், பரமாத்மா என்றும் சொல்லப்படுபவன்.

கீழ் சில சுலோகங்கள் போல, இதிலும் கிருஷ்ணனுடைய பகவானைக் கூறுவது போலவே தோன்றும்; ஆனால் இங்கு ஜீவாத்மாவையே கூறுகிறான்.

acharya.org

பகவான் ஒவ்வொரு உடலிலும் இருந்து கொண்டு ஜீவனின் செயல்களைப் பார்த்துக்கொண்டு, அதில் உதாஸீனனாகயிருக்கிறான்.

உடலையும் ஜீவனையும் தரிப்பவனும் அந்த பகவானே. அவை செய்யும் செயலின் பலன்களெல்லாம் அந்த பகவானையே போய்ச் சேருகிறது. இவனே மஹேச்வரன் என்றும் பரமாத்மா வென்றும் சொல்லப்படுகிறான் என்று ஸ்வரஸமாகப் பொருள் இந்த சுலோகத்திற்குக் கூறலாம்.

ஆனால் இங்கு கண்ணன், உடல் மற்றும் அதிலிருக்கும் ஜீவன் இவைகளைப் பற்றியே சொல்லி வருகிறான். கீழ் சுலோகத்திலும் மேல் சுலோகத்திலும் உடல் உயிர் இவைகளைப் பற்றி சொல்லி, நடுவில் இந்த சுலோகத்தில் பகவானைப் பற்றிச் சொல்லுகிறான் என்று பொருள் கூறுவது பொருந்தாது. ஆதலால், 15 அத் 8 வது சுலோகத்தில் ''சரீரம் யதி ஆப்நோதி ஈச்வர'' என்று உடலையும் புலன்களையும் நியமனம் செய்யும் ஜீவனை ஈச்வரன் என்று சொல்லி யிருப்பது போல், இங்கும் ஜீவனையே ஈச்வரபதத்தினால் கூறுகிறான்.

உபத்ரஷ்டா : புலன்கள் செய்யும் செயல்களை ஜீவன் பார்த்துக் கொண்டிருக்கிறான்; அநுமந்தாக அதில் உதாஸீனனாக இருப்பவனும் ஜீவனே; பர்த்தா உடலை தரிப்பவனும் ஜீவன். ஜீவனில்லை யென்றால் உடல் அழிந்து விடுகிறது. போக்தா புலன்கள் செய்யும் செயல்களின் பலனை அனுபவிப்பவன் ஜீவன்; உடல், புலன்கள், மனம், புத்தி பிராணன் இவற்றை தரித்து நியமிக்கும் எஜமானன் ஜீவன். ஆகையினால் ஜீவனை ஈச்வரன் என்கிறான்.

கீதையில் சில இடங்களில் தன்னையும், ஜீவனையும் ஆத்மா என்று சொல்லியிருக்கிறான். அது போல உடலையும் மனத்தையும் கூட ஆத்மா என்கிற பதத்தினால் கூறியிருக்கிறான். இப்படி ஆத்மா வான உடலுக்கும் மனத்திற்கும் ஆத்மாவாய் ஜீவனிருப்பதினால் அவனை பரமாத்மா என்று இங்கு விவரிக்கிறான்.

ய ஏநம் வேத்தி புருஷம் ப்ரக்ருதிஞ்ச குணைஸ்ஸஹ ।
ஸர்வதா வர்த்தமாநோபி ந ஸ பூயோऽபிஜாயதே ॥ 23 ॥

எவன் இந்த ஜீவனையும் ப்ரக்ருதியான உடலையும் ஸத்வம் முதலிய குணங்களோடு கூட அறிகிறானோ, அவன் எவ்விதமாக இருந்தபோதிலும் மறு பிறவி அடைகிறதில்லை.

acharya.org

யாராயிருந்தாலும், பிராஹ்மண, க்ஷத்திரிய வைச்ய, சூத்ர எந்த ஜாதியில் பிறந்தவனாயினும், ஒருவன் தன் வாழ்நாளில் எப்படியிருந்த போதிலும், தன் உடல், ஜீவாத்மா இவைகளின் உண்மைகளை கண்ணன் கீழே கூறியபடி அறிகிறானோ அவன் மறு பிறவியில்லாத மோக்ஷம் பெறுகிறான். இதனால் மோக்ஷம் பெற பகவத் ஜ்ஞானம் எப்படி அவசியமோ, அதுபோல ப்ரக்ருதி, ஜீவன் அவைகளின் உண்மையான தன்மையையும் அறிய வேண்டும் என்பது தேறுகிறது.

த்யாநேந ஆத்மநி பச்யந்தி கேசித் ஆத்மாநம் ஆத்மநா ।
அந்யே ஸாங்க்யேந யோகேந கர்மயோகேந சாபரே ॥ 24 ॥

இனி ஜீவாத்மாவின் தரிசனம் பெற உபாயங்களை இரண்டு சுலோகங்களினால் சொல்லுகிறான்.

சிலர் உடலில் உள்ள ஆத்மாவை மனத்தின் யோகத்தினால் காண்கிறார்கள். இதற்குத் தகுதியற்றவர் ஜ்ஞான யோகத்தினால் ஜீவனைக் காண்கின்றனர். இப்படி ஜ்ஞானயோகம் செய்யவும் தகுதியற்றவர், ஜ்ஞானத்தை உட்கொண்ட கர்மயோகத்தினாலேயே ஜீவாத்ம தரிசனம் பெறுகின்றனர்.

அந்யே த்வேவம் அஜாநந்த: ச்ருத்வா அந்யேப்ய உபாஸதே ।
தே அபி சாதிதரந்த்யேவ ம்ருத்யும் ச்ருதி பராயணா ॥ 25 ॥

மேலே சொன்னபடி ஜ்ஞான யோகம் கர்மயோகம் இவைகளைச் செய்ய முடியாதவர்களான மற்றும் சிலர் மஹான்களிடம் சரீரம் ஆத்மாவைப் பற்றிய தன்மையைக் கேட்டறிந்து, ஆத்ம தியானம் செய்கிறார்கள். இவர்களும் ஸம்ஸார பந்தத்தைக் கடந்து ஆத்மானுபவம் பெறுகிறார்கள்.

யாவத் ஸஞ்ஜாயதே கிஞ்சித் ஸத்வம் ஸத்தாவர ஜங்கமம் ।
க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ ஸம்யோகாத் தத்வித்தி பரதர்ஷப ॥ 26 ॥

அர்ஜுன ! உலகிலுள்ள எல்லா, ஜங்கம ஸ்தாவரங்களும், உடல் உயிர் இவைகளின் சேர்க்கையினாலேயே உண்டாவை என்பதை அறிவாயாக.

இந்த உடல் உயிர் சேர்க்கை எப்படிப்பட்டது ?

அத்வைத மதம் - சரீர ஆத்ம சேர்க்கையை அத்யாஸம் என்பர். அதாவது ஒன்று மற்றொன்றாகத் தோற்றுவது. உடல் உண்மை

acharya.org

யில் இல்லை; வெறும் தோற்றமே, ஆத்மா ஒருவனே உண்மையாக உளன். அவன் ப்ரஹ்மம் ஜீவாத்மா என்று தனிப்பட்ட தத்வம் கிடையாது.

இந்த சுலோகத்தில் க்ஷேத்ர க்ஷேத்ரஞ்ச ஸம்யோகாத் தத்வித்தி - என்பதற்கு, க்ஷேத்ரம் எனப்படும் சரீரத்தையும் க்ஷேத்ரஜ்ஞனை ஜீவன் (ப்ரஹ்மம்) என்பதாகவே அறிய வேண்டும் என்றே இவர்கள் பொருள் கூறியிருக்கின்றனர்.

முத்துச்சிப்பியைப் பார்த்து ஒருவன் வெள்ளி என மயங்குகிறான்; அதை வெள்ளி அன்று சிப்பி என்று அறிவதே ஜ்ஞானம், உண்மையான அறிவு; அதே போல உண்மையில் ப்ரக்ருதியோ; ப்ரக்ருதியினுலான சரீரமோ கிடையாது; ஜீவன் ஒருவனே உளன். அந்த ஜீவன்தான் ப்ரஹ்மம். இப்படி எல்லாவற்றையும் ப்ரஹ்மமாக அறிவதே ஜ்ஞானம். இந்த உண்மையான அறிவு பெற்றவனுக்கு சரீரமோ ஜீவனோ எதுவும் தோற்ருது; ப்ரஹ்மம் ஒன்றே தோற்றும். ஆதலால் இந்த சுலோகத்திற்கு, உலகில் உள்ள எல்லா ஜங்கம ஸ்தாவர பொருள்கள் அனைத்தும் ப்ரஹ்மம் என்பதே பொருள் என்கிருர்கள் அத்வைதிகள்.

விசிஷ்டாத்வைத மதம்

ப்ரக்ருதியும், ப்ரக்ருதியினுலான உடலும் உண்மை—ஜீவாத்மாவும் உண்மை—இவையிரண்டும் பகவானை விட்டு வேறுபட்ட தத்வங்கள். அவனை விடத் தாழ்ந்தவைகள். அவனுக்கு சரீரமாய் அவனுல் தரிக்கப்பட்டுள்ளவை. இதை புருஷோத்தம வித்யையில் தெளிவாக கண்ணன் அருளிச் செய்திருக்கிருன்.

இந்த உடலுக்கும் ஜீவனுக்கும் உள்ள சம்பந்தம் ஸம்யோகம் எனப்படும். அத்யாஸம் தோற்றமன்று; இந்த ச்லோகத்திலும் கண்ணன் "க்ஷேத்ர க்ஷேத்ரஞ்ச ஸம்யோகாத்" என்று ஸம்யோக பதத்தையிட்டே கூறியிருக்கிருன், ஸம்யோகம் என்ருல் சேர்க்கை என்பதே பொருள்.

முத்துச் சிப்பி ஜடப் பொருள். தானுக ப்ரகாசிக்கக் கூடிய பொருளன்று; ஜீவனின் ஜ்ஞானத்தினுல் அறியப்படும் பொருள்; இந்த ஜ்ஞானக் குறைவினுல் வெகு தூரத்திலுள்ள சிப்பியை வெள்ளி என்று நினைக்கிருன். அதை எடுக்க அருகில் சென்றதும் ஞானம் மலர்ந்து அதைச் சிப்பி என்று அறிகிருன். இது சிப்பியின் தோற்ற மாறுதலாலன்று; ஜீவன் தன்னைத்தானே

acharya.org

அறியக் கூடியவன்; மற்றொன்றால் அறியப்படும் ஜடப்பொருளன்று. ஆகலால் ஜீவாத்மாவை சரீரம் என்று மயங்க நியாயமில்லை. ஏனெனில் ஆத்மாவும் அதன் ஜ்ஞானமும் ஒன்று அதாவது ஜீவாத்மா ஞான உருவாயுள்ளவன்.

இன்னும் கண்ணன் கீதை ஆரம்ப முதல் பல இடங்களில் சரீரம் வேறு, ஜீவன் வேறு என்று பலபடியாக சொல்லியிருக்கிறான். ஆகையால் இங்கு உடலே ஜீவனாகத் தோற்றம் அளிக்கிறது என்கிற பொருள் சிறிதும் பொருந்தாது.

ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேச்வரம் ।
விநச்யத்ஸ்வ விநச்யந்தம் ய:பச்யதி ஸ பச்யதி ॥ 27 ॥

எல்லா உடல்களிலும் உள்ள ஜீவாத்மாக்கள் ஸமமானவை; ஒன்றைப் போலவே மற்றவை எல்லாம் உள்ளவை. சரீரம் அழியும் போதும், ஜீவன் அழிகிறதில்லை; பல அவயவக் கூட்டங்களாலான உடலுக்கு, ஜீவனே எஜமானன்; ஈச்வரன். இவைகளை எல்லாம் எவன் அறிகிறானோ அவனே ஜீவாத்மாவை உள்ளபடி அறிந்தவனாகிறான்.

பரமேசுவரன் என்கிற பதம் பகவானையே சொல்லும். இருந்தாலும், இங்கே பல அவயவக் கூட்டங்களுடன் கூடிய உடலுக்கு ஜீவன் எஜமானனாக யிருப்பதைப்பற்றி அவனை போஷித்து பரமேசுவரன் என்கிறான்.

ஸர்வேஷு பூதேஷு ஸமதிஷ்டந்தம் — தேவ மனித மிருக, ஸ்தாவர உடல்கள் அனைத்திலும் உள்ள ஜீவாத்மாக்கள் ஒரே மாதிரியானவை. "கவாம் அநேக வர்ணானாம் க்ஷீராம்ஸ்து ஏக வர்ணம்" பல வர்ணங்களையுடைய பசுக்கள் தரும் பால், ஒரே வர்ணமாக, வெண்மையாகயிருப்பது போல, சரீரம் வேறுபட்டிருந்தாலும், அவைகளிலுள்ள ஜீவன் ஒரே மாதிரியிருப்பவன். ஒரு மரக்கட்டையை உப்பளத்தில் போட்டு வைத்தால், அது உப்பாகவே மாறிவிடுவது போல, சரீரத்திலுள்ள ஜீவன் மாறுதலடைவதில்லை. கங்கா தீர்த்தத்தை ஒரு செப்பினாலான பாத்திரத்தில் வைத்திருந்தாலும், அந்த கங்கா தீர்த்தம் பரிசுத்தமாகவேயிருக்கும். அதுபோல ஜீவன் பரிசுத்தனாகவேயிருக்கிறான்.

ய:பச்யதி ஸ பச்யதி—இப்படி ஜீவனை அறிபவனே அவனை உள்ளபடி அறிந்தவனாகிறான்.

acharya.org

ஸமம் பச்யந் ஹி ஸர்வத்ர ஸமவஸ்தித மீச்வரம் ।
நஹிநஸ்தி ஆத்மந ஆத்மாநம் ததோ யாதி பராம் கதிம் ॥ 28

உடல் அதன் புலன்களையெல்லாம் தரித்து ஏவிக் கொண்டு அவைகளுக்கு ஈச்வரனுயிருக்கும், ஜீவாத்மாக்களை எல்லாம் ஒத்தவை (சமம்) என்று எவன் காண்கிருனே, அவன் தனக்குத் தானே ஒருவித விநாஸத்தையும் செய்து கொண்டவனுக மாட்டான். இவன் தன்னை ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுவித்து மேலான, கதியை அடைகிருன்; அதாவது பரிசுத்த ஜீவாத்ம தரிசனம் பெறுகிருன்.

இப்படி ஜீவாத்மாக்களின் ஸாம்யத்தைக் கூறி, மேலே உடலைக் காட்டிலும் வேறுபட்டவன் ஜீவன் என்பதைச் சொல்லுகிருன்.

ப்ரக்ருத்யைவ ச கர்மாணி க்ரியமாணுநி ஸர்வச :
ய: பச்யதி தத் ஆத்மானம் அகர்த்தாரம் ஸ பச்யதி ॥ 29

எல்லாச் செயல்களும் உடலினுலேயே செய்யப்படுகின்றன. ஜீவன் தானுக எதையும் செய்யவில்லை என்பதை எவன் அறிகிருனே அவன் ஆத்மாவை உள்ளபடி அறிந்தவனுகிருன். எல்லாச் செயல்களும் ப்ரக்ருதியினுலேயே நடைபெறுகின்றன ஜீவன் எதையும் செய்பவனில்லை என்கிற சாங்கிய மதக் கொள்கையே இங்கு கண்ணன் கூறுவதாகத் தோன்றும். வியாஸர் உள்பட எல்லா ஆசார்யர்களும் கர்த்ருத்வம், செய்கை ஜீவனுக்கே உள்ள தர்மம், அசித்தான ப்ரக்ருதிக்கில்லை என்பதை நிரூபித்திருக்கிருர்கள்; இவைகளுக்கு மாருக கண்ணன் இங்கு செய்கையை அறிவில்லாத ப்ரக்ருதிக்கே உள்ளது என்று கூறுவது எப்படிப் பொருந்தும்?

அறிவேயில்லாத உடல், புலன்கள் தாங்களாகவோ ஒருவரால் ஏவப்பட்டோ ஒரு செயலைச் செய்வது என்பது முடியாது. ஓர் உயிர் நீங்கிய உடல் ஒன்றும் செய்ய முடியாததன்றோ! ஜீவனுக்குத் தான் சித்சக்தி, அறியும் சக்தியும், செயல்படும் சக்தியும் பகவானுல் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த சக்திகளைக் கொண்டு ஜீவாத்மாவே உடலின் புலன்கள் மூலம் எல்லாச் செயல்களையும் செய்விக்கிருன்; ஜ்ஞாநுதி, இச்சதி, புங்தே, (அறிதல், விரும்புதல், அனுபவித்தல்) இம் மூன்றும் ஜீவன் நேருக்கு நேராகத் தானே செய்கிருன். (யததே, கரோதி; முயலுதல் செய்தல் (அடைதல்) போன்றவை கள் புலன்களின் மூலம் ஜீவனே செய்விக்கிருன். இது தான் தத்வம் (உண்மை).

acharya.org

இதையே கண்ணன் இந்த சுலோகத்தில், எல்லாச் செயல்களும் உடலின் புலன்கள் மூலம் நடைபெறுகின்றன; ஜீவன் தானாகவே செய்வதில்லை என்பதை அறிந்தவன் ஆத்ம நன்மையை அடைகிறான் என்கிறான்.

யதா பூத ப்ரதக் பாவம் ஏகஸ்த்தம் அனுபச்யதி ।
தத ஏவச விஸ்தாரம் ப்ரஹ்ம ஸம்பத்யதே ததா ॥ 30 ॥

இளமை, மூப்பு முதலானவை சரீரத்திற்கே உள்ளது. ஜீவனுக்கு இவ்வித மாறுதல், ஒன்றுமில்லை; மக்களைப் பெற்று, ஸம்ஸாரப் பெருக்கு உண்டாவதும் உடலினாலேயே என்பதை அறிகிறவன், பரிசுத்த ஆத்மாவை அடைகிறான்.

அநாதித்வாத் நிர்குணத்வாத் பரமாத்மா அயம் அவ்யய : ।
சரீரஸ்தோऽபி கௌந்தேய ந கரோதி ந லிப்யதே ॥ 31

அர்ஜுனா ! பரிசுத்த ஜீவன் இந்த அழுக்குடம்பில் இருந்தாலும், உற்பத்தி விநாஸமில்லாததினாலே, அவனுக்கு ஒருவித மாறுதலுமில்லை, உடலுக்கே ஸத்வ ரஜஸ் தமோ குணங்கள் உள்ளவை; இவை ஜீவனுக்கில்லை. ஆதலால் இந்த குணங்களடியாக ஏற்படும் செயல்களும் அவனைச் சேர்ந்தவையல்ல; உடலின் ஸ்வபாவம் (தன்மை) எதுவும் அவனை ஒட்டுவதில்லை.

யதா ஸர்வகதம் ஸௌக்ஷ்ம்யாத் ஆகாஸம் நோபலிப்யதே ।
ஸர்வத்ராவஸ்த்திதோ தேஹே ததாஆத்மா நோபலிப்யதே ॥ 32

எப்படி ஆகாசம், எங்கும் பரந்திருந்த போதிலும் எந்த பொருள்களின் தன்மையையும் அது அடைவதில்லையோ, அதே போல ஜீவனும் அணுவாகையினால் பலவிதமான உடலிலிருந்த போதிலும், அந்த உடலின் தன்மையை அது அடைவதில்லை.

யதா ப்ரகாசயத்யேக: க்ருத்ஸ்நம் லோகம் இமம் ரவி: ।
க்ஷேத்ரம் க்ஷேத்ரீ ததா க்ருத்ஸ்நம் ப்ரகாசயதி பாரத ॥ 33 ॥

அர்ஜுனா ! சூரியன் எப்படி உலகெல்லாம் பிரகாசிக்கிறானோ அதே போல ஜீவன் உடல் முழுவதும் தன் அறிவு ஒளியினால் பிரகாசிக்கிறான்.

acharya.org

க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞயோரேவம் அந்தரம் ஜ்ஞான சக்ஷுஷா ।
பூத ப்ரக்ருதி மோக்ஷஞ்ச யே விதுர் யாந்திதே பரம் ॥ 34 ॥

இவ்வாறு ஜீவாத்மா சரீரத்தை விட வேறுபட்டது என்பதை உள்ளபடி அறிந்து, அமரங்த்துவம், முதலான குணங்களைப் பெற்ற வர்கள் ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுபட்டு, பரிசுத்த ஜீவனையை அடைகிறார்கள். மோக்ஷமடைகிறார்கள்.

சூரியன் ஆகாஸத்திலிருக்கிறான். உலக முழுவதும் தன் கிரணங்களால் பிரகாசிக்கிறான். அது போல ஜீவன் அதி நுண்ணிய தாய் அணுவாய் உடலின் இருதயத்திலிருக்கிறான். தன்னுடைய ஜ்ஞான (அறிவு) ஒளியினால் பத்த தசையில் தன் உடல் முழுவதும், மாத்திரம் பிரகாஸித்துக்கொண்டிருக்கிறான். ஆனால் முக்த தசையில், அமர உடல் பெற்று அவனுடைய ஞான ஒளி எங்கும் பிரகாசிக்கக் கூடியதாயிருக்கும்.

ஸ்ரீ ஆளவந்தார் அருளிய கீதார்த்த ஸங்க்ரஹம்

தேஹ ஸ்வரூபம் ஆத்மப் ராப்தி ஹேது: ஆத்ம விசோதனம்
பந்த ஹேது: விவேகச்ச த்ரயோதச உதீர்யதே

உடலின் ஸ்வரூபமும் ஆத்மதரிசனம் பெற உபாயமான அமானித்வம் முதலான குணங்களும், பத்த தசை முக்த தசை இரண்டிலும் ஜீவாத்மாவின் தன்மையும், ஸம்ஸார பந்தத்திற்கு காரணமும், அதிலிருந்து விடுபட்டு பரிசுத்த ஆத்மாவை அடையும் வழியையும் இந்த பதின்மூன்றாவது அத்யாயத்தில் சொல்லப் பட்டது.

ஸ்ரீ ஆளவந்தார் திருவடிகளே சரணம் !

பதிமூன்றும் அத்யாயம் முற்றிற்று.

acharya.org

ஸ்ரீ மதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் பகவத் கீதை

பதினான்காம் அத்தியாயம்

அவதாரிகை

உடல், உயிர் (ஜீவன்) இவைகளின் தன்மையும், ஆத்ம தரிசனம் பெறுவதற்கான அமானித்வம் முதலான குணங்கள் ஸம்ஸார பந்த காரணம்; அதிலிருந்து ஜீவன் விடுபட்டு பரிசுத்த ஆத்மாவை அடையும் உபாயம் ஆகியவற்றை பதிமூன்றும் அத்யாயத்தில் கண்ணன் விவரித்தான்.

இனி பதினான்காம் அத்யாயத்தில், உடலுக்கு உண்டான ஸத்வ ரஜஸ் தமஸ் குணங்களடியாகச் செய்யப்படும், கருமாக்களின் பலனை அனுபவிக்க, ஜீவன் பல பிறவிகள் எடுக்கிறான் என்பதையும், இப்படி ஜந்ம பரம்பரை ஏற்படுவதைத் தவிர்த்து, மோக்ஷம் பெறும் உபாயத்தையும் கூறுகிறான்.

மோக்ஷம் பெறுவதற்குத் தடையான முதல் விரோதி நம் உடல். அதைப் பற்றிய அறிவு நமக்கு வேண்டும். வியாதியை அறிந்தால் தான், தக்க மருந்து கொடுக்க முடியும். சரீரமே ஒரு வியாதி, பகவானை அடையவிடாமல் நம்மை இது தடுக்கிறது. இதை அறிய வேண்டி, உடலைப் பற்றி, விரிவாக கீழ் அத்யாயத்தில் சொல்லப்பட்டது. அதைப் போக்கும் வழியை இந்த அத்யாயத்தில் கண்ணன் கூறுகிறான்.

பகவான் உவாச: கண்ணன் கூறியது.

பரம் பூய: ப்ரவக்ஷ்யாமி ஜ்நாநாநாம் ஜ்நாநம் உத்தமம் |
யத் ஜ்ஞாத்வா முநய: ஸர்வே பராம் ஸித்திம் இதோ கதா: || 1

இது வரையில் சொன்ன, ஜ்ஞானத்தை விட மேலான அறிவை நான் உனக்கு சொல்லப்போகிறேன். இந்த சிறந்த ஞானத்தைக் கொண்டு ரிஷிகள் எல்லோரும் உயர்ந்த கதியை அடைகின்றனர் (உத்தமம் உயர்ந்தது;–பரம்–மேலானது).

acharya.org

இதம் ஜ்ஞானம் உபாச்ரித்ய மம ஸாதர்ம்யம் ஆகதா: |
ஸர்கேऽபி நோபஜாயந்தே ப்ரளயே ந வ்யதந்தி ச ॥ 2

இந்த ஜ்ஞானத்தினுல் எனக்கு சமமான நிலையைப் பெறுகிறுர்கள். இவர்கள் சிருஷ்டியில் பிறவியும், ப்ரளயத்தில் அழிவும் அடைவதில்லை.

இந்த ஜ்ஞானத்தைப் பெற்றுல் பக்திக்குத் தடையான பாபம் போகும்; என்னை பக்தியுடன் த்யானம் செய்து, மோக்ஷம் பெறலாம். பரமபதத்தை அடைந்த முக்த ஜீவன் பகவானுனை என்னுடன் பலவகையிலும் ஸாம்யம் பெறுகிறுன் என்கிறுன்.

மம ஸாதர்ம்யம் ஆகதா : என்பதினுல் பகவானுடன் ஸாம்யம் பெறுகிறுர்கள் என்பதே பொருளன்றி, பகவானுகவே ஆகிவிடுகிறுன் என்பது பொருளல்ல ; இரண்டு பொருள்களுக்கிடையேதான் ஸாம்யம் (அது இதற்கு சமம்) என்று சொல்ல முடியும். ஆதலால் முக்தி தசையிலும் ஜீவன் தனிப்பட்ட தத்வமே என்பது தேறுகிறது. இங்கு ஆகதா: என்று பன்மையில் கூறியிருப்பதனுல், மோக்ஷ தசையிலும் ஜீவாத்மாக்கள் பல, ஒன்றல்ல என்பது விளங்குகிறது.

மம யோநிர் மஹத் ப்ரஹ்ம தஸ்மிந் கர்ப்பம் ததாம்யஹம் |
ஸம்பவ: ஸர்வபூதாநாம் ததோ பவதி பாரத ॥ 3

உலக உற்பத்திக்குக் காரணமான பெரிய ப்ரஹ்மம் எனப்படும் ப்ரக்ருதி என்னுடையது. உயிர்களை (ஜீவனை) அதில் நான் சேர்க்கிறேன். அதனுல் எல்லாப் பிராணிகளும் உண்டாகின்றன.

ஏழாம் அத்தியாயத்தில், சொன்ன அபரா ப்ரக்ருதியான ஜீவ சமூகத்தையும் மூல ப்ரக்ருதியிலிருந்து படைத்து, அவைகளை ஒன்று சேர்த்து உலகைப் படைப்பவன் தானே என்பதை கண்ணன் இங்கு கூறுகிறுன்.

ப்ரஹ்மம் என்கிற பதம், பகவானையும் குறிக்கும், நான்முக ப்ரஹ்மாவையும் சொல்லும், சில இடங்களில் ஜீவனையும் அசித்தையும் கூடச் சொல்லும். இங்கே அசித்தான ப்ரக்ருதியைச் சொல்லுகிறது.

ஸர்வ யோநிஷு கௌந்தேய மூர்த்தய: ஸம்பவந்தி யா: |
தாஸாம் ப்ரஹ்ம மஹத் யோநிர் அஹம் பீஜப்ரத: பிதா ॥ 4

அர்ஜுன! தேவ மனித திர்யக் ஸ்தாவர இனங்கள் அனைத்தும் உண்டாக இந்தப் பெரிய ப்ரக்ருதியே காரணம். நான் அவைகளில் ஜீவனை (விதையை) சேர்ப்பிக்கிறேன். அவ்வகையில் தகப்பனாகிறேன்.

ஸத்வம் ரஜஸ்தம இதி குணா: ப்ரக்ருதி ஸம்பவா : |
நிபத்நந்தி மஹாபாஹோ தேஹே தேஹிநம் அவ்யயம் || 5

அர்ஜுன! ப்ரக்ருதியிலிருந்து உண்டாகிற ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்கள் நித்யனான ஜீவனை சரீரத்தில் இணைத்து வைக்கின்றன.

உலகம் யாவையும் ப்ரக்ருதியினாலானவை. அதில் ஜீவனைச் சேர்ப்பிக்கும் தந்தை பகவான். உடலில் சேர்ப்பிக்கப்பட்ட, அந்த ஆத்மாவை, உடலுக்குண்டான முக்குணங்கள் கட்டுப்படுத்தி வளர்க்கின்றன.

இனி அக் குணங்களின் தன்மையையும், அவை ஜீவனைக் கட்டுப் படுத்தும் விதத்தையும் விவரிக்கிறான்.

தத்ர ஸத்வம் நிர்மலத்வாத் ப்ரகாசம் அநாமயம் |
ஸுக ஸங்கேந பத்நாதி ஜ்ஞான ஸங்கேந சாநக || 6

ரஜோ ராகாத்மகம் வித்தி த்ருஷ்ணாஸங்க ஸமுத்பவம் |
தந்நிபத்நாதி கௌந்தேய கர்ம ஸங்கேந தேஹினம் || 7

தமஸ் த்வ ஜ்ஞானஜம் வித்தி மோஹனம் ஸர்வ தேஹினாம் |
ப்ரமாதம் ஆலஸ்யம் நித்ராபி: தந்நிபத்நாதி பாரத || 8

குற்ற மற்ற அர்ஜுன! அவைகளில் ஸத்வகுணம் தோஷமற்று ஒளி பொருந்தியிருக்கும். நோயற்ற வாழ்வுக்கு இது காரணம். அறிவு, ஆரோக்யம் இவற்றில் ஜீவாத்மாவை இது ஈடு படுத்துகிறது.

ரஜோ குணம் ஆசை, முயற்சி இவைகளை உண்டு பண்ணுகிறது; இது அவனை கர்மங்களிலும் விஷயப் பற்றுகளிலும் மூட்டுகிறது.

தமோகுணம் அறிவின்மையையும் மயக்கத்தையும் உண்டாக்குகிறது. இது அசட்டை, சோம்பல், உறக்கம், மறதி இவைகளில் அவனைக் கட்டுப் படுத்துகிறது.

இந்த உலகில் இருக்கும் வரையில் இம்மூன்று குணங்களும் கலசியே யிருக்கும். முக்தி தசையில் கலப்பற்ற ஸத்வம் இருக்கும். ஒரு கயிற்றைப் பார்த்து இது ஒரு பொருள் என்று அறிவது ஸத்வ

acharya.org

குணத்தினால் தான். அதைப் பாம்பு என்று ப்ரமிக்கிறோம். இது தமோ குணத்தின் காரியம். உண்மை அறிவைப் பெற நாம் ஸத்வ குணத்தை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும். தூய உணவே ஸத்வ குணத்தை உண்டாக்கும்; நோய்களையும் போக்கும். ரிஷிகள் ஆஹாரத்தினாலேயே ஸத்வ குணம் பெற்று, நல்ல ஜ்ஞானத்தையும் உடல் நலத்தையும் பெற்று இருந்தார்கள்.

ஜ்ஞானத்தினால் கட்டுப்படுத்துகிறது என்றால் என்ன? ஜ்ஞானம் பெறுவதிலேயே நோக்காக இருத்தல்; இதுவும் கூடாது; ஞானம் பெறுவது முக்கியமே. அதற்கேற்ப செயலும் இருக்க வேண்டும்.

ஒன்றை அனுபவித்தால் அதில் வாஸனை, ருசி உண்டாகிறது. இது தான் விதை, பிறவி எடுத்ததும் இந்த விதை முளைக்கிறது. இதுதான் ராகம் (ஆசை). அதனால் விஷயங்களிற் சேர்க்கை ஸங்கம்; சேர்க்கையினால் திருஷ்ணை (காமம்) உண்டாகிறது. ஸ்திரீ புருஷர்களின் சேர்க்கை, ராகம், காமம் எனப்படும். விஷயங்களில் ஆசை த்ருஷ்ணை; புத்திரர், வீடு, தனம் இவைகளின் தொடர்பு ஸங்கம்.

இந்த ராகம், ஸங்கம், த்ருஷ்ணை இவைகளினால் நம்மிடம் பல செயல்கள் உண்டாகின்றன. இவையே கர்மா என்பது இந்த கர்ம பலன்களை அனுபவிக்க, பல பிறவிகள் எடுக்க நேருகிறது.

இக்குணங்களின் தன்மைகளை அறிந்து பகவானை அடைய விரும்பும் முமுக்ஷுவுக்கு ஸத்வ குணத்தினால், உண்டாகும் ஜ்ஞானம் வேண்டும்; ஆனால் அதுவே பயன் என்று இருத்தல் கூடாது; அதற்கேற்ப ரஜோ குணத்தினால் உண்டாகும் செயல்களும் வேண்டும்; ஆனால் செய்கையே முக்ய பிரயோசனமாக கருதுதல் கூடாது; அது வினைப்பயனில் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கும். பகவானின் உகப்புக்காகவே அவனின் எந்தச்செயலும் இருக்க வேண்டும்; தமோ குணத்தினாலான தூக்கமும் ஓய்வும் தேவையே; ஆனால் எப்பொழுதும் உறக்கத்திலும் சோம்பியும் பொழுது போக்குதலும் கூடாது.

ஸத்வம் ஸுகே ஸஞ்ஜயதி ரஜ: கர்மணி பாரத ।
ஜ்ஞானம் ஆவ்ருத்யது தம: ப்ரமாதே ஸஞ்ஜயத்யுத ॥ 9

அர்ஜுனா ! ஸத்வ குணம் இன்பத்திலும், ரஜோ குணம் அதைப் பெறுகிற முயற்சியிலும் பற்றுதலை உண்டாக்கும் தமோ குணம் உண்மை அறிவைப் போக்கி அஜாக்ரதை, சோம்பல், தூக்கம் இவைகளில் சேர்ப்பிக்கும்.

acharya.org

ரஜஸ் தமஸ்சாபி பூய ஸத்வம் பவதி பாரத |
ரஜஸ் ஸத்வம் தமச்சைவ தமஸ் ஸத்வம் ரஜஸ்ததா || 10

ஒவ்வொரு குணமும் மற்ற இரண்டையும் அடக்கி, தான் மேலோங்க முயல்கிறது என்கிறான்.

ரஜஸ்ஸையும் தமஸ்ஸையும் அடக்கி ஸத்வ குணம் மேலோங்க முயலும். ரஜஸ், ஸத்வத்தை அடக்க தமஸ் எழுச்சியுறும்; தமஸ், ஸத்வம் இரண்டையும் அடக்கி ரஜஸ் தலைதூக்கும்.

இவையெல்லாம் ஒருவன் உட்கொள்ளும் உணவைப் பற்றியே யிருக்கும்; ஸத்வ குணம் மிகக் கூடிய உணவையே நாம் அருந்த வேண்டும்; பகவானுக்கு அர்ப்பணம் செய்யா உணவைக் கண்ட கண்ட இடங்களில் புசித்தல் கூடாது. பூண்டு, வெங்காயம் போன்றவை அறவே கூடாது. புளி காரம் அதிகம் கூடாது. நெய் சர்க்கரை இவை ஸத்வ குணத்தை அதிகப்படுத்தும்.

ஸர்வத்வாரேஷு தேஹேऽஸ்மித் ப்ரகாஸ உபஜாயதே |
ஞ்ஞானம் யதா ததா வித்யாத் விவ்ருத்தம் ஸத்வம் இத்யுத || 11

உடலில் உள்ள எல்லாப் புலன்களிலும் அறிவு ஒளிர்வதாயின், ஸத்வ குணம் மேலிட்டிருப்பதை அறியலாம். (அதாவது கண் முதலான புலன்களினால் பொருள்கள் பற்றிய உண்மை அறிவு ஏற்பட்டால், ஸத்வ குணம் மேலிட்டிருப்பதை உணரலாம்.

லோப: ப்ரவ்ருத்திராரம்ப: கர்மணாம் அசம: ஸ்ப்ருஹா |
ரஜஸ் யேதானி ஜாயந்தே விவ்ருத்தே பரதர்ஷப || 12

அர்ஜுன! பேராசை, மிகுந்த முயற்சி, அமைதியின்மை, விஷயப் பற்றுதல் இவை யெல்லாம் ரஜோ குணம் மேலிட்டிருக்கும் போது உண்டாகின்றன. (லோபம் - பொருளின் ஆசையினால் அதை பிறருக்குக் கொடாமை; அசம்—புலன்களுக்கு ஓயாமல் வேலை கொடுத்தல்.)

அப்ரகாசோऽ ப்ரவர்த்திஸ்ச ப்ரமாதோ மோஹ ஏவச |
தமஸ்யேதானி ஜாயந்தே விவ்ருத்தே குரு நந்தன || 13

அர்ஜுன! விவேகமின்மை, முயற்சியின்மை, அஜாக்ரதை, மோஹம் இவைகள் தமோ குணம் மேலிட்டிருந்தால் ஏற்படும் விளைவுகள்.

யதா ஸத்வே ப்ரவ்ருத்தே து ப்ரளயம் யாதி, தேஹப்ருத் |
ததோத்தமவிதாம் லோகாந் அமலாந் ப்ரதிபத்யதே || 14

acharya.org

சரீரம் பெற்றிருக்கும் இவன் ஸத்வ குணம் மேலோங்கியிருக்கும்போது மரணமடைந்தால் ஜ்ஞானவான்களான மஹான்கள் குலத்தில் பிறக்கிறான். (ஆதலால் மற்ற காலங்களில் எப்படியிருந்தாலும், மரணத்தருவாயில் ஸத்வ குணம் மேலோங்கியிருக்கச் செய்ய வேண்டும். பகவந் நாமாக்களைச் சொல்லுதல், அவனையே நினைத்திருத்தல், ஸத் சரித்திரத்தைக் கேட்டல் இப்படியிருக்க வேண்டும். மரண காலத்தில் உடல் பூமியிலிருக்க வேண்டும்; படுக்கையில் இருத்தல் கூடாது; இப்படியிருந்தால் ஸத்வ குணம் மேலிட்டு நற்கதியைப் பெறுவான்).

ரஜஸி ப்ரளயம் கத்வா கர்ம ஸங்கிஷு ஜாயதே |
ததா ப்ரலீநஸ் தமஸி மூடயோநிஷு ஜாயதே ॥ 15

மரணம் அடையும்போது ரஜோ குணம் மேலிட்டிருப்பவன், பயனை விரும்பி செயலில் முனையும் குலத்தில் பிறக்கிறான்; தமோ குணம் மேலிட்டிருக்கும் போது இறப்பவன் மூடர்களுடைய இனத்தில் பிறக்கிறான்.

கர்மண: ஸுக்ருதஸ்யாஹு: ஸாத்விகம் நிர்மலம் பலம் |
ரஜஸஸ்து பலம் துக்கம் அஜ்ஞானம் தமஸ: பலம் ॥ 16

ஒருவன் இறக்கும்போது ஸத்வ குணம் மேலிட்டிருந்தால், பலன்களில் இச்சையில்லாமல் கர்மாக்களைச் செய்யும் மஹான்கள் குலத்தில் பிறந்து, கர்ம யோகம் செய்து படிப்படியாக ஆத்ம நன்மையைப் பெறுகிறான்.

ரஜோ குணம் மேலிட்டிருக்கையில் இறப்பவன் பலனுக்காக வினைகளைப் புரிந்து அதன் பலன்களை அனுபவிக்க மேன் மேலும் பிறவிகள் எடுத்து துன்பத்திலேயே உழல்கிறான்.

தமோ குணம் மேலிட்டிருக்கையில் இறப்பவன் தாழ்ந்த மூடர்கள் குலத்தில் பிறந்து, சரியான அறிவு இல்லாமல் ஆத்ம விநாசத்தையே அடைகிறான்.

ஸத்வாத்ஸஞ்ஜாயதே ஜ்ஞானம் ரஜஸோ லோப யேவ ச |
ப்ரமாத மோஹௌ தமஸோ பவதோऽஜ்ஞானமேவ ச ॥ 17

ஸத்வ குணத்தினால் நல் அறிவு; ரஜஸ்ஸினால்; பேராசை; தமஸ்ஸினால் அஜாக்ரதை, மோஹம், அறிவின்மை இவை உண்டாகின்றன.

acharya.org

நல்லறிவு பெற்று பகவத் பக்தி செய்து ஆத்ம நன்மையை அடைய ஸத்வகுணம் வேண்டும். ஸத்வ குணம் தூய்மையான ஆஹாரத்தைப் புசிப்பதனால் உண்டாகும். சுத்த ஆஹாரம் பகவதாராதனம் போன்ற நற்செயலில் உபயோகப்பட்ட ஆஹாரமேயாகும். ஆகலால் பலனில் இச்சையில்லாமல் நல்ல கர்மாக்களைச் செய்ய வேண்டும்.

ஊர்த்வம் கச்சந்தி ஸத்வஸ்தா மத்யே திஷ்டந்தி ராஜஸா: |
ஜகந்யகுணவ்ருத்திஸ்த்தா அதோ கச்சந்தி தாமஸா: ‖ 18

ஸத்வ குணமுள்ளவர் மேலே ஏறுகிறார்கள். படிப்படியாய் ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுபட மோக்ஷம் அடைவர். ரஜோ குணம் உள்ளவர் சுவர்கம் முதலான பலன்களைக் கருதி கர்மாக்களை செய்து, பல பிறவிகள் எடுத்து இன்ப துன்பங்களில் உழல்கிறார்கள் தமோ குணமுள்ளவர் அறிவில்லாத கீழ்க்குலத்தில் பிறந்து, கெட்ட செயல்களில் சிக்கி கீழ் நோக்கி, மிருகம், பசு, பறவை, மரம், செடிகளாகப் பிறந்து துன்பத்தில் அழுந்துகிறார்கள்.

நாந்யம் குணேப்ய: கர்த்தாரம் யதா த்ரஷ்டாநு பச்யதி |
குணேப்யஸ்ச பரம் வேத்தி மத் பாவம் ஸோ அதிகச்சதி ‖ 19

இப்படி எல்லாச் செயல்களுக்கும் இம் மூன்று குணங்களே காரணம் என்பதை அறிந்து, இவன் உடலைக் காட்டிலும், வேறுபட்ட தத்வம் என்பதை உள்ளபடி தெரிந்து கொண்டவன் என் ஸாம்யத்தை அடைகிறான்.

அறிவுள்ள ஒருவன், எல்லாச் செயல்களுக்கும் ஸத்வ, ரஜஸ் தமோ குணங்களே காரணம்; இவன் காரணமில்லை என்பதை அறிந்தால், அவன் என் ஸாம்யத்தைப் பெறுகிறான். அதாவது மோக்ஷமடைகிறான்.

குணாந் ஏதாந் அதீத்ய த்ரீந் தேஹீ தேஹ ஸமுத்பவாந் |
ஜந்ம ம்ருத்யு ஜராது:கைர் விமுக்தோऽம்ருதமஸ்நுதே ‖ 20

சரீர சம்பந்தம் பெற்ற இவன், உடலுக்குண்டான இம் மூன்று குணங்களையும் கடந்து, பிறப்பு, இறப்பு, பிணி, மூப்புகள் அற்று துன்பங்களிலிருந்து விடுபட்டவனாய், நித்யமான ஆத்மானுபவத்தைப் பெறுகிறான். இதுவே தன் ஸாம்யத்தை அடைகிறான் என்று மூன் சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

அர்ஜுன உவாச : அர்ஜுனன் கூறியது.

கைர்லிங்கை: த்ரீந் குணாந் ஏதாந் அதீதோ பவதி ப்ரபோ |
கிமாசார: கதஞ்சைதாம் ஸ்த்ரீந்குணாந் அதிவர்த்ததே ‖ 21 ‖

acharya.org

ப்ரபோ க்ருஷ்ணா! இந்த முக்குணங்களைக் கடந்தவனின் அடையாளம் யாது? அவன் ஸ்வரூப ஸ்வபாவங்கள் எத்தகையது? இக்குணங்களை அவன் கடப்பது எப்படி? என்பது அர்ஜுனன் கேள்வி.

ஸ்ரீ பகவான் உவாச—கண்ணனின் பதில்.

ப்ரகாசஞ்ச ப்ரவர்த்திஞ்ச மோஹமேவச பாண்டவ |
ந த்வேஷ்டி ஸம்ப்ரவர்த்தாநி ந விவ்ருத்தாநி காங்க்ஷதி ॥ 22 ॥

பாண்டவ! ஸத்வத்தின் பயன் அறிவு; ரஜஸ்ஸின் காரியம் செயல், தமஸ்ஸின் விளைவு விபரீத ஜ்ஞானம், மயக்கம். இவைகள் வந்த போது அதை வெறுப்பதுமில்லை, அதில் களிப்பதுமில்லை. தான் விரும்புவது கிடைக்காவிடில் அதற்கு வருந்துவதுமில்லை.

இவன் தன் ஆத்மானுபவத்திலேயே ஊன்றியிருப்பான்.

உதாஸீனத்வம் ஆஸீனோ குணைர் யோ ந விசால்யதே |
குணா வர்தந்த இத்யேவ யோ௨வதிஷ்ட்டதி நேங்கதே ॥ 23

அவைகளின் அவன் உதாஸீனனாயிருப்பான்; உடலின் குணங்கள் தம் செயல்களைச் செய்து போருகின்றன; தான் ஒன்றும் செய்யவில்லை என்று நினைத்திருப்பான்.

ஸமதுக்க ஸுக: ஸ்வஸ்த்த: ஸமலோஷ்டாச்ம காஞ்சந: |
துல்ய ப்ரிய அப்ரியோ தீரஸ் துல்ய நிந்தாத் மஸ்துதி: ॥ 24
மாந பமாநயோ ஸ்துல்ய; துல்யோ மித்ராரிபக்ஷயோ: |
ஸர்வாரம்ப பரித்யாகி குணாதீதஸ் ஸஉச்யதே ॥ 25

ஆத்ம சிந்தனத்திலேயே நிலை பெற்று, மற்ற இன்ப துன்பங்கள், இஷ்டம், அநிஷ்டம், இகழ்ச்சி, புகழ்ச்சி இவைகளை சமமாகக் கருதுபவன் சரீர ஆத்ம விவேகத்துடன், மண் கல், பொன் இவைகளைச் சமமாக நினைத்திருப்பான்.

இன்னும் இவன் மான அவமானத்தை நிகராகக் கொள்பவன். நண்பனிடமும் பகைவனிடமும் ஒரே பாங்காக இருப்பான்; தன் நலத்திற்கென்று ஒரு செயலையும் இவன் செய்யமாட்டான். இப்படி உள்ளவனே ஸத்வ ரஜஸ் தமஸ்ஸான முக்குணங்களையும் தாண்டியவனாகிறான்.

மாஞ்ச யோ௨வ்யபிசாரேண பக்தியோகேன ஸேவதே |
ஸகுணாந் ஸமதீத்யைதாந் ப்ரஹ்ம பூயாய கல்பதே ॥ 26

acharya.org

வேறொரு இடத்திலும் செலுத்தாத பக்தியுடன் என்னை ஒருவனையே எவன் உபாஸிக்கிறானோ. அவன் முக் குணங்களைக் கடந்த ப்ரஹ்மத்திற்கு ஸமான மான பரிசுத்த ஜீவனை அடைகிறான்.

ப்ரஹ்மணோ ஹி ப்ரதிஷ்ட்டா அஹம் அம்ருதஸ் யாவ்ய யஸ்ய ச |
சாஸ்வதஸ்ய ச தர்மஸ்ய ஸுகஸ்ய ஐகாந்தி கஸ்ய ச ॥ 27

நானே அழியாத பரிசுத்த ஜீவாத்ம அனுபவத்தையும், நிலையான அறத்தின் விளைவான ஐச்வர்த்தையும் பிரஹ்மானுபவமான மோக்ஷத்தையும் கொடுப்பவன். ஆதலால், என் ஒருவனிடமே அநந்யபக்தியை, முக் குணங்களைக் கடந்தவன் செய்கிறான்.

நானே புருஷோத்தமன், எல்லாப் பயன்களையும் வழங்குபவன் வேண்டிற்றெல்லாம் தருபவன், "பலம் அதஉப பத்தே:" என்கிற ஸூத்திரத்தின் பொருளைச் சொல்லி, இந்த அத்யாயத்தைப் பூர்த்தி செய்து கொள்கிறான் கண்ணன்.

ஸ்ரீ ஆளவந்தார் அருளிய கீதா ஸங்க்ரஹம்

குணபந்த விதா தேஷாம் கர்த்ருத்வம் தந்நிவர்த்தநம் |
கதித்ரய ஸ்வமூலத்வம் சதுர்தச உதீர்யதே ॥

ஸத்வ ரஜஸ் தமோ குணங்கள் ஸம்ஸாரத்தை உண்டாக்கும் விதமும், கர்த்ருத்வம் அக் குணங்களுக்கே உள்ளது; ஜீவனுக்கில்லை என்பதும் அக்குணங்களைக் கடக்கும் வழியும், மூன்று வித பலன்களைப் பெறுவதற்கு தானே உபாயம் என்பதும் இந்த பதினான்காம் அத்யாயத்தில் சொல்லப்பட்டது.

ஸ்ரீ ஆளவந்தார் திருவடிகளே சரணம்!

பதினான்காம் அத்யாயம் முற்றிற்று

acharya.org

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் பகவத் கீதை

பதினைந்தாம் அத்தியாயம்

ஸ்ரீ கிருஷ்ண பகவான் முதல் பன்னிரண்டு அத்தியாயங்களில் சொன்னவைகளையே, மறுபடியும் விவரித்து பதின்மூன்றும் அத்தியாயம் முதல் சொல்லி வருகிறான்.

பதின்மூன்றும் அத்தியாயத்தில் சரீரம் ஆத்மா இவைகளின் ஸ்வரூப ஸ்வபாவங்களைக் கூறினான்.

பதினான்காம் அத்தியாயத்தில் சரீரத்திற்கு உண்டான ஸத்வ ரஜஸ் தமோ குணங்களினாலேயே எல்லாச் செயல்களும் நடைபெறுகின்றன; அக்குணங்களே ஜீவனை அவன் சரீரத்தில் கட்டிவைக்கின்றன என்று கூறி, அவைகளைக் கடப்பது எவ்விதம்? அப்படி அதைத் தாண்டினவன் ஸ்வரூப ஸ்வபாவங்கள் என்ன என்பதையும் சொல்லி, ஸர்வ பலன்களையும் கொடுக்கும் புருஷோத்தமனான தன்னிடமே அவன் பக்தி செய்து பரிசுத்த ஆத்மாவை அடைவான் என்றான்.

இனி பதினைந்தாம் அத்தியாயத்தில் க்ஷரம், அக்ஷரம் எனச் சொல்லப்படும் அசித், பத்த ஜீவன், முக்தாத்மா இவைகளைக் காட்டிலும் தானே உயர்ந்தவன்; அவைகளுக்கெல்லாம் தானே ஆத்மாவாய் அவைகள் தனக்குச் சரீரமாயுள்ளவை; தானே எல்லா விதத்திலும் உயர்ந்தவனாகையால் புருஷோத்தமன் என்று கூறி "புருஷோத்தம வித்ய"யை இங்கு உபதேசிக்கிறான்.

ஸ்ரீ பகவான் உவாச - *கண்ணன் கூறியது:—*

ஊர்த்வ மூலம் அதச்சாகம் அஸ்வத்தம் ப்ராஹுர் அவ்யயம்
சந்தாம்ஸி யஸ்ய பர்ணாநி யஸ்தம் வேத ஸ வேதவித் — 1

ஸம்ஸாரத்தை மேலே வேர்கள், கீழே கிளைகள் உள்ள ஓர் அரச மரம் போன்றது என்பர்; வேதங்கள் அதன் இலைகள் இதை அறிபவனே வேதத்தை அறிந்தவனாகிறான்.

acharya.org

நைமித்திக ச்ருஷ்டியில் இவ்வுலகமெல்லாம் மேலே சத்ய லோகத்திலிருக்கும் நான்முக ப்ரஹ்மாவினால் படைக்கப்படுகிறது. ஜகத்திற்கு இந்த ப்ரஹ்மாவே காரணமாயிருப்பதினால், வேர் மேலே உள்ளது என்கிறான். பூமியில் ஸம்ஸாரம் படர்கிறதாகையினால், கீழே கிளைகளும் இலைகளும் ச்ருதியில் சொல்லப்பட்ட காம்ய கர்மாக்களே இந்த மரத்தின் கிளைகள்; அதனால் பிறவியும் ஸம்ஸார பந்தமும் வளர்கிறது; இதை அறிந்தவனே வேதவித்து; வேதத்தை அறிந்தவன்.

அதச் சோர்த்வஞ்ச ப்ரஸ்ருதாஸ் தஸ்ய சாகா:
குணப்ரவ்ருத்தா விஷயப்ரவாளா।
அதச்ச மூலாந் யநுஸந்ததாநி
கர்மாநு பந்தீநி மனுஷ்யலோகே 2

அந்த மரத்தின் கிளைக்ள் ஸத்வ ரஜஸ் தமோ குணங்களால் செழிப்புற்று, அந்த குணங்களால் உண்டாகும் விஷயங்களால் தளிர்விட்டு, கீழும் மேலும் படர்கின்றன.

வினைப்பயனால் ராகத்வேஷமான வேர்கள் கீழே பூமியில் படர்கின்றன.

தேவ மனித பசு பறவைகளான மரத்தின் கிளைகள் அவரவர் கர்மானுகுணமாக சில மேல் நோக்கியும் பிரிந்து போகின்றன. குணங்களால் உண்டாகும் விஷயானுபவம் அக்கிளைகளில் உண்டாகும் தளிர்கள்.

ப்ரஹ்ம லோகத்தில் ஆணிவேர் உடையதாகவும், தேவ மனித லோகங்களில் சல்லிவேர் உடையதாகவும் இந்த மரம் இருக்கிறது. அவைகள் செய்யும் கர்மங்களினால் வேர் ஊன்றி ஸம்ஸாரத்தில் கட்டுப்படுத்தப்படுகிறது.

நரூபமஸ்யேஹ ததோபலப்யதே
நாந்தோ நச ஆதிர் நச ஸம்ப்ரதிஷ்டா
அச்வத்தமேநம் ஸுவிரூட மூலம்
அஸங்கசஸ்த்ரேண த்ருடேந சித்வா 3
தத: பதம் தத் பரிமார்கிதவ்யம்
யஸ்மிந்கதா ந நிவர்தந்திபூய:
தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே
யத: ப்ரவருத்தி: ப்ரஸ்ருதா புராணி 4

acharya.org

இந்த ஸம்ஸாரமான மரத்தின் வடிவம் அதன் முடிவு, காரணம் அதன் ஆதாரம் பற்றி இவ்வுலகிலுள்ளவர் அறிகிறதில்லை. ஒன்ருகவும் பலவாகவும் முளைத்திருக்கும் வேர்களுடைய இம் மரத்தை உறுதியான விஷயப் பற்றுகள் இல்லாமை என்கிற கத்தி யினுல் வெட்டித் தள்ளவேண்டும்.

விஷயப் பற்று அற்றதினுல் கிடைக்கக் கூடிய மறுபிறவியில்லா மோக்ஷத்தை நாடவேண்டும்; இவற்றுக்கு ஆதி காரணனுன பரம புருஷனையே சரணம் பற்ற வேண்டும். எந்த பகவானுல் இந்த விஷயப்பற்று உண்டாகிறதோ, அவனையே பற்றிக்கொண்டு, விஷயப்பற்றைப் போக்கிக் கொள்ளவேண்டும்.

சம்சாரமான மரத்திற்கு நான்முக ப்ரஹ்மா நைமித்திக காரணம். ஆகையால் சத்ய லோகத்தில் வேர் ஊன்றியிருக்கிறது எனச் சொல்லப்பட்டது; அங்கிருந்து கீழ்நோக்கி வந்து தேவ மனித உலகில், தேவ மனித பசு பக்ஷிகளாய், பல கிளைகளைக் கொண்டு, விஷயங்களாகவும், புண்ய பாப கர்மங்களாகவும் விழுதுகள் விட்டு பூமியில் ஊன்றி வேர் பற்றி, மறுபடியும் மேலே வளர்கிறது. இப்படி மேலும் கீழுமாகப் பல கிளைகள் உண்டா கின்றன.

இப்படிப்பட்ட மரத்தின் வடிவத்தையோ அது உண்டாகும் காரணத்தையோ, அதன் ஆதாரத்தையோ, அது எப்படி அழிவை அடைகிறது என்பதையோ இவ்வுலகில் உள்ளவர்கள் அறிவ தில்லை. நான் மனிதன், இன்னுரின் புதல்வன், இவை என் சொத்து, நான் இவைகளை அனுபவிக்கிறேன் என்று அறிகிருர் களே ஒழிய, இந்த சரீரம் ப்ரக்ருதியினுல உண்டானது, ஸத்வ ரஜஸ் தமஸ்ஸான முக்குணங்களினுல் ஜீவன் இதில் கட்டுப்படுத்தப் பட்டிருக்கிருன். இதற்குத் காரணம் ஆத்மாவல்லாத சரீரத்தில், ஆத்ம புத்தியும், அஜ்ஞானமும்தான் என்பதை அவன் அறிகிற தில்லை. இத்தகைய அஜ்ஞானமும் விபரீதஜ்ஞானமுமே ஸம்ஸாரத் திற்கு ஆதாரம்.

இப்படி பல வேர்களினுல் கட்டுண்டிருக்கும் ஸம்ஸாரமான மரத்தை, விஷயங்களில் ஆசையின்மையாகிற வைராக்கியம் என்கிற கத்தியினுல் வெட்டித் தள்ளவேண்டும். "அற்றது பற்று எனில் உற்றது வீடு" என்கிருர் நம்மாழ்வார்.

வெகு காலமாயுள்ள விஷயத்தின் ஆசை எப்படி விலகும்?

acharya.org

எந்த பகவானுலே, இந்த விஷயப்பற்று நமக்கு உண்டாக்கப்பட்டிருக்கிறதோ அந்த பரம புருஷனையே சரணம் பற்றினுல், இந்த விஷயப்பற்று தானே விலகிவிடும். இதை "தைவீஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா மாமேவ யே ப்ரபத்யந்தே மாயா மேதாம் தரந்திதே" என்று கண்ணன் 7 அத். 14ம் சுலோகத்தில் கூறியுள்ளான்.

நிர்மாந மோஹா : ஜிதஸங்க தோஷா :
அத்யாத்ம நித்யா : விநிவ்ருத்த காமா :
த்வந்த்வைர் விமுக்தா : ஸுகதுக்க ஸமஜ்ஞை :
கச்சந்தியமூடா : பதம் அவ்யயம் தத்—5

அஹங்கார மமகாரமும் அஜ்ஞானமும் நீங்கினவரே விஷயப்பற்று அற்றவர்; அவர்களே, பரமாத்மஜ்ஞான நிஷ்டர்; ஆசையை வென்றவர், இன்ப துன்பங்களைக் கடந்தவர், தெளிவான ஜ்ஞானமுள்ளவர்; இப்படிப்பட்டவர்கள் பரிசுத்த ஜீவாத்ம தர்சனம் பெறுகிருர்கள்.

மேலே கூறியபடி என்னைச் சரணம் பற்றியவர், உடலே ஆத்மா என்கிற அஜ்ஞானம் நீங்கி, விஷயங்களில் ஆசையற்று ஆத்மஜ்ஞானம் பெற்று, அந்த ஜ்ஞானத்திலேயே நிலைத்திருப்பர். மற்ற எதிலும் அவர்களுக்கு ஆசைபிறாது, விஷயம் அருகிலிருந்தாலும் அதை அனுபவிக்க வேண்டுமென்ற இச்சையோ, அதில் தொடர்போ ஏற்படாது; இப்படியிருப்பதே புலனடக்கமாகும். அவர்கள் சுகம், துக்கம் இரண்டையும் சமமாகக் கருதி இருப்பர். என்னைச் சரணம் பற்றினவருக்கு, இந்த ஸ்வபாவமெல்லாம் தன்னடைவே உண்டாகும்; இவை ஆத்ம தரிசனத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கும்.

நதத் பாஸயதே ஸூர்யோ ந சசாங்கோ நபாவக :
யத் கத்வா ந நிவர்த்தந்தே தத்தாம பரமம் மம—6

அந்த ஜ்யோதியான ஜீவனை, சூர்யனே சந்திரனே, அக்னியோ எதுவும் பிரகாசப் படுத்தாது. எதை அடைந்தால் திரும்பி வருவதில்லையோ, அந்த ஜ்யோதியான பரிசுத்த ஆத்மா என் அதீனம்.

சூரிய ஒளியோ, தீபத்தின் ஒளியோ புற இருளைப் போக்குமே ஒழிய, ஒரு வஸ்துவை உள்ளபடி அறிவது என்பது ஜீவாத்மாவின் ஞான ஒளியினுல்தான். ஒரு குருடன் தன் கையினுல் தடவி, ஒரு தூணைத் தூண் என்று தன் ஞான ஒளியினுல் அறிகிருன்.

acharya.org

இப்படி ஞான ஸ்வரூபமாகவும், ஞானத்தை குணமாகவும் உடையவன் ஜீவன்.

பகவானைச்சரணம் பற்றுகிறவன் ப்ரக்ருதியினாலான முக்குணங்களைக் கடந்து ஜ்ஞான யோகம் செய்து, பரிசுத்த ஜீவனை அடைகிறான் அந்த ஜீவாத்ம அனுபவத்திலிருந்து திரும்புவதில்லை; இப்படிப்பட்ட கைவல்யனும் எனக்கு சேஷன், என் அதீனம், அதாவது என் ஆணைக்குட்பட்டவன்.

மமை வாம்சோ ஜீவலோகே ஜீவபூத: ஸநாதன:
மந: ஷஷ்ட்டாநீ இந்த்ரியாணி ப்ரக்ருதிஸ்த்தாநி கர்ஷதி—7

எல்லா ஜீவன்களிலும் என் அம்சம் இருக்கிறது, பத்த ஜீவன் ப்ரக்ருதியினாலான, மனத்துடன் சேர்ந்து, ஆறு புலன்களாலும் இழுக்கபபடுகிறான்.

என்னால் கொடுக்கப்பட்ட ஜ்ஞானத்தை உடைய ஜீவாத்மாக்கள், அநாதியான வினைத்தொடரால் மனத்துடன் சேர்ந்து ஐம் புலன்களால் ஈர்க்கப்பெற்று ஞானத்தை இழந்து, ஸம்ஸாரத்தில் உழல்கிறான்.

சரீரம் யத் அவாப்நோதி யச்சாபி உத்க்ராமத் ஈச்வர:
க்ருஹீத்வைதாநி ஸம்யாதி வாயுர் கந்தாநிவாசயாத்—8

'சரீரத்தின் எஜமானன் ஜீவன், ஒரு சரீரத்தை அடைந்து, சில காலம் அதில் வசித்து, பிறகு அதை விட்டு வெளிச் செல்லுகிறான்.

ஒரு மலர்த்தோட்டத்தில் வீசும் காற்று, மலர்களின் மணத்தை, தன்னுடன் இழுத்துச் செல்வது போல, ஜீவன் சில காலம் தானிருக்கும் உடலை விட்டு ஏகும் போது, தன்னுடன் அந்த உடலின் நுண்ணிய புலன்களை வாசனையோடு (பழக்க வழக்கங்களை) எடுத்துச் செல்கிறான். மறுபிறவியில் அந்த நுண்புலனின் வாஸனையுடனே பிறக்கிறான்; குழந்தை பிறந்த உடனே தேனை அதன் நாக்கில் தடவினால், ருசியுடன் நக்குகிறது; விளக்கெண்ணையைத் தடவினால் அழுகிறது. இது பூர்வஜன்ம வாசனைக்கு எடுத்துக் காட்டு)

ச்ரோத்ரம் சக்ஷு: ஸ்பர்சநஞ்ச ரஸனம் க்ராணம் ஏவச
அதிஷ்டாய மனச்சாயம் விஷயாந் உபஸேவதே —9

உத்க்ராமந்தம் ஸ்த்திதம் வாபி புஞ்ஜாநம் வா குணாந்விதம்
விமூடோ நாநுபச்யந்தி பச்யந்தி ஜ்ஞான சக்ஷுஷா — 10

acharya.org

இந்த ஜீவன், மனம், கண், காது, மூக்கு, நா, தோல், முதலிய இந்த்ரியங்களை ஏவி. அவைகளின் மூலம் விஷயங்களில் தொடர்பு கொண்டு, அவைகளை அனுபவிக்கிறான்.

இச் சரீரம் ஸத்வ ரஜஸ் தமோ குணங்களை உடையது; இவைகளினால் உண்டாகும் விஷயங்களை அனுபவிக்கிறவன் ஜீவன். இப்படி சில காலம் அனுபவித்திருந்து, அந்த உடலை விட்டு வெளியேறுகிறான். இதை மூடர்கள் அறிகிறதில்லை. ஜ்ஞானிகளே அறிவர்.

யதந்தோ யோகினச்சைநம் பச்யத்த்யஆத்மந்யஅவஸ்திதம்.
யதந்தோZப்ய க்ருதாத்மாஞே நைனம் பச்யந்த்ய சேதஸ: —11

பரிசுத்த மனத்தின் முயற்சியினால் யோகிகள் சரீரத்தில் உறையும் ஜீவனை அறிகிறார்கள். அப்படி அல்லாதார், தங்கள் முயற்சியினால் ஜீவனை அறிய முடிகிறதில்லை.

யத் ஆதித்ய கதம் தேஜோ ஜகத்பாஸயதேZகிலம்
யச் சந்த்ரமஸி யச் சாக்னௌ தத் தேஜோ வித்தி மாமகம் — 12

காம் ஆவிஸ்ய ச பூதானி தாரயாம் அஹம் ஒஜஸா
புஷ்ணாமிசௌஷதீ : ஸர்வா ; ஸோமோ பூத்வா ரஸாத்மக : — 13

உலகில் ஒளிரும் சூரியன் சந்திரன் அக்னி இவைகளின் ஒளியெல்லாம் என்னிடமிருந்தே உண்டானவை; ஒளிரும் சக்தி இவைகளுக்கு என்னால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவாய்.

நான் பூமியிலிருந்து எல்லா ஜீவ ராசிகளையும் தாங்குகிறேன்; சந்திரனிடம் அம்ருதமயமான ரஸமாக யிருந்து, எல்லாச் செடி கொடிகளையும் வளரச் செய்கிறேன்.

அஹம் வைச்வானரோ பூத்வா பிராணினும் தேஹம் ஆச்ரித :
பிராண அபான ஸமாயுக்த : பசாம் யந்நம் சதுர்விதம் —14

எல்லா ஜீவராசிகளின் வயிற்றில் நான் ஜாடராக்னியாக யிருந்து, பிராண, அபான வாயுக்களுடன் கூடி, ஜீவன்கள் உட்கொள்ளும் நான்கு வித உணவை ஜீர்ணிக்கச் செய்கிறேன். (கடிப்பது, குடிப்பது, நக்குவது, உறிஞ்சுவது, என்ற நான்கு வித உணவு)

இவைகளை ஜீரணிக்கும் அக்னி நானே. பிராணவாயு உட்புகும் காற்று- அபானவாயு,- வெளியேறும் காற்று ; மேல் நோக்கி வரும்

acharya.org

பிராணவாயுவும், கீழ் நோக்கிச் செல்லும் அபான வாயுவும், ஓரிடத்தில் சேர்ந்து ஜாடராக்னியாகி அன்னத்தைப் பக்குவம் செய்கிறது; ஜீரணிக்கிறது.

ஸர்வஸ்யச அஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ
மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞானம் அபோஹநஞ்ச
வேதைஸ்ச ஸர்வை: அஹமேவ வேத்ய:
வேதாந்த க்ருத் வேத விதேவ சாஹம் —15

எல்லோருடைய உள்ளத்தில் இருப்பவன் நான். ஒவ்வொரு ஜீவனின் நினைவு, மறதி, அறிவு ஆகியவை என் அதீனம். வேதங்களால் அறியப்படுபவனும் நானே. வேதங்களை நன்றாக அறிந்தவனும் நானே! அவைகளில சொல்லப்படும் பலன்களைக் கொடுப்பவனும் நான்தான்; (புலன்களினாலும், போகம், சாஸ்திரம் இவைகளைக் கொண்டும், ஏற்படும் ஞானமே அறிவு: முன் நடந்தவைகளைப் பற்றிய அறிவு நினைவு; அறிவு இருந்தும் அது மனத்தில் தோன்றாமை மறதி).

இதற்கு மேல் மூன்று சுலோகங்களினால் புருஷோத்தம வித்யை — புருஷோத்தமனான பகவானின் மேன்மையைச் சொல்லுகிறான்.

த்வாவிமௌ புருஷௌ லோகே க்ஷராக்ஷர ஏவச —
க்ஷரஸர்வாணி பூதாநி கூடஸ்தோ அக்ஷர உச்யதே — 16

உத்தம புருஷஸ் த்வந்ய: பரமாத் மேத்யு தாஹ்ருத:
யோ லோகத்ரயம் ஆவிச்ய பிபர்த்யவ்யய ஈச்வர — 17

யஸ்மாத் க்ஷரமதீதோZஹம் அக்ஷராதபிசஉத்தம:
அதோஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம :— 18

லோகத்தில் க்ஷரன் என்றும் அக்ஷரன் என்றும் இருவகை புருஷர்கள் (ஜீவாத்மாக்கள்) இருக்கிறார்கள். ஸம்ஸார பந்தத்திலிருப்பவன் க்ஷரன் என்றும், ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுபட்ட முக்தன் அக்ஷரன் என்றும் சொல்லப்படுகிறான்.

இவ்விரு ஜீவாத்மாக்களைக் காட்டிலும் வேறுபட்டவனாய் உயர்ந்தவனாயுள்ள புருஷன் புருஷோத்தமன் எனப்படுபவன். இவன் மாறுதல் இல்லாதவன், நித்யன்; அசித்து மற்றும் பத்தன், முக்தன் நித்யன் என மூவகை ஆத்மாக்களிலும் நுழைந்து அவைகளை நியமித்து (ஏவி), தரித்துப் போருகிறவன்.

பத்த முக்த நித்யர்களைக் காட்டிலும் நான் மேன்பட்டவனானகையினால், வேதங்களும், ஸ்மிருதிகளும் என்னை புருஷோத்தமன் என்று கொண்டாடுகின்றன என்கிறான் கண்ணன்.

acharya.org

பகவான் நாராயணன் ஒருவனுக்கே புருஷோத்தமன் என்கிற திருநாமம் உண்டு. புருஷோத்தமனுன கண்ணனே இந்த மூன்று சுலோகத்தில் புருஷோத்தமன் என்கிற திருநாமத்திற்குப் பொருள் கூறியிருக்கிறுன்.

புருஷேப்யோ உத்தம ; புருஷாணும் உத்தம; புருஷேஷு உத்தம: என்று மூன்று வகையில் பொருள் கூறலாம்.

ப்ரஹ்மா முதல் ஈ எறும்பு வரையில் உள்ள உயிர்கள் க்ஷரம் எனப்படும். ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுபட்டு மோக்ஷம் அடைந்த முக்தர்கள் அக்ஷரம் எனப்படுவர். இவ்விருவகை ஆத்மாக்களைக் காட்டிலும் வேறுபட்டவனுய் விளங்குகிறுன் பகவான்; இவைகளில் பிரவேசித்து, இவைகளை தரித்து, நியமித்து போருகிற வன் பகவான்; ஆதலால் புருஷோத்தமன் எனப்படுகிறுன்.

புருஷ: — என்றுல் அறிவுடையவன்; அறிவில்லாத அசித்தைக் காட்டிலும் வேறுபட்டவன என்பதும் இதனுல் தேறுகிறது.

உத்புருஷ: சரீரம் பெற்றிருக்கும் பத்த ஜீவனைக் காட்டிலும் மேற்பட்டவன்.

உத்தரபுருஷ: சிறிது காலம் ஸம்ஸாரத்திலிருந்து பகவானின் அருளினுலே ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுபட்டு மோக்ஷமடைந்த முக்தாத்மாவைக் காட்டிலும் மேப்பட்டவன்.

உத்தம புருஷ : ஒரு நாளும் ஸம்ஸார ஸம்பந்தமேயில்லாத நித்ய சூரிகளைக் காட்டிலும் உயர்ந்தவன்.

புருஷோத்தம : அறிவில்லாத அசித்து, அறிவுள்ள பத்த ஜீவன், முக்தாதமா, நித்யசூரிகள் இவர்கள் எல்லோரைக் காட்டிலும் வேறுபட்டு சிறப்புடையவனுய் விளங்கிக் கொண்டிருக்கும் பகவான் ஆதலால் புருஷோத்தமன்.

புரு—கரோதீதி— என்பது புருஷோத்தம பதத்திற்கு தாது (Root word) வேண்டிற்றெல்லாம் கொடுப்பவன் பகவான் என்பது இதிலிருந்து கிடைக்கும் பொருள் "ஸகல பல ப்ரதாதா" ஸர்வேச்வரன். வேண்டிற்றெல்லாம் தரும் கற்பகம் "சதுர்நாம் புருஷார்த்தாணும், தாதா புருஷோத்தம ; ஹரி: தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்கிற நான்கு புருஷார்த்தங்களைத் தருபவன்; ஆதலால் புருஷோத்தமன் எனப்படுகிறுன். பகவான் யார் யார் எதை

acharya.org

விரும்பி அவனைப் பற்றுகிறார்களோ, அதை யெல்லாம் வெகுவாக வழங்குபவன்.

இதை ஸ்ரீ ராமாவதாரத்தில் நன்கு காணலாம். ரிஷிகளுக்கு தர்மத்தையும், விபீஷணனுக்கு அர்த்தத்தையும், (ராஜ்யத்தையும்), சுக்ரீவனுக்கு காமத்தையும், ஜடாயு, சரபங்கர், சபரி, வாலி இவர்களுக்கு மோக்ஷத்தையும், அருளியிருக்கிறான். தமஸ: பரமோ தாதா என்று அவனை மண்டோதரி கொண்டாடிப் பேசியிருக்கிறாள். இந்த நான்கு புருஷார்த்தங்களைத் தவிர, கைவல்யம் (தன் ஆத்மாவையே தான் அனுபவித்திருப்பது) என்ற ஒருபலன் இருக்கிறது; தன்னைத் தானே பார்த்திருப்பதான அந்தப் பலனை எனக்குத் தந்தாய்'' என்கிறாள் மண்டோதரி.

இப்படி பகவானை புருஷோத்தமன் என்று தெரிந்து கொள்பவர் பெறும் பேற்றை மேலே சொல்லுகிறான்.

யோ மாமேவமஸம்மூடோ ஜாநாதி புருஷோத்தமம்
ஸ ஸர்வவித் பஜதி மாம் ஸர்வபாவேந பாரத — 19

அர்ஜுனா! புருஷோத்தமனான என்னை எவன் இவ்வாறு தெளிய அறிகிறானோ அவன் என்னிடம் எல்லாப்படியாலும் பக்தி செய்தவனாகிறான்.

மேலே கூறியபடி மற்ற எல்லோரைக் காட்டிலும் வேறுபட்டவனாய், மேன்பட்டடனாய், அவரவர் வேண்டிய பலனைக் கொடுக்கும் சிறப்புடையவனாய், எவன் என்னை அறிகிறானோ அவன் என்னை எல்லாப்படியாலும் ஆராதித்தவனாகிறான். சிறந்த ஜ்ஞானிக்கு என்னிடம் அன்பு, மிகுந்திருக்கும். எனக்கும் அவனிடம் அன்பு உண்டு. அவனுக்கு மறுபிறவியில்லை மோக்ஷம் அடைகிறான்.

இதி குஹ்யதமம் சாஸ்த்ரம் இதம் உக்தம் மயா அநக
ஏதத் புத்வா புத்திமாத் ஸ்யாத் க்ருதக்ருத்யச்ச பாரத — 20

இவ்விதம் நானே புருஷோத்தமன் என்கிற மிக ரஹஸ்யமான உயர்ந்த இந்த சாஸ்திரத்தை, குற்றமற்ற உனக்கு நான் உரைத்தேன்; இதை அறிந்தவன் என்னை அடைய விரும்பி, அதற்கேற்ப அறிவைப் பெற்று, அதற்குண்டானவைகளை யெல்லாம் செய்தவனாவான்.

பகவத்கீதை முழுதுமே சாஸ்திரம் என்பதனால், இது மிகவும் சிறப்புடைய சாஸ்த்ரம் எனப்படுகிறது ஏனெனில் இது வேதாந்த

acharya.org

சாரம். பகவானை புருஷோத்தமன் என்று அறிபவனே ஜ்ஞானியா கிறான். இந்த புருஷோத்தம ஞானமே, அவனை அடைய ஆசையைத் தூண்டி, அதற்காகச் செய்ய வேண்டியவைகளை அறிந்து செய்தவ னாகிறான்.

குஹ்யதமம் — மிக ரஹஸ்யமானது என்பதினால் மறைக்கத் தகுந் தது. தகுதியில்லாதவருக்குச் சொல்லக் கூடாது. அநக பாரத என்ப தினால் நீ தோஷமற்றவன், குலப்பிறப்பினாலும் மேன்பட்டவன்; இதைக் கேட்கத்தகுதியுள்ளவன் என்பது சொல்லப்படுகிறது.

மயா — என்றால் — என்பதினால் தத்வத்தை உள்ளபடி சொல்ல ஜ்ஞான சக்திகள் பெற்ற என்னால். உனக்கு — இதை அறியத் தகுந்தவனாயும், என் நன்பனாயுமுள்ள உனக்கு. புத்திமான் :— ''தத் ஜ்ஞானம், தத : அன்யத் உக்தம், அஜ்ஞானம்'' பரமாத்மாவைப பற்றிய அறிவே ஜ்ஞானம், மற்றவையெல்லாம் அஜ்ஞானம், (அறி வின்மையே) என்று சொல்லப்பட்டது. இதில் சொல்லப்பட்ட புருஷோத்தம வித்யையை, அறிவதே ஜ்ஞானமாகும். மற்றவை யெல்லாம் செருப்புக் குத்த கற்றது போல அற்ப ஜ்ஞானம் என்பர் பெரியோர்; இந்த புருஷோத்தமன் என்கிற திருநாமத்தின் பொருளை உள்ளபடி அறிந்தால், அது மோக்ஷத்தில் இச்சையை உண்டாக்கி அதற்கான செயலைச் செய்து பகவானையே அடைகிறான்.

ஸ்ரீ ஆளவந்தார் அருளிச் செய்த கீதார்த்த ஸங்க்ரஹம்

அசின்மிச்ராத் விசுத்தச்ச சேதநாத் புருஷோத்தம
வ்யாபநாத் பரணாத் ஸ்வாம்யாத் அந்ய பஞ்சசோதித :

எங்கும் வ்யாபித்து தரித்து, நியமித்து ஸ்வாமியாக இருத்தலால் பரமாத்மா, மற்றும் பத்தன், முக்தன் ஆகிய ஜீவாத்மாக்களைக் காட் டிலும் சிறந்தவன், அவனே புருஷோத்தமன் என்பது இந்த பதினைந்தாம் அத்யாயத்தில் சொல்லப்பட்டது.

ஸ்ரீ ஆளவந்தார் திருவடிகளே சரணம் !
பதினைந்தாம் அத்யாயம் முற்றிற்று.

acharya.org

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

ஸ்ரீமத் பகவத் கீதை

பதினாரும் அத்யாயம்

ஸ்ரீ பகவான் உவாச — கண்ணன் கூறியது.

அபயம் ஸத்வஸம்சுத்திர் ஞானயோக வ்யவஸ்திதி : |
தானம் தமஸ்ச யஜ்ஞஸ்ச ஸ்வாத்யாயஸ்தப ஆர்ஜவம் || 1

அஹிம்ஸா ஸத்யமக்ரோதஸ் த்யாக: சாந்திரபைசுனம் |
தயா பூதேஷ்வ லோலுப்த்வம் மார்தவம் ஹ்ரீரசாபலம் || 2

தேஜ: க்ஷமா த்ருதி: சௌசமத்ரோஹோ நாதிமானிதா |
பவந்தி ஸம்பதம் தைவீமபிஜாதஸ்ய பாரத || 3

அஞ்சாமை, மனத்தூய்மை, ஜ்ஞானத்திலும் யோகத்திலும் நிலைத்திருத்தல், ஈகை, ஸத் பாத்திரத்தில் புண்ய காலத்தில் தானம் செய்தல், புலனடக்குதல், யாகம், வேதம் ஓதுதல், தபஸ், நேர்மை:- பிறருக்குத் தீங்கிழையாமை, உண்மையே பேசுதல், கோபத்தை அடக்குதல், துறவு, அமைதி, கோள் சொல்லாமை, எல்லா உயிர்களிடத்தும் இரக்கம், பிறர் பொருளை விரும்பாமை, இனிமையாகப் பேசுதல், நாணம், மனம் சலியாமை;— தைரியம், பொறுமை, மனவுறுதி, தூய்மை, வஞ்சகமில்லாமை, செருக்கின்மை, இவைகள் எல்லாம் தெய்வ சம்பத்துடன், பிறந்தவனுக்கு இயல்பாக உள்ள குணங்கள்.

தம்போ தர்போ அதிமானஸ்ச க்ரோத : பாருஷ்ய மேவச |
அஜ்ஞானம் சாபிஜாதஸ்ய பார்த்த ஸம்பத மாஸுரீம் || 4

பார்த்தா! பெருமைக்காக, தர்மத்தைச் செய்தல், இறுமாப்பும், தற்புகழ்ச்சியும், கோபமும், கடுமை ஸ்வபாவமும், அஜ்ஞானமும் அசுரசம்பத்தை உடையவனாய்ப் பிறந்தவனுக்கு இயல்பாக உண்டு.

தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாய ஆஸுரீ மதா |
மா சுச : ஸம்பதம் தைவீம் அபிஜாதோஸி பாண்டவ || 5

தெய்வீக சம்பத்து மோக்ஷம் தரும். அசுர சம்பத்து ஸம்ஸார பந்தத்தையே கொடுக்கும் என்று கருதப்படுகிறது; இதைக்

acharya.org

கேட்ட அர்ஜுனன், தான் தெய்வீக சம்பத்து படைத்தவனு, அசுர சம்பத்துடையவனு என்று கலங்க, 'அர்ஜுன ! கலங்காதே. நீ தெய்வீக சம்பத்து வாய்ந்தே பிறந்திருக்கிறுய்'' என்கிறுன் கண்ணன்.

த்வெள பூதஸர்கெள லோகேऽஸ்மின் தைவ ஆஸுர ஏவச ।
தைவோ விஸ்தரச: ப்ரோக்த ஆஸுரம் பார்த்த மே ச்ருணு ॥ 6

அர்ஜுன! தெய்வீகம் என்றும் ஆசுரம் என்றும் இருவகை உயிர்ப் பிறப்புகள் இவ்வுலகில் இருக்கின்றன. தெய்வீக சம்பத்துடையவனுடைய குணங்கள் விரிவாகச் சொல்லப்பட்டது. இனி அசுர இயல்பைச் சொல்லுகிறேன் கேள்

ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச ஜனு ந விதுராஸுரா: ।
நசௌசம் நாபி சாசாரோ ந ஸத்யம் தேஷு வித்யதே ॥ 7

அசுர ஸ்வபாவமுடையவர் செய்யத்தக்க நற் செயல்களையும், தகாத தீயச் செயல்களையும் அறியார். அவர்களிடம் தூய்மையும் நல்லொழுக்கமும், உண்மையும் இராது.

அஸத்யம் அப்ரதிஷ்டம் தே ஜகதாஹுரநீச்வரம் ।
அபரஸ்பர ஸம்பூதம் கிமந்யத் காமஹைதுகம் ॥ 8

அசுர ஸ்வபாவமுள்ளவர், இவ்வுலகம் ஸத்யம் அன்று, அது பகவானை ஆதாரமாக உடையது அல்ல, தெய்வமேயில்லை என்றும், ஸ்திரீ புருஷர் சேர்க்கையினுலேயே, காமத்தையே காரணமாக உடையவை என்றும் கூறுவர்.

ஏதாம் த்ருஷ்டிமவஷ்டப்ய நஷ்டாத்மனோऽல்ப புத்தய: ।
ப்ரபவந்த்யுக்ர கர்மாண: க்ஷயாய ஜகதோऽஹிதா: ॥ 9

அற்ப புத்தியுடையவரான இவர்கள் ஆத்ம நஷ்டமடைந்தவர்களாய், கொடுஞ்செயலைப் புரிந்து உலகத்திற்கு எதிரிகளாயிருந்து, ஜகத்தின் அழிவுக்கென்றே தோன்றியுள்ளனர்.

இவர்கள் அதர்மத்தையே அதிகமாகச் செய்து, தங்களை நாசம் செய்துகொண்டு உலக விநாசத்தையும் உண்டாக்குகின்றனர்.

காமமாச்ரித்ய துஷ்பூரம் தம்பமானமதான்விதா: ।
மோஹாத்க்ருஹீத்வாऽஸத்க்ராஹான் ப்ரவர்த்தந்தே
சுசிவ்ரதா: ॥ 10

பூர்த்தி பண்ண முடியாத பேராசையைப் பெற்று, மதிமயங்கி, கெட்ட எண்ணங்களையே உடையவராய் தீய செயலில் ஈடுபட்டு கொடுமையில் இழிகின்றனர், இந்த அசுர தகைமையுடையவர்.

acharya.org

சிந்தாமபரிமேயாஞ்ச ப்ரளயாந்தாமுபாச்ரிதா: ।
காமோபபோகபரமா : ஏதாவதிதி நிச்சிதா : ॥ 11

ஆசாபாச சதைர்பத்தா : காமக்ரோத பராயணா : ।
ஈஹந்தே காமபோகார்த்த மன்யாயேனார்த்த ஸஞ்சயான் ॥ 12

இறக்கும் வரையில் அளவு கடந்த கவலையை உடையவராய், காமநுகர்ச்சியே அனைத்திலும் மேலானதாகக் கருதி, அதற்கு மேற்பட்டது ஒன்றுமில்லை என்று தீர்மானித்திருப்பர்.

பயனில் ஆசை என்னும் கயிற்றினால் கட்டுண்டு காமக்ரோதத்திற்கு, வசப்பட்டு, அவைகளை அனுபவிக்க வழியல்லா வழியில் பணம் தேட முயலுகின்றனர்.

இதமத்ய மயா லப்தமிமம் ப்ராப்ஸ்யே மனோரதம் ।
இதமஸ்தீதமபி மே பவிஷ்யதி புனர்தனம்— ॥ 13

அஸௌ மயா ஹத : சத்ருர்ஹனிஷ்யே சாபரானபி ।
ஈச்வரோஹ மஹம் போகீ ஸித்தோऽஹம் பலவான் ஸுகீ ॥ 14

ஆட்யோऽபிஜன வானஸ்மி கோऽன்யோऽஸ்தி ஸத்ருசோ மயா ।
யக்ஷ்யே தாஸ்யாமி மோதிஷ்ய இத்யஜ்ஞான விமோஹிதா : ॥ 15

இன்று இது என்னால் அடையப்பட்டது; இன்னும் இந்த விருப்பங்களை நான் பெறுவேன்; இப்போது எனக்கு இவ்வளவு பணமிருக்கிறது; மேலும் பல செல்வம் எனக்கு வந்து சேரும். என்னுடைய அப்பகைவன் கொல்லப்பட்டான்; மற்ற என் பகைவர்களையெல்லாம் நான் கொன்றுவிடுவேன்; எல்லோரையும் ஆளுபவன் நான்; நானே சித்தி பெற்றவன், வலிமையுடையவன் இன்பத்தை அனுபவிப்பவனும் நானே.

நான் செல்வம் படைத்தவன்; உயர் குலத்தவன்; எனக்கு நிகர் வேறு எவருமில்லை; நான் யாகம் செய்வேன், தானம் கொடுப்பேன், மகிழ்ச்சியுறுவேன் என்று அறியாமையில் மயங்கி கிடப்பர் அசுர தன்மையர்.

அனேக சித்த விப்ராந்தா மோஹஜால ஸமாவ்ருதா: ।
ப்ரஸக்தா: காமபோகேஷு பதந்தி நரகே அசுசௌ ॥ 16

ஆத்ம ஸம்பாவிதா: ஸ்தப்தா தனமான மதான்விதா: ।
யஜந்தே நாம யஜ்ஞைஸ்தே தம்பேன அவிதி பூர்வகம் ॥ 17

அஹங்காரம் பலம் தர்பம் காமம் க்ரோதஞ்ச ஸம்ச்ரிதா: ।
மாம் ஆத்ம பரதேஹேஷு ப்ரத்விஷந்தோப்யஸூயகா: ॥ 18

acharya.org

அசுர ஸ்வபாவமுள்ளவர், இன்னும் பல எண்ணங்களால் குழப்பமடைந்து, மோகவலையில் சிக்குண்டு, காம போகங்களில் பற்றுடையவர்களாய் பாழ்நரகில் விழுந்து கெட்டுப் போகின்றனர்.

தற்புகழ்ச்சியுடையவர், வணக்கமேயில்லாதவர், செல்வம் வித்யை, குலம் இவைகளினால் செருக்குப்பெற்றவர், தார்மிகர் என்று தங்களைச் சொல்லிக் கொண்டு, சாஸ்திர முறையைக் கைவிட்டு வீணாகும் யாகம் செய்பவர்.

அஹங்காரம், வலிமை, இறுமாப்பு, காமம் க்ரோதம் இவை களையுடையவர்கள் தங்கள் உடலிலும் மற்றவர் உடலிலும் உள்ள ஸர்வேச்வரனான என்னை வெறுத்து அவமதிக்கின்றனர்.

கடவுளில்லை, அதிர்ஷ்டம் என்பதில்லை; எல்லாம் தன் திறமையினால் செய்வதாகவும் தான் எதையும் செய்ய வல்லவன் என்றும் சொல்லிக்கொண்டு, இன்பவேட்கையில் ஈடுபட்டிருப்பர் ஒரு நாள் மரணம் வந்து பாழான நரகத்தை அடைவர்.

தானஹம் த்விஷத: க்ரூரான் ஸம்ஸாரேஷு நராதமான் |
க்ஷிபாம்யஜஸ்ரமசுபான் ஆஸுரீஷ்வேவ யோனிஷு ॥ 19

இப்படி என்னை வெறுத்து கொடிய இயல்புள்ள மனிதப் பதரான பாவிகளை அவர்கள் தன்மைக்கு ஏற்ப அசுரத் தன்மையுடைய ஜாதியிலேயே அவர்களைத் தள்ளுகிறேன். மேலும் மேலும் கொடிய பாபத்தை செய்து, அதன் விளைவான கடு நரகத்தை அவர்கள் அடையச் செய்கிறேன்.

ஆஸுரீம் யோனிமாபன்னா மூடா ஜன்மனி ஜன்மனி |
மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாம் கதிம் ॥ 20

அர்ஜுன! மூடர்கள் பல பிறவிகளில் அசுர யோனியை அடைந்து என்னை அறியாமல் முன்னிலும் இழிந்த நிலையையே எய்துகிறார்கள். வாசுதேவனான ஈச்வரன் ஒருவன் இருக்கிறான என்பதை அறியாமல் தாழ்ந்த நிலையில் படிகிறார்கள்

த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாசனமாத்மன: |
காம: க்ரோதஸ்ததா லோபஸ் தஸ்மாத் ஏதத் த்ரயம் த்யஜேத் ॥ 21

ஆத்மாவுக்கு நாசத்தை விளைவிக்கக்கூடிய காமம், கோபம், லோபம் என நரகத்துக்கு மூன்று வழிகள் உள்ளன. இம்மூன்றையும் விட்டுவிட வேண்டும்

இப்படி அசுர ஸ்வபாவமுள்ளவர்கள் நரகத்தில் விழுவதற்கு காமம், கோபம், லோபம் இம்மூன்றுமே காரணமாகிறது. இவை

acharya.org

ஆத்ம நாசத்தை விளைவிக்கும்; அதை அறிந்து நீ அவைகளை விட்டு விடவேண்டும்.

ஏதைர்விமுக்த: கௌந்தேய தமோத்வாரைஸ் த்ரிபிர்நர: |
ஆசரத்யாத்மன: ச்ரேயஸ்ததோ யாதி பராம்கதிம் || 22

குந்தியின் புத்திரனே! அஜ்ஞானம், விபரீத ஜ்ஞானம் இவைகளுக்குக் காரணமான காம க்ரோத லோபமான மூன்று குணங்களிலிருந்தும் விடப்பட்ட மனிதன், தன் ஆத்மாவுக்கு நன்மையையே செய்தவனாகிறான். அவன் உயர்ந்த கதியை அடைகிறான். அதாவது புருஷோத்தமனான என்னையே அடைகிறான்.

ய: சாஸ்த்ர விதிமுத்ஸ்ருஜ்ய வர்த்ததே காமகாரத: |
ந ஸ ஸித்திம் அவாப்னோதி ந ஸுகம் ந பராம்கதிம் || 23

காமத்திற்கு வசப்பட்டு சாஸ்திரத்தின் ஆணையை மீறிதன் இஷ்டப்படி நடப்பவன் இங்கும் சுகம் பெறுகிறானில்லை; அங்கும் நன்மையுறுகிறானில்லை; அதாவது இம்மை மறுமை இரண்டிலும் நன்மையில்லை.

தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே
கார்யா கார்ய வ்யவஸ்திதௌ |
ஞாத்வா சாஸ்த்ர விதானோக்தம்
கர்ம கர்த்தும் இஹார்ஹஸி || 24

எது செய்யத்தக்கது, எது செய்யத்தகாதது என்பதற்கு சாஸ்த்ரமே ப்ரமாணம். ஆதலால் சாஸ்த்ரம் கூறியுள்ள நெறியை அறிந்து உன் வர்ணாச்ரம தர்மங்களை, இந்த உலகில் செய்வதற்கு, நீ உரியவனாகிறாய்.

தர்ம சாஸ்த்ரம், புருஷஸூக்தம், இதிஹாஸ புராணங்கள், என்னிடம் பக்தி செய்து என்னை அடைய உபாயங்களைக் கூறுகின்றன. அவை அவரவர் செய்ய வேண்டிய கர்மாவை தெளிவாகச் சொல்லுகின்றன. தெளியத் தெரிந்து அவைகளை நீ செய்யத் தகுதியுள்ளவனாயிருக்கிறாய்.

ஸ்ரீ ஆளவந்தார் அருளிச் செய்த கீதார்த்த ஸங்க்ரஹம்

தேவாசுர விபாகோக்தி பூர்விகா சாஸ்த்ர வச்யதா
தத்த்வா நுஷ்டான விஜ்ஞான ஸ்த்தேம்நே ஷோடச உச்யதே

பிராணிகளின் ச்ருஷ்டியில் தேவாம்சம் அசுராம்ஸம் என்று இரு பிரிவுகளைச்சொல்லி, தத்வத்தையும், செய்ய வேண்டிய செயலையும் அறிய சாஸ்த்ரம் பிரமாணம் என்கிற விஷயமும் இந்த பதினாறும் அத்யாயத்தில் சொல்லப்பட்டது.

ஸ்ரீ ஆளவந்தார் திருவடிகளே சரணம்!
பதினாறும் அத்யாயம் முற்றிற்று.

acharya.org

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் பகவத் கீதை

பதினேழாம் அத்யாயம்

தெய்வப் பிறவி, அசுரப் பிறவி என இருவகைகளைக்கூறி, சாஸ்திரத்தை மீறி நடப்பதே அசுரப்பிறவிக்குக் காரணம். ஆதலால், சாஸ்த்ரத்துக்கு உட்பட்டே நடக்க வேண்டும் என்பதைக் கீழே சொன்னான்.

சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டுள்ள செயல்களும் ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களுக்குச் சேர மூன்று விதங்களாயிருக்கும் என்பதையும், அவைகளின் தன்மையையும் இந்த அத்தியாயத்தில் கூறுகிறான்.

அர்ஜுன உவாச : அர்ஜுனன் சொன்னான்.

யே சாஸ்த்ரவிதிம் உத்ஸ்ருஜ்ய யஜந்தே ச்ரத்தயாऽந்விதா : |
தேஷாம் நிஷ்டா து கா க்ருஷ்ண ஸத்வம் ஆஹோ ரஜஸ்தம : || 1

க்ருஷ்ணா! யார் சாஸ்திர விதியை மீறி, ஆனால் ச்ரத்தையுடன் யாகாதிகளைச் செய்கிறார்களோ, அவர்களுடைய நிலை எத்தகையது; ஸத்துவமா, ராஜஸமா? அல்லது தமஸமா ?

ஒருவன் முன்னேற வேண்டுமென்கிற ச்ரத்தையுடனேயே சாஸ்திரம் விதிக்காத ஒரு செயலையோ யாகத்தையோ, யஜ்ஞத்தையோ செய்கிறான் இப்படிப்பட்டவனின் கதி என்ன? இவன் ஸத்வகுணமடியாக மேலேறுகிறானா? அல்லது ரஜஸ் தமஸ்ஸினால் கீழே அழுந்துகிறானா? சாஸ்திரம் விதித்துள்ளபடி செய்யவேண்டியது இன்றியமையாததா! என்பதே அர்ஜுனனின் கேள்விக் கருத்து.

ஸ்ரீ பகவான் உவாச : கண்ணன் கூறியது.

த்ரிவிதா பவதி ச்ரத்தா தேஹிநாம் ஸா ஸ்வபாவஜா |
ஸாத்விகீ ராஜஸீ சைவ தாமஸீ சேதி தாம் ச்ருணு || 2

சரீர சம்பந்தம் பெற்றவர்களுக்கு, உடன் பிறந்த முன் வினையின் ருசியினால், அவர்கள் செய்யும் செயல்களிலுள்ள ச்ரத்தை

acharya.org

யானது (ஊக்கமானது) ஸாத்விக ராஜஸ தாமஸமென மூன்று விதமாக இருக்கும். அதனைச் சொல்லுகிறேன் கேள்:

ஸத்வானுரூபா ஸர்வஸ்ய ச்ரத்தா பவதி பாரத |
ச்ரத்தாமயோzயம் புருஷோ யோ யச்ச்ரத்த: ஸ ஏவஸ: ‖ 3

பாரத! ஒவ்வொருவனுடைய மனப்பாங்குக்கு ஏற்ப ஊக்கம் உண்டாகிறது ஜீவன் ஊக்கத்தில் மாறுதல் உடையவன்; எவ்வித ஊக்கம் யுடையவனோ அவன் அந்த ஸ்வபாவத்தை அடைகிறான்.

ச்ரத்தை என்பது நம்பிக்கையுடன் செய்ய விரைதல். மனிதனுக்குள்ள ஊக்கத்தை யொட்டி அவன் செயலில் வெற்றி பெறுகிறான். ச்ரத்தை மனத்தின் நிலை; ஒருவன் எந்த விஷயத்தை அனுபவிக்க விரும்புகிறானோ, அதைப் பெற ஊக்கம் உடையவனாகிறான்.

யஜந்தே ஸாத்விகா தேவாந் யக்ஷரக்ஷாம்ஸி ராஜஸா: |
ப்ரேதாந் பூதகணும் ச்சாந்யே யஜந்தே தாமஸா ஜநா : ‖ 4

ஸத்வகுணம் மேலிட்டவர் தேவதைகளை ஆராதிக்கிறார்கள். ரஜோ குணம் மேலிட்டவர் யக்ஷர், ராக்ஷஸர்களையும், மற்றும் தாமஸ குணமுள்ளவர் பூத கணங்களையும் பிரேதத்தையும் வழிபடுகிறார்கள்.

நல்லவர் நல்லவரோடும், கெட்டவர் கெட்டவர்களோடும் இணங்குவது உலக இயல்பு; அதே போல ஸாத்விக குணமுள்ளவர், ஸாத்வித தெய்வமான விஷ்ணுவையும், ராஜஸ குணமுடையவர் ராக்ஷஸர்களையும், தாமஸ குணமுளளவர் பிரேத பிசாசங்களையும் வழிபடுகிறார்கள்.

அசாஸ்த்ர விஹிதம் கோரம் தப்யந்தே யே தபோ ஜநா: |
தம்பாஹங்கார ஸம்யுக்தா: காம ராக பலாந் விதா: ‖ 5
கர்சயந்த : சரீரஸ்தம் பூதக்ராமமசேதஸ: |
மாம் சைவாந்த : சரீரஸ்தம் தாந் வித்யாஸுர நிஸ்சயான் ‖ 6

எவர் சாஸ்திரத்தில் விதிக்கப்படாத கடுமையான தவத்தை, டம்பம் அஹங்காரத்தோடு ஆசை, பயனில் விருப்பம் இவற்றோடு புலன்களையும், ஆத்மாவையும் துன்புறுத்திச் செய்கிறார்களோ, அவர்கள் அசுர இயல்புடையோர்.

ப. கி 21

acharya.org

அஹாரஸ்த்வபி ஸர்வஸ்ய த்ரிவிதோ பவதி ப்ரிய : |
யக்ஞஸ்தபஸ்ததா தானம் தேஷாம் பேதமிமம் ச்ருணு ॥ 7

ஒவ்வொருவரின் ஆஹாரமும் மூன்று விதமாகயிருக்கும். அதே போல அவர்கள் செய்யும் தானமும், தபசும், யாகமும் வேறு பட்டவைகளாகவே யிருக்கும். அவைகளைச் சொல்லுகிறேன் கேள்.

ஆயு: ஸத்வபல ஆரோக்ய ஸுகப்ரீதி விவர்தனா: |
ரஸ்யா: ஸ்நிக்தா: ஸ்திரா ஹ்ருதயா ஆஹாரா: ஸாத்விக ப்ரியா: ॥ 8

ஆயுள், அறிவு, வலிமை, உடல் நலம், இன்பம், விருப்பம் இவைகளை வளர்க்க விரும்பி, சுவை, ஸத்து. வலிமை தருமவையாய், புசிக்க இன்பமாயு முள்ள உணவையே ஸாத்விகர் விரும்புவர்.

கட்வம்லலவணாத்யுஷ்ண தீக்ஷ்ணரூக்ஷ விதாஹின: |
ஆஹாரா ராஜஸஸ்யேஷ்டா துக் கசோகாமயப்ரதா : ॥ 9
யாதயாமம் கதரஸம்பூதி பர்யூஷிதம் ச யத் |
உச்சிஷ்டமபிசஅமேத்யம் யோஜனம் தமாஸப்ரியம் ॥ 10

கைப்பு, புளிப்பு, உவர்ப்பு, காரம். எரிச்சல், வெப்பம் இவைகள் மிகுந்ததான உணவுகளையே ரஜோகுணம் மேலிட்டவர் விரும்புவர்; இவை துன்பம், உடல்நோய் இவைகளை உண்டுபண்ணும்.

சமைத்து காலம் தாழ்ந்த ஆறிய அன்னத்தையும், சுவையற்றதையும், துர்நாற்றமுள்ளதையும், எச்சிலையும், பரிசுத்தமற்றதையும் தமோ குணம் மேலிட்டிருப்பவர் விரும்புவர்.

அபலாகாங்க்ஷிபிர் யக்ஞோ விதித்ருஷ்டோ ய இஜ்யதே |
யஷ்டவ்யமேவேதி மன : ஸமதாய ஸ ஸாத்விக: ॥ 11

அபிஸந்தாய துபலம் தம்பார்த்தமபி சைவ யத் |
இஜ்யதே பரதச்ரேஷ்ட தம் யஜ்ஞம் வித்தி ராஜஸம் ॥ 12

விதிஹீனம் அஸ்ருஷ்ட அன்னம் மந்த்ரஹீனம் அதக்ஷிணம் |
ச்ரத்தாவிரஹிதம் யஜ்ஞம் தாமஸம் பரிசக்ஷதே ॥ 13

இனி, யஜ்ஞங்கள், பகவதாரனத்தின் மூன்று வகைகளைச் சொல்லுகிறான்.

ஒரு பயனையும் விரும்பாமல் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டதை, நாம் பகவானின் உகப்புக்காகவே செய்ய வேண்டும் என்கிற மன உறுதியோடு செய்யப்படும் யாகம், யஜ்ஞம், பகவதாராதனம் முதலியவை ஸாத்விகமானவை.

acharya.org

ஒரு பயனை விரும்பியோ, சாஸ்திரம் சொல்லியபடி நடக்கிறோம் என்கிற ஆடம்பரத்துக்காகவோ, செய்யப்படுபவை ராஜஸமானவை.

சாஸ்திரம் விதிக்காததையும், அன்னதானம் இல்லாததும், மந்திரம், தக்ஷிணை இவைகளற்றதும் ச்ரத்தை இல்லாமல் செய்யப்படும் யக்ஞ யாகாதிகள் தாமஸமானவை என்று சொல்லப்படுகிறது.

தேவத்விஜ குரு ப்ராஜ்ஞ பூஜனம் சௌசம் ஆர்ஜவம் |
ப்ரஹ்மசர்யம் அஹிம்ஸா ச சரீரம் தப உச்யதே ॥ 14

அனுத்வேக கரம் வாக்யம் ஸத்யம் ப்ரியஹிதம் ச யத் |
ஸ்வாத்யாய அப்யாஸனம் சைவ வாங்மயம் தப உச்யதே ॥ 15

மன : ப்ரஸாத : ஸௌம்யத்வம் மௌனம் ஆத்ம விநிக்ரஹ: |
பாவஸம் சுத்திரத்யேதத் தபோ மானஸமுச்யதே ॥ 16

இனி மூன்றுவித தபஸ்ஸைப் பற்றிக் கூறுகிறான்.

தேவர், ப்ராஹ்மணர், ஆசார்யன் இவர்களைப் பூசிப்பதும், புண்ய நதிகளில் ஸ்நானம் செய்வதும் நேர்மையும், ப்ரஹ்மசரியமும்; அஹிம்ஸையும் உடலால் செய்யப்படும் தவம் எனப்படும்.

பிறர் மனம் புண்படும்படி, பேசாமையும், இனிமையாகப் பேசுதலும், வேதம் வேதாந்தங்களை ஓதுதலும், வாக்கினால் செய்யப்படும் தவமாகும்.

கலக்கமில்லாத மன அமைதியும், அன்புடைமை, மௌனம் (அதிகமாகப் பேசாமை), தன்னடக்கம், கண்ட விஷயங்களையும் மனத்தால் நினையாத தூய்மையும், மனத்தினாலான தபசு எனப்படும்.

காயத்தினாலும், வாக்கினாலும் மனத்தினாலும் மூவகை தவத்தைப் பற்றி மேலே சொன்னேன். இனி அந்தத் தவத்தில் ஸாத்விக, ராஜஸ, தாமஸமானவைகளைச் சொல்லுகிறான்.

ச்ரத்தயா பரயா தப்தம் தபஸ்தத் த்ரிவிதம் நரை: |
அபலாகாங்க்ஷிபிர் யுக்தை : ஸாத்விகம் பரிசக்ஷதே ॥ 17

ஸத்கார மாந பூஜார்த்தம் தபோ தம்பேந சைவ யத் |
க்ரியதே ததிஹ ப்ரோக்தம் ராஜஸம் சலம் அத்ருவம் ॥ 18

மூடக் ராஹேணு ஆத்மனோ யத் பீடயா க்ரியதே தப : |
பரஸ்யோத்ஸாதநார்த்தம் வாதத் தாமஸமுதாஹ்ருதம் ॥ 19

acharya.org

மேலே சொன்ன முக்கரணங்களாலும் பலனை விரும்பாமல், பகவதாராதனமாக மிக்க ஊக்கத்துடன் மனிதரால் செய்யப்படும் தவம் ஸாத்விக தவமாகும்.

பிறர் பாராட்டுதலையும், புகழ்ச்சியையும் போற்றுதலையும் கருதி ஆடம்பரத்தோடே பலனை விரும்பிச் செய்யப்படும் தவம் அதன் பயனை அனுபவிக்கும்போது அது நிலையற்றதானதால், அது எப்போது நழுவிவிடுமோ என்கிற பயத்தோடு செய்வதால் அந்தத் தவம் ராஜஸமானது எனப்படும்.

மூடக் கொள்கையினால் தன்னையே துன்புறுத்தியோ, அல்லது பிறரை அழித்தற் பொருட்டோ செய்யப்படுகிற தவம் தாமஸ மானது.

இனி தானம் (கொடை) மூன்று விதமானது என்பதைக் கூறுகிறான்.

தாதவ்யமிதி யத் தாநம் தீயதே அநுபகாரிணே |
தேசே காலே ச பாத்ரே ச தத் தாநம் ஸாத்விகம் ஸ்ம்ருதம் || 20

யத்து ப்ரத்யுபகாரார்த்தம் பலமுத்திச்ய வா புந: |
தீயதே ச பரிக்லிஷ்டம் தத் தாநம் ராஜஸமுதாஹ்ருதம் || 21

அதேசகாலே யத்தாநம் அபாத்ரேப்யச்ச தீயதே |
அஸத்க்ருதம் அவஜ்ஞாதம் தத் தாமஸமுதாஹ்ருதம் || 22

நல்ல புண்ணிய க்ஷேத்திரத்தில் புண்ய காலத்தில் தகுதி பெற்றவருக்கு, பதில் உதவி எதிர்பாராமல், செய்வது நம் கடமை என்று கருதி செய்யப்படும் தானமே ஸாத்விகமானது.

கைம்மாறு கருதியோ, பலனை விரும்பியோ கெட்டுப்போன பொருளை ஒருவருக்கு வழங்குவது ராஜஸமென்று சொல்லப் படுகிறது.

நல்ல காலமில்லாமல், நல்ல தேசமில்லாமல், தக்க பாத்திரமில்லாத இடத்தில் மரியாதை யில்லாமல், அவமதிப்புடன் செய்யப் படும் தானம் தாமஸமெனப்படும்.

ஓம் தத் ஸத் இதி நிர்தேசோ ப்ரஹ்மணஸ் த்ரிவித: ஸ்ம்ருத: |
ப்ராஹ்மணாஸ் தேந வேதாஸ்ச யஜ்ஞாஸ்ச விஹிதா: புரா || 23

ஓம் என்றும் தத் என்றும் ஸத் என்றும் மூன்றுவிதமான சொற்கள் வேதத்தில் உள்ளன. இம்மூன்று சொற்களும், சம்பந்தம் பெற்ற வேதம் அந்த வேதத்தை ஓதுகின்றவர், அந்த வைதீகச் செயல்களான யாகம், யஜ்ஞம் தானம், தபஸ் போன்றவை முன்னாலேயே என்னால் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன.

acharya.org

வேதத்தில் சொல்லப்பட்ட யாகம், யஜ்ஞம், தானம், தபஸ் இவைகளுக்கு ஸத்வ ரஜஸ் தமஸ் இவற்றுக்கு உள்ள பேதங்களைச் சொன்னான். இதில், அந்த வைதிக கர்மாக்கள் ஓம் என்கிற ப்ரண வத்தோடு சேர்த்தே செய்யப்படுகின்றன என்றும், தத் ஸத் என்கிற பதங்களால் சொல்லப்படுகின்றன என்பதையும் கூறுகிறான்.

வேதமறிந்த ப்ராஹ்மணர்களைக் கொண்டே, எல்லா வைதிக கர்மாக்களும் செய்விக்கப்பட வேண்டும். எந்த வேத மந்திரத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் ஓம் என்கிற ப்ரணவம் சொல்லப்படும்

ஓம் என்கிற ப்ரணவம். அ என்றும் உ என்றும் ம என்றும் மூன்று எழுத்துக்களைக் கொண்டது. அகாரத்தால் பகவானை நாராயணனைச் சொல்லி மகாரத்தினால் ஜீவாத்மாக்களைச் சொல்லி, உகாரத்தால் இந்த ஜீவாத்மாக்கள் அவனுக்கே உரியவை என்பதையும் குறிக்கிறது. இப்படி ஜீவ பர ஸ்வரூபத்தைப் சொல்லும் ஓம் என்பதை 'தத்' அது என்கிறது உலகெல்லாம்; ஸத் தையே (பகவானையே) காரணமாக உடையது, ஸத்தையே ஆதாரமாகவும், லய ஸ்தானமாகவும் உடையது என்று கூறி, உபநிஷத்தில் பகவானை ஸத் என்று சொல்லியிருக்கிறது.

இப்படி ஓம், தத், ஸத் என்று கூடிய மந்திரத்துடன் செய்யப்படும் யாகம் யஜ்ஞங்களே வைதீகச் செயல்களாகும்.

தஸ்மாத் ஓமித்யுதாஹ்ருத்ய யஜ்ஞதானதப : க்ரியா : |
ப்ரவர்த்தந்தே விதானோக்தா : ஸததம் ப்ரஹ்மவாதிநாம் ‖ 24

ஆதலால், வேதத்தில் விதிக்கப்பட்ட யஜ்ஞம், யாகம் தானம் தபஸ் முதலியவை எப்போதும் ஓம் என்று சொல்லியே தொடங்கி நடைபெறுகின்றன.

ததித்யநபிஸந்தாய பலம் யஜ்ஞதப: க்ரியா |
தாநக்ரியாஸ்ச விவிதா: க்ரியந்தே மோக்ஷ காங்க்ஷிபி: ‖ 25

வேறு பயனை விரும்பாமல் மோக்ஷத்தையே விரும்பிச் செய்யப்படும் யஜ்ஞம், தவம், தானங்கள் தத் என்கிற சொல்லைக் கூறி செய்யப்படுகின்றன.

மோக்ஷத்தை விரும்புவர்கள் பரமாத்மாவை அறிந்தவர்களே. ப்ரக்ருதி மண்டலத்திற்கு அப்பால் வெகு தூரத்தில் பரமபதத்தில் உள்ள பகவானை அடைய விரும்புவதால் தெளிவாய் 'தத்' அது என்பதினால் கூறுகின்றனர்.

ஸத்பாவே ஸாதுபாவே ச ஸதித்யேதத் ப்ரயுஜ்யதே |
ப்ரசஸ்தே கர்மணி ததா ஸச்சப்த: பார்த்த யுஜ்யதே ‖ 26

acharya.org

அர்ஜுனா! ஸத் என்னும் பதம் இருக்கும் பொருளைச் சொல்லும். அஸத் என்றால் இல்லாதது. ஸாதுபாவே—நன்றாக இருப்பதையும், புண்ய கர்மாக்களையும், ஸத் கர்மா என்றும். நற்சொல்லும், மங்களகரமான செயலிலும் ஸத் என்பது உபயோகப்படுத்தப்படுகிறது.

யஜ்ஞே தபஸி தானே ச ஸ்த்திதி : ஸதிதி சோச்யதே |
கர்ம சைவ ததர்த்தீயம் ஸதித்யே வாபி தீயதே 27

வேள்வியிலும் தானத்திலும் தவத்திலும் நிலைத்திருப்பது 'ஸத்' எனச் சொல்லப்படும். வேறு பயனை விரும்பாமல் பகவானையே அடைய விரும்பிச் செய்யும் கர்மா 'ஸத்' எனப்படும்.

அச்ரத்தயா ஹுதம் தத்தம் தபஸ்தப்தம் க்ருதஞ்ச யத் |
அஸத் இத்யுச்யதே பார்த்த ந ச தத் ப்ரேத்ய நோ இஹ 28

குந்தி புத்ரனே! சிரத்தையில்லாமல் செய்யப்படும் எல்லா வேள்வியும், தானமும் தவமும், மற்ற எல்லா கர்மமும் அஸத் என்று சொல்லப்படும். ஏனெனில் மறுபிறவியில்லாத மோக்ஷத்தைப் பெற அது உதவாது. இந்த லோகத்திலும் அது பயன் படாது; இம்மை மறுமை இரண்டிற்கும் உதவாது.

சிரத்தையோடு செய்யும் சாஸ்திரத்தில் சொல்லப்படாத அசுரச் செயலுக்குப் பயனில்லை என்றான் கீழ்; இங்கே, வேதத்தில் கூறப்பட்ட வைதிக கர்மாவும் சிரத்தையுடன் செய்யாவிடில் அஸத், ஒருவித பலனும் அளிக்காது என்கிறான்.

ஸ்ரீ ஆளவந்தார் அருளிய கீதா ஸங்க்ரஹம்

அசாஸ்த்ரம் ஆஸுரம் க்ருத்ஸ்நம் சாஸ்த்ரீயம் குணத: ப்ருதக் |
லக்ஷணம் சாஸ்த்ரஸித்தஸ்ய த்ரிதா ஸப்ததசோதிதம் ||

தானே கற்பனை செய்வதும், பிறர் சொல்லைக் கேட்பதும் சாஸ்த்ரம் சொல்லாதவையும் அஸுர ஸ்வபாவமேயாம். சாஸ்த்ரம் விதிக்கப்பட்டவைகளிலும் ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என மூன்று வகைப்படும். இவற்றையும் சிரத்தையுடன் செய்தல் வேண்டும். இல்லையேல் இம்மை மறுமைக்கும் பயனில்லை, என்பதே பதினேழாம் அத்யாயத்தில் சொல்லப்படுகிறது.

ஸ்ரீ ஆளவந்தார் திருவடிகளே சரணம்!

பதினேழாம் அத்யாயம் முற்றும்.

acharya.org

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் பகவத் கீதை

பதினெட்டாம் அத்யாயம்

இதுவே கீதா உபதேசத்தின் இறுதி அத்யாயம். இத்துடன் தன் கீதை உபதேசத்தை இனிது முடித்துக் கொள்கிறுன் கண்ணன்.

கீழ் அத்யாயத்தில் தேவ, அசுர, ராக்ஷஸச் செயல்களை ஸத்வ ரஜஸ் தமோ குணங்களுக்கு ஏற்ப மூன்றுவிதமாகப் பிரித்துச் சொன்ஞன். ஸத்வ குணமுள்ள தேவச் செயல்களை சிரத்தையுடன். செய்து ஆத்ம நன்மையைப் பெறலாம் என்று சொல்லி, மூன் அத்தியாயத்தை முடித்திருக்கிருன்.

இனி இந்தக் கடைசி அத்யாயத்தில் முதன் முதலில் தியாகம் என்ருலும் ஸந்யாஸம் என்ருலும் ஒன்றே என்பதைச் சொல்லி, அவைகளின் தன்மைகளை விவரிக்கிருன். பிறகு, தியாகம், கர்மா, கர்த்தா, ஜ்ஞானம் த்ருதி, பயன் இவை ஒவ்வொன்றையும் ஸத்வ ரஜஸ் தமோ குணங்களுக்கேற்ப பிரித்துச் சொல்லுகிருன். பிறகு மனிதரின் வர்ணத்தை நான்கு வகையில் பிரித்து, அவரவர்களின் வர்ணத்திற்குரிய தர்மத்தை ஸாத்விக த்யாகத்துடன் செய்து ஆத்ம நன்மை பெறலாம் என்பதையும் கூறியுள்ளான். இந்த அத்யாயம் இறுதியில் பக்தியே மோக்ஷ ஸாதனம் என்பதை உறுதி படுத்தி, அதற்குத் தடையான பாபத்தைத்தானே போக்கித் தருகிறேன் என்று சொல்லி, தன் உபதேசத்தை முடித்துக் கொள்கிருன் கண்ணன்.

அர்ஜுன உவாச — அர்ஜுனன் கூறியது

ஸந்ந்யாஸஸ்ய மஹாபாஹோ தத்வமிச்சாமி வேதிதும் |
த்யாகஸ்ய ச ஹ்ருஷீகேச ப்ருதக் கேசிநிஷூதந || 1

க்ருஷ்ண! ஸந்யாஸத்தின் தன்மையையும் த்யாகத்தின் உண்மையையும் நான் அறிய விரும்புகிறேன்; அதை நீ எனக்கு விரிவாகச் சொல்வாயாக.

acharya.org

ஸ்ரீ பகவான் உவாச - பகவானின் பதில்

காம்யாநாம் கர்மணாம் ந்யாஸம் ஸந்ந்யாஸம் கவயோ விது : |
ஸர்வகர்மபலத்யாகம் ப்ராஹுஸ்த்யாகம் விசக்ஷணா : || 2

த்யாஜ்யம் தோஷவத் இத்யேகே கர்ம ப்ராஹுர் மநீஷிண: |
யஜ்ஞதாநதப:கர்ம ந த்யாஜ்யம் இதி சாபரே || 3

நிச்சயம் ச்ருணு மே தத்ர த்யாகே பரதஸத்தம |
த்யாகோ ஹி புருஷவ்யாக்ர த்ரிவித: ஸம்ப்ரகீர்த்தித: 4

கருமங்களைச் செய்வதை விட்டு விடுவதே ஸந்யாஸம் என்கிறார்கள் சில ஜ்ஞானிகள்; கர்மாவைதையும் விடக்கூடாது; செய்தே யாக வேண்டும். அவைகளின் பயனை விடுவதே த்யாகம் என்கிறார்கள் மற்றும் சில பண்டிதர்கள்.

கருமங்களைச் செய்வதினால் சில பிழைகள் நேரிடுகின்றன, ஆதலால் அவைகளை விட வேண்டும் என்கிறார்கள் முந்தினவர்; சாஸ்த்திரம் விதித்திருப்பதினால் எந்தக் கர்மாவையும் விடக் கூடாது என்கிறார்கள் மற்றவர்கள்.

இவற்றின் உண்மையை நான் உனக்குச் சொல்லுகிறேன் கேள் என்கிறான் கண்ணன்.

யஜ்ஞதாநதப: கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவ தத் |
யஜ்ஞோ தாநம் தபச்சைவ பாவநாநி மநீஷிணாம் || 5

ஏதாந்யபி து கர்மாணி ஸங்கம் த்யக்த்வா பலாநி ச |
கர்த்தவ்யாநீதி மே பார்த்த நிச்சிதம் மதமுத்தமம் || 6

நியதஸ்ய து ஸந்ந்யாஸ: கர்மணோ நோபபத்யதே |
மோஹாத் தஸ்ய பரித்யாக: தாமஸ: பரிகீர்த்தித: || 7

துக்கமித்யேவ ய: கர்ம காயக்லேசபயாத் த்யஜேத் |
ஸ க்ருத்வா ராஜஸம் த்யாகம் நைவ த்யாகபலம் லபேத் || 8

கார்யமித்யேவ யத் கர்ம நியதம் க்ரியதே(அ)ர்ஜுந |
ஸங்கம் த்யக்த்வா பலஞ்சைவ ஸ த்யாகஸ் ஸாத்விகோ மத: || 9

அர்ஜுன! யாகம் யஜ்ஞம் தானம் தவம் போன்ற வைதிக கருமங்கள் எதையும் எவரும் விடக்கூடாது; அவை பாபத்தைப் போக்கி பரிசுத்தியைக் கொடுக்கும். எல்லா கருமங்களையும் கர்த்ருத்வ த்யாகம், மமதா த்யாகம் பலத்யாகம், என இந்த மூன்று த்யாகத்துடன் செய்வதே சிறந்தது என்பது எனது கருத்து.

த்யாகத்தின் மூன்று வகை - *அறிவின்மையினால், கர்மாவை விடுவது தாமஸ த்யாகம் — உடல் வருத்தத்தைக் கருதி செயலை விடு*

acharya.org

வது ராஜஸ த்யாகம் — பரமனின் கட்டளை என்பதை அறிந்து பகவானின் ப்ரீதிக்காக கருமங்களைச் செய்து, அவைகளின் பலனை விடுவது ஸாத்விகத் த்யாகம்; இதுவே சிறந்தது. இப்படிச் செய்பவனே த்யாகி எனப்படுவான்.

ஸாத்விக தியாகத்தின் தன்மை

ந த்வேஷ்ட்யகுசலம் கர்ம குசலே நாநுஷஜ்ஜதே |
த்யாகீ ஸத்வஸமாவிஷ்டோ மேதாவீ சிந்நஸம்சய: || 10 ||

ந ஹி தேஹப்ருதா சக்யம் த்யக்தும் கர்மாண்யசேஷத: |
யஸ்து கர்மபலத்யாகீ ஸ த்யாகீத்யபிதீயதே || 11 ||

அநிஷ்டமிஷ்டம் மிச்ரஞ்ச த்ரிவிதம் கர்மண: பலம் |
பவத்யத்யாகிநாம் ப்ரேத்ய ந து ஸந்யாஸிநாம் க்வசித் || 12 ||

ஸாத்விக த்யாகத்துடன் கர்மாவைச் செய்கிறவன் அறிவுள்ளவனாக இருப்பான். இவன் புண்ய கருமங்களை விரும்புவதோ, பாபச் செயல்களை வெறுப்பதோ யில்லை. அவைகளினால் உண்டாகும் நன்மை தீமைகளில் பற்று அற்று உதாஸீனனாயிருப்பான். உடல் தரிக்க, நித்ய கருமங்களைச் செய்து வருவான் இவன். ஆனால் அவைகளின் பலன்களில் பற்று இராது. இப்படி பலனைத் துறந்து செயல்களைச் செய்வதினால் இவனே தியாகி எனப்படுகிறான்.

இஷ்டமான பலனோ, அநிஷ்டமான பலனோ அல்லது இரண்டும் கலந்ததோ எது வந்தாலும் அவை ஸாத்விக தியாகியைச் சாராது.

கர்த்தா யார் காரணங்கள் யாவை?

பஞ்சைதாநி மஹாபாஹோ காரணாநி நிபோத மே |
ஸாங்க்யே க்ருதாந்தே ப்ரோக்தாநி ஸித்தயே ஸர்வகர்மணாம் || 13 ||

அதிஷ்டாநம் ததா கர்த்தா கரணஞ்ச ப்ருதக்விதம் |
விவிதாச் ச ப்ருதக்சேஷ்டா தைவஞ்சைவாத்ர பஞ்சமம் || 14 ||

சரீரவாங்மனோபிர் யத் கர்ம ப்ராரபதே நர: |
ந்யாய்யம் வா விபரீதம் வா பஞ்சைதே தஸ்ய ஹேதவ: || 15 ||

செயல்கள் உண்டாக சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட ஐந்து காரணங்களைச் சொல்லுகிறேன் கேள்—உடல், ஜீவாத்மா, புலன்

acharya.org

கள் (மனம் உள்பட) பிராணன், பரமாத்மா. இவ்வைந்துமே ஒவ்வொரு வகையில் செயல் உண்டாகக் காரணமாகின்றன. ஜீவன் மாத்திரம் தனித்து ஒரு செயலைச் செய்கிறான் என்பதில்லை; பரமாத்மாவே மற்ற நான்கையும் தரித்து ஏவி, ஒரு செயலை செய்விக்கிறான். ஒரு செயல் உண்டாக உள்ளத்தில் உறையும் பகவான் ஜீவனைத் தூண்டுகிறான். மனம் புலன்களைத் தூண்ட பிறகே ஒரு செயல் உண்டாகிறது. ஆரம்ப கர்த்தா ஸர்வேச்வரனே. நாம் ஒரு செயலைச் செய்தால், பகவானுடைய அனுமதியில்லையேல், அச்செயல் காரியகரமாவதில்லை என்பதை நாம் காண்கிறோம். உடல், மனம், வாக்கு இவை எதினால் செயல் செய்யப்பட்டாலும் மேலே சொன்ன ஐந்துமே காரணமாகும். அதில் பகவான் முக்கிய காரணமாகிறான். இதை அறிந்தால் ஜீவன் கர்த்தாயில்லை, பகவானே கர்த்தா என்று நினைக்கத் தடையில்லை.

> தத்ரைவம் ஸதி கர்த்தாரம் ஆத்மாநம் கேவலம் து ய: |
> பச்யத்யக்ருதபுத்தித்வாந் ந ஸ பச்யதி துர்மதி: || 16 ||
>
> யஸ்ய நாஹங்க்ருதோ பாவோ புத்திர் யஸ்ய ந லிப்யதே |
> ஹத்வாऽபி ஸ இமாந் லோகாந் ந ஹந்தி ந நிபத்யதே || 17 ||
>
> ஜ்ஞாநம் ஜ்ஞேயம் பரிஜ்ஞாதா த்ரிவிதா கர்மசோதநா |
> கரணம் கர்ம கர்த்தேதி த்ரிவித: கர்மஸங்க்ரஹ: || 18 ||
>
> ஜ்ஞாநம் கர்ம ச கர்த்தா ச த்ரிதைவ குணபேதத: |
> ப்ரோச்யதே குணஸங்க்யாநே யதாவச் ச்ருணு தாந்யபி || 19 ||

இப்படி பகவானே கர்த்தாவாயிருக்க, அதை அறியாமல், ஜீவாத்மாவையே கர்த்தா என்று நினைப்பவன் அறிவில்லாதவன்— தன்னைக் கர்த்தாவென்று நினையாமல், தன் செயலுக்கெல்லாம் பகவானே கர்த்தா; அவைகளின் பலன்களும் அவனைச் சேர்ந்தவை என்று நினைத்திருப்பவன் போரில் பலரைக் கொன்றாலும், அவனை பாபம் அண்டாது; அர்ஜுனா! மேலும் அறிவு, கர்மா, கர்த்தா இவற்றின் மூன்றுவித பிரிவுகளையும் உனக்குச் சொல்லுகிறேன் கேள்.

அறிவின் முவ்வகைப் பிரிவுகள்

> ஸர்வபூதேஷு யேநைகம் பாவம் அவ்யயமீக்ஷதே |
> அவிபக்தம் விபக்தேஷு தத் ஜ்ஞாநம் வித்தி ஸாத்விகம் || 20 ||
>
> ப்ருதக்த்வேந து யத் ஜ்ஞாநம் நாநாபாவாந் ப்ருதக்விதாந் |
> வேத்தி ஸர்வேஷு பூதேஷு தத் ஜ்ஞாநம் வித்தி ராஜஸம் || 21 ||

acharya.org

யத்து க்ருத்ஸ்நவத் ஏகஸ்மிந் கார்யே ஸக்தம் அஹேதுகம் |
அதத்வார்த்தவத் அல்பஞ்ச தத் தாமஸம் உதாஹ்ருதம் || 22 ||

எல்லா ஜீவராசிகளிடத்தும் மாறுதலில்லாத ஒரேவிதமான ஆத்மாக்களைக் காண்கிறது ஸாத்விக அறிவு—ஸம்ஸார தசையில் முற்பிறவியின் வாஸனைக்குச் சேர ஆத்மாக்களின் குணங்களும் செயல்களும் மாறுபட்டிருக்கும் என்பதை அறிவது ராஜஸ அறிவாகும். உண்மைக்கும் யுக்திக்கும் மாறுதலாய் அல்பச் செயல்களை யோசனையின்றிச் செய்து முடிக்க எண்ணுவது தாமஸ அறிவு.

கர்மாவின் மூன்று வகைகள்

நியதம் ஸங்க்ரஹிதம் அராகத்வேஷத: க்ருதம் |
அபலப்ரேப்ஸுனா கர்ம யத் தத் ஸாத்விகம் உச்யதே || 23 ||

யத் து காமேப்ஸுனா கர்ம ஸாஹங்காரேண வா புந: |
க்ரியதே பஹுளாயாஸம் தத் ராஜஸம் உதாஹ்ருதம் || 24 ||

அநுபந்தம் க்ஷயம் ஹிம்ஸாம் அநவேக்ஷ்ய ச பௌருஷம் |
மோஹாத் ஆரப்யதே கர்ம யத் தத் தாமஸம் உச்யதே || 25 ||

தனக்குரிய வருணம், ஆசிரமம் இவற்றையொட்டி கர்த்ருத்வம், மமதை, பலம் இவைகளை விட்டு, புகழில் விருப்பமும், பழியில் வெறுப்பும் அற்றுச் செய்வது ஸாத்விக கர்மா. பலனை விரும்பி, தன்னை செய்பவனாக நினைத்து, மிக கஷ்டப்பட்டு கர்மாவை செய்வது ராஜஸ கருமம்-நன்மை தீமை, லாபம் நஷ்டம் இவைகளைக் கருதாமலும், பலருக்குத் தீங்கை விளைவித்தும், தன் சக்திக்கு மீறி செலவு செய்தும், பகவானே கர்த்தா என்பதை அறியாமலும் செய்யப்படுவது தாமஸச் செயல்.

இனி கர்த்தாவின் பிரிவுகள்

முக்தஸங்கோऽநஹம்வாதீ த்ருத்யுத்ஸாஹஸமந்வித: |
ஸித்த்யஸித்த்யோர் நிர்விகார: கர்த்தா ஸாத்விக உச்யதே = 26 ||

ராகீ கர்மபலப்ரேப்ஸு: லுப்தோ ஹிம்ஸாத்மகோऽசுசி: |
ஹர்ஷசோகாந்வித: கர்த்தா ராஜஸ: பரிகீர்த்தித: || 27 ||

அயுக்த: ப்ராக்ருத: ஸ்தப்த: சடோ நைஷ்க்ருதிகோऽலஸ: |
விஷாதீ தீர்க்கஸூத்ரீ ச கர்த்தா தாமஸ உச்யதே || 28

பலனை இச்சியாமல், தன்னைக் கர்த்தாவென்று நினையாமல், ஊக்கம் உறுதியுடன், வெற்றி தோல்விகளில் மன விகாரமற்று

acharya.org

கர்மாவைச் செய்பவன் ஸாத்விக கர்த்தா—பலனை விரும்புவனும் பணச்செலவு செய்யாத லோபியும், பிறரைத் துன்புறுத்துவனும், பரிசுத்தியில்லாதவனும், வெற்றி தோல்விகளில் மனவிகாரம் அடைபவனும் ராஜஸகர்த்தா; வைதிக கர்மாவை செய்யத் தகுதியில்லாதவனும், பிறருக்குக் கெடுதலையே செய்பவனும் தனக்குரிய செயலைச் செய்யாதவனும், சோம்பேறியும் சோர்வுடையவனுமான இவர்கள் தாமஸ கர்த்தா.

புத்தியின் வேறுபாடுகள்

புத்தேர் பேதம் த்ருதேச்சைவ குணதஸ் த்ரிவிதம் ச்ருணு |
ப்ரோச்யமாநம் அசேஷேண ப்ருதக்த்வேந தநஞ்ஜய || 29

ப்ரவ்ருத்திஞ்ச நிவ்ருத்திஞ்ச கார்யாகார்யே பயாபயே |
பந்தம் மோக்ஷஞ்ச யா வேத்தி புத்திஸ் ஸா பார்த்தஸாத்விகீ || 30

யயா தர்மம் அதர்மஞ்ச கார்யஞ்சாகார்யமேவ ச |
அயதாவத் ப்ரஜாநாதி புத்திஸ் ஸா பார்த்த ராஜஸீ || 31

அதர்மம் தர்மமிதி யா மந்யதே தமஸாவ்ருதா |
ஸர்வார்த்தாந் விபரீதாம்ச்ச புத்தி: ஸா பார்த்த தாமஸீ || 32

மற்ற தர்மங்களையும், மோக்ஷ தர்மத்தையும் தேச காலத்திற்கேற்ப செய்யவேண்டியவைகளையும், பயத்தைக் கொடுக்கக் கூடியதும், பயமில்லாததையும் ஸம்ஸார பந்தத்தையும் உள்ளபடி அறிவதே ஸாத்விகபுத்தி (மற்ற தர்மங்கள், பயத்தைக் கொடுப்பது, ஸம்ஸார பந்தம் இவைகளை, விடுவதற்காக அறிய வேண்டும்).

தர்மம் அதர்மம், செய்யத்தக்கது செய்யத்தகாதது இவைகளை உள்ளபடி அறியாமல், ஒன்றை மற்றொன்றாக அறிவது ராஜஸ புத்தி.

எதையும் உள்ளபடி அறியாமை, அதர்மத்தை தர்மம் என அறிவது போன்ற இவையெல்லாம் தாமஸபுத்தி.

த்ருதி (உறுதியின்) தன்மையும் மூன்று வகையாகும்:

த்ருத்யா யயா தாரயதே மந: ப்ராணேந்த்ரியக்ரியா: |
யோகேநாவ்யாபிசாரிண்யா த்ருதி: ஸா பார்த்த ஸாத்விகீ || 33

யயா து தர்மகாமார்த்தாந் த்ருத்யா தாரயதேऽர்ஜுந |
ப்ரஸங்கேந பலாகாங்க்ஷீ த்ருதி: ஸாபார்த்த ராஜஸீ || 34

acharya.org

யயா ஸ்வப்நம் பயம் சோகம் விஷாதம் மதமேவ ச |
ந விமுஞ்சதி துர்மேதா: த்ருதிஸ் ஸா பார்த்த தாமஸீ || 35

எந்த உறுதியினால் மனம், பிராணன் மற்ற புலன்களையும் தான் செய்யும் யோகத்திலிருந்து நழுவவிடாமலிருக்கிறானோ, அது ஸாத்விக த்ருதி மோக்ஷம் தவிர மற்ற அறம் பொருள் இன்பங்களில் பற்றுதல் உடையவனாய், அவைகளைப் பெறச் செய்யும் கருமங்களில் உள்ள உறுதி ராஜஸ த்ருதி துன்பம், மனக்கலக்கம், அச்சம், செருக்கு இவைகளை விடாமலிருக்கும் உறுதி தாமஸ த்ருதி.

இனி கரும பலன்களின் பிரிவு :

ஸுகம் த்விதாநீம் த்ரிவிதம் ச்ருணு மே பரதர்ஷப |
அப்யாஸாத் ரமதே யத்ர துக்காந்தஞ்ச நிகச்சதி || 36

யத் தத் அக்ரே விஷமிவ பரிணாமேம்ருதோபமம் |
தத் ஸுகம் ஸாத்விகம் ப்ரோக்தம் ஆத்மபுத்திப்ரஸாதஜம் || 37

விஷயேந்த்ரியஸம்யோகாத் யத் தத் அக்ரேம்ருதோபமம் |
பரிணாமே விஷமிவ தத் ஸுகம் ராஜஸம் ஸ்ம்ருதம் || 38

யத் அக்ரே சாநுபந்தே ச ஸுகம் மோஹநமாத்மந: |
நித்ராலஸ்யப்ரமாதோத்தம் தத் தாமஸம் உதாஹ்ருதம் || 39

அர்ஜுன! கீழ்ச் சொன்னவைகளின் பலன்களும் மூன்று விதமாகயிருக்கும். அதையும் சொல்லுகிறேன் கேள்.

முதலில் விஷம்போல் துன்பமாயும், முடிவில் அம்ருதம்போல் இன்பமாயும் இருக்கும் யோக பலத்தினால் பெறக்கூடிய ஆத்மானுபவம் ஸாத்விக சுகம் — முதலில் அம்ருதம் போலும் முடிவில் விஷம் போலும் துன்பமாயுள்ள, புலன்களால் பெறக்கூடிய விஷய சுகம்-ராஜஸ சுகம் — அனுபவிக்கும் போதும் துன்பமாய், அறிவின்மை, உறக்கம், சோம்பல், சோர்வு, கவனமின்மை இவைகளை உண்டாக்கி, துன்பத்திலேயே முடிவது தாமஸ சுகம் (இது சுகமே அன்று; தாமஸகுணமுள்ளவனுக்கு இது சுகமாகத் தோன்றும்).

ந ததஸ்தி ப்ருதிவ்யாம் வா திவி தேவேஷு வாபுந: |
ஸத்வம் ப்ரக்ருதிஜைர் முக்தம் யத் ஏபிஸ் ஸ்யாத் த்ரிபிர்குணை: || 40

அர்ஜுன! ப்ரக்ருதியினால் உண்டாகும் இம் முக்குணங்களிலிருந்து விடுபட்ட ஜீவன், இம் மண்ணுலகிலுமில்லை; விண்ணுலகத்திலுமில்லை. (நான்முக ப்ரஹ்மா முதல் எல்லா தேவர்களும் இம் முக்குணங்களுக்கு உட்பட்டவர்களே).

acharya.org

இதிலிருந்தே ஸம்ஸார பந்தத்தைப் போக்கி மோக்ஷம் பெறும் உபாயத்தைச் சொல்ல ஆரம்பிக்கிறான்.

ப்ராஹ்மண க்ஷத்ரியவிசாம் சூத்ராணாஞ்ச பரந்தப |
கர்மாணி ப்ரவிபக்தாநி ஸ்வபாவப்ரபவைர் குணை: || 41

சமோ தமஸ் தபச் சௌசம் க்ஷாந்திரார்ஜவமேவ ச |
ஜ்ஞாநம் விஜ்ஞாநம் ஆஸ்திக்யம் ப்ராஹ்ம கர்ம ஸ்வபாவஜம் || 42

சௌர்யம் தேஜோ த்ருதிர் தாக்ஷ்யம் யுத்தே சாப்யபலாயநம் |
தாநம் ஈச்வரபாவச்ச க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம் || 43

க்ருஷி கோரக்ஷ்ய வாணிஜ்யம் வைச்யம் கர்ம ஸ்வபாவஜம் |
பரிசர்யாத்மகம் கர்ம சூத்ரஸ்யாபி ஸ்வபாவஜம் || 44

அர்ஜுன! அந்தணர், க்ஷத்ரியர், வைச்யர் சூத்ரர் என ஜாதிகள் நான்கு. அந்தந்த ஜாதிக்குரிய குணங்களும், தொழிலும் முற்பிறவி வாஸனைக்குச் சேர வேறுபட்டிருக்கும்.

புலன்களை அடக்கல், தூய்மை, பொறுமை, நேர்மை, சாஸ்திர ஜ்ஞானம், வேதாந்த அறிவு, ஈச்வர நம்பிக்கை இவையெல்லாம் அந்தணருக்கு இயற்கையாக இருக்கும் குணங்கள் — சூரத் தன்மை, துணிவு, மன உறுதி, போரில் புறம் காட்டாமை, அரசு ஆளுகை, இவையெல்லாம் க்ஷத்திரியனுக்கு இயல்பான குணங்கள்; கோரக்ஷணை (பசுவை காப்பாற்றுதல்), வாணிபம் இவை வைச்யனுக்குள்ள குணங்கள் — மேலே சொன்ன மூன்று வர்ணத்தருக்கும் பணிவிடை செய்வது சூத்ரனின் குணம்.

இவர்களின் தொழில்கள் வேறுபட்டிருந்தாலும் அவைகளின் பலன்களில் வேறுபாடில்லை. அவரவருக்குரிய தொழிலை செய்திருந்தே அவர்கள் எல்லோரும் மோக்ஷ பலன் பெறலாம் என்பதை மேலே விவரிக்கிறான்.

ஸ்வேஸ்வே கர்மண்யபிரத: ஸம்ஸித்திம் லபதே நர: |
ஸ்வகர்மநிரத: ஸித்திம் யதா விந்ததி தத் ச்ருணு || 45

யத: ப்ரவ்ருத்திர் பூதாநாம் யேந ஸர்வமிதம் ததம் |
ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்தம் விந்ததி மாநவ: || 46 ||

தன் தன் வர்ணத்துக்குரிய செயலைச் செய்பவன் மேலான பலனைப் பெறுகிறான். (அதாவது மோக்ஷம் பெறுகிறான்.) அவர்கள் அதை அடையும் வழியைச் சொல்லுகிறேன், கேள்.

acharya.org

எல்லா உயிர்களின் ச்ருஷ்டி ஸ்திதி, ப்ரவர்த்தி (படைத்தல் காத்தல், செயலை செய்வித்தல்) எவனுக்கு அதீனமோ (வசப் பட்டுள்ளதோ), அவைகள் எல்லாவற்றிலும் கரந்து எங்கும் பரந்துள்ளன் என்கிறபடி) ''ஸர்வ அந்தர்யாமியாய்'' ''அந்த: ப்ரவிஷ்ட: சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா'' என்றும் அந்தர்பஹி ; ச தத்ஸர்வம் வியாப்ய நாராயணஸ் ஸ்தித: என்றும், பரந்து, மறைந்துள்ள பரமபுருஷனை தன் வர்ணத்திற்குரிய செயல்களால் நன்கு ஆராதித்து (ப்ரீதி செய்து), இந்த நான்கு வருணத்தினரும் மேலான மோக்ஷ பலனை அடைகிறார்கள். (எம்பெருமானுக்கு உகப்பை உண்டாக்கும் செயலே பூஜை; ஆராதனம் எனப்படும்) அவரவர் வர்ணத்தின் தர்மத்தைச் செய்வதே இறைவனுக்கு உகப்பாகும்.

ச்ரேயாந் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத் ।
ஸ்வபாவநியதம் கர்ம குர்வந் நாப்நோதி கில்பிஷம் ॥ 47 ॥

குறைவாகச் செய்யப்படும் மற்ற வருணத்தவரின் தர்மத்தைக் காட்டிலும் ஒருவனுக்கு குறைவாகச் செய்யப்படும் தனக்குரிய தர்மமே மேலானது; தன் வருணத்தின் தர்மத்தைச் செய்பவன் எப்பொழுதும் விநாசத்தை அடைவதில்லை. ஸ்வதர்மம் என்றால் தனக்குச் செய்ய சக்தியுள்ள தர்மம். தான் செய்யப் பழக்கப்பட்ட தர்மம் அதாவது, கர்ம யோகம்; பரதர்மம் என்றால் தான் செய்ய சக்தியில்லாததாய், தனக்குப் பழக்கமில்லாத, புலன்களை அடக்கிச் செய்யவேண்டிய ஜ்ஞான யோகம் என்று ராமாநுஜர் இதற்குப் பொருள் கூறியிருக்கிறார். ஜ்ஞான யோகத்தைப் பூர்த்தியாகச் செய்வதை விட, கர்மயோகத்தைக் குறைவாகச் செய்தாலும் இதுவே மேலானது.

ஸஹஜம் கர்ம கௌந்தேய ஸதோஷமபி ந த்யஜேத் ।
ஸர்வாரம்பா ஹி தோஷேண தூமேநாக்நிரிவாzzவ்ருதா: ॥ 48 ॥

அஸக்தபுத்திஸ் ஸர்வத்ர ஜிதாத்மா விகதஸ்ப்ருஹ: ।
நைஷ்கர்ம்யஸித்திம் பரமாம் ஸந்ந்யாஸேநாதிகச்சதி ॥ 49 ॥

ஸித்திம் ப்ராப்தோ யதா ப்ரஹ்ம ததாzzப்நோதி நிபோத மே ।
ஸமாஸேந து கௌந்தேய நிஷ்டா ஜ்ஞாநஸ்ய யா பரா ॥ 50 ॥

அர்ஜுனா! உனக்குரிய செயலைச் செய்வது இயற்கையானது. தவறுதல் நேராதது. சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டது; செய்வதற்குச் சுலபம். உனக்கு கஷ்டமாகத் தோன்றினாலும், அதை நீ

acharya.org

விடக்கூடாது—புத்தி, மனம் இவைகளை புலன்வழி விஷயங்களில் செல்லாமல் அடக்கி, ஒரு பலனையும் விரும்பாமல் செயல் புரியும் த்யாகி, ஜ்ஞான யோகத்தினால் பெறக்கூடியதை விட மேலான பதவியை அடைகிறான் — அர்ஜுனா! கர்ம யோகத்தினால் ஆத்ம தியானத்தைப் பெற்றவன், எவ்வாறு ஆத்மானுபவத்தை அடைகிறான் என்பதை நான் சொல்லுகிறேன், கேள். (இங்கே ப்ரஹ்மம் என்பதற்கு ஜீவாத்மா என்பதே பொருள்).

புத்யா விசுத்தயா யுக்தோ த்ருத்யாZZத்மாநம் நியம்ய ச ।
சப்தாதீந் விஷயாந் த்யக்த்வா ராகத்வேஷௌ வ்யுதஸ்ய ச ॥ 51 ॥

விவிக்தஸேவீ லக்வாசீ யதவாக் கயாமாநஸ: ।
த்யாநயோகபரோ நித்யம் வைராக்யம் ஸமுபாச்ரித: ॥ 52 ॥

அஹங்காரம் பலம் தர்ப்பம் காமம் க்ரோதம் பரிக்ரஹம் ।
விமுச்ய நிர்மம: சாந்தோ ப்ரஹ்மபூயாய கல்பதே ॥ 53 ॥

பரிசுத்த ஜீவாத்மாவை அடையும் வழி — பரிசுத்த ஜீவனின் உண்மையான ஸ்வரூபத்தை அறிய வேண்டும். விஷயங்களில் வாஸனை, ருசியை விட்டு, அவைகளில் விருப்பம் வெறுப்பு அற்று இருக்க வேண்டும். அதிகமாய் மனிதர் நடமாடாத இடத்தில் இருக்க வேண்டும். மனம் புத்தி வாக்கு இவைகள் ஆத்ம த்யானத்திற்குத் தக்கதாயிருக்க வேண்டும்; மற்றவைகளில் ஆசையை விட்டுத் தன்-ஆத்மாவையே, எப்போதும் த்யானம் செய்ய வேண்டும் — தான் தனது என்ற அஹங்காரமில்லாதவனாய் ஒரு பலனையும் விரும்பாமல் கர்மயோகம் செய்ய வேண்டும். கொழுப்பு, காமம், கோபம் இவைகளைத் துறந்து சாந்தியுடன் ஆத்ம த்யானம் செய்யத் தகுதியுள்ளவனாக யிருக்க வேண்டும்.

இப்படியிருந்து ஆத்ம த்யானம் செய்பவன் ஆத்ம தரிசனம் பெற்று பகவத் பக்தி அடைகிறான் என்கிறான் இதற்கு மேல்.

ப்ரஹ்மபூத: ப்ரஸந்நாத்மா ந சோசதி ந காங்க்ஷதி ।
ஸம: ஸர்வேஷு பூதேஷு மத்பக்திம் லபதே பராம் ॥ 54

மேலே சொன்னபடி ஒருவன் ஆத்ம த்யானம் செய்தால் அவன் ஆத்ம ஸாக்ஷாத்காரம் (தரிசனம்) பெறுகிறான். தன் ஜீவனை பரிசுத்த நிலையில் அநுபவித்து மன அமைதியை அடைகிறான். இவனுக்கு விஷய வாஸனை சிறிதும் இராது. எதிலும் விருப்பு வெறுப்பு அற்று இருப்பான். எல்லா ஜீவராசிகளிடத்தும் சம

acharya.org

புத்தியுள்ளவனாக இருப்பான். இவனுக்கு பகவத் பக்தி உண்டாகும். இதுவே பரபக்தி என்பது.

பக்த்யா மாமபிஜாநாதி யாவாந்யச்சாஸ்மி தத்வத: |
ததோ மாம் தத்வதோ ஜ்ஞாத்வா விசதே ததநந்தரம் || 55

இப்படி என்னிடம் பக்தி பெற்றவன்; நான் யார் எத்தன்மையன் என்று என் ஸ்வரூப ரூப குணங்களை என் அருளினாலேயே, அறிகிறான்; இது ப்ரஜ்ஞானம். தன்னிடம் உண்மையான பக்தி (அன்பு) உள்ளவனுக்கு பகவான் தானே தன் ஸ்வரூப குணங்களைப் புலப்படுத்துகிறான்.

இந்த அத்யாயம் முதலில் தியாகம், அறிவு, கர்மா, புத்தி, த்ருதி, பலன் இவைகளின் பிரிவுகளை அதாவது ஸத்வ குண முள்ளவைகளையே முமுக்ஷு கைக்கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொன்னான். பிறகு பரமாத்மாவே எல்லாச் செயல்களுக்கும் கர்த்தா; ஜீவன் கர்த்தாவல்லன் என்பதை விளக்கினான். அதற்குப் பிறகு பகவத் பக்தி உண்டாகும் வழியை அடைவே சொல்லி வருகிறான்.

ஒரு ஜீவனுக்கு மனிதப் பிறவி கிடைத்தல் அரிது; பல பிறவிகளின் புண்ய பலனாக மானிடப்பிறவி கிடைக்கிறது. இதை வீணாக்காமல், மறுபிறவியில்லாத, மோக்ஷத்தை அடைவதே மேலான பயன். இம்மனிதப் பிறவியை குலம் தாங்கும் நான்கு சாதிகளாகப் பிரித்து, அவரவர்களுக்குரிய கர்மாவை, மூன்றுவித தியாகத்துடன் செய்துவர வேண்டும்; அவ்வாறு செய்துவந்தால், ஆத்ம சிந்தனம் ஏற்பட்டு ஜீவாத்ம தரிசனம் பெறலாம். அதன் பிறகு பகவத் பக்தி உண்டாகும். அதை பரஜ்ஞான பரம பக்தியாக வளரச் செய்து, தன்னை அடையும்படி பகவானே செய்விக்கிறான் என்பதை இது வரையில் சொல்லி முடித்திருக்கிறான் கண்ணன். ஓர் அழகிய பெட்டியில் நிதி வைக்கப்பட்டிருக்கிறதென்றால், அந்தப் பெட்டியைப் பார்த்து, அதைத் திறந்த பிறகே அந்த நிதியைப் பெறமுடியும்; ஜீவாத்மா ஒளி மயமான ஓர் அழகிய பெட்டி. அதைப் பார்த்த உடன், அதில் உள்ள கோபால ரத்தினத்தைப்பெற இச்சை (அன்பு) உண்டாகிறது. இதுவே பரமனிடம் பக்தி. அன்பு, பர பக்தியாக வளர்கிறது. இந்த பரபக்தி உண்டானவனுக்கு, அந்த பரமாத்மாவே தன்னைக் காட்டிக் கொடுக்கிறான்; இது பரஜ்ஞானம்; இந்த அறிவு உண்டானால், அந்த உயர்ந்த ரத்னத்தைப் பெற

acharya.org

துடிப்பு ஏற்படுகிறது ; இது பரமபக்தி. அதைப் பெறுகிறான்; அதாவது பகவானை அடைகிறான். இப்படி ஒரு ஜீவன் மோக்ஷம் பெறும் வழியை அழகாகச் சொல்லி வருகிறான் கிருஷ்ணன்.

ஒரு ஜீவனுக்கு அவன் பிறக்கும் போதும் கஷ்டம்; இருக்கும் நாட்களிலும் கஷ்டத்தையே அனுபவிக்கிறான்; மரணம் அடையும் போதும் இதற்கு மேல் கஷ்டம். இப்படி மாறி மாறி பல பிறவிகள் எடுத்துக்கொண்டே இருக்கின்றான். மனிதனாய்ப் பிறந்த ஒருவன் "இனிப் பிறவி யான் வேண்டேன்" என்கிறபடி மறு பிறவியில்லாத மோக்ஷத்தை அடைய விரும்ப வேண்டும்; இவனே முமுக்ஷு; இந்த உயர்ந்த மோக்ஷ பலனைப் பெற பகவத் பக்தியே ஸாதனம்.

பகவத் பக்தி உண்டாக நாம் ஜீவாத்ம தரிசனம் பெற வேண்டும்; ஜீவாத்ம தரிசனம் பெற ஜீவாத்ம த்யானம், சிந்தனம் வேண்டும்; இதற்கு ஜீவாத்மா பற்றிய ஜ்ஞானம் வேண்டும். இதைப் பெற விஷய வைராக்யம் வேண்டும். மற்ற விஷயப் பற்றுகளை விட்டு ஜீவாத்மாவையே சிந்தித்திருக்க, கர்மயோகம் வேண்டும்; அதாவது அவனவனுக்கு விதித்துள்ள, வர்ணாசிரம தர்மத்தை, பகவத் சரீர பூத: ஜீவ :" (பகவானுக்கு இந்த ஜீவன் உடலாக விளங்குகிறான்) என்கிற ஜ்ஞானத்துடன், தன்னைச் செய்பவனாக நினையாமல், பகவானே செய்விக்கிறான், என்று தான் ஒரு பயனையும் விருபாமல் செய்து வர வேண்டும். இதையே க்ருஷ்ணன் இந்த அத்யாயத்தில் இது வரை உபதேசித்தான்.

ஸர்வகர்மாண்யபி ஸதா குர்வாணோ மத்வ்யபாச்ரய: |
மத்ப்ரஸாதாத் அவாப்நோதி சாச்வதம் பதம் அவ்யயம் || 56

சேதஸா ஸர்வகர்மாணி மயி ஸந்ந்யஸ்ய மத்பர: |
புத்தியோகம் உபாச்ரித்ய மச்சித்த: ஸததம் பவ || 57

மச்சித்தஸ் ஸர்வதுர்காணி மத்ப்ரஸாதாத் தரிஷ்யஸி |
அத சேத் த்வம் அஹங்காராத் ந ச்ரோஷ்யஸி விநங்க்ஷ்யஸி || 58

நித்யம், நைமித்யம் காம்யம் மற்றும் எல்லா வித கருமங்களையும் பலனை விரும்பாமல் செய்து வந்து, என்னையே பற்றி யிருப்பவன் எனது அருளினாலேயே நித்யான மோக்ஷம் பெறுகிறான் — ஆதலால் அர்ஜுனா! நீ ஆத்ம ஸ்வரூபத்தை உள்ளபடி அறிந்து, கர்மாக்களை யெல்லாம் எனக்கு அர்ப்பணம் செய்து உன் மனத்தை எப்போதும் என்னிடம் வைத்திருப்பாயாக. இப்படிச் செய்து வந்தால நீ ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுபட்டு, என்னையே அடைவாய்

acharya.org

— நான் சொல்வதைக் கேளாமல் 'நான் எனது' என்று அஹங்கரித் திருப்பாயாகில், நீ விநாசத்தையே அடைவாய் என்று நிந்திக்கிறான் கண்ணன்.

யத்யஹங்காரம் ஆச்ரித்ய ந யோத்ஸ்ய இதி மந்யஸே |
மித்யைஷ வ்யவஸாயஸ் தே ப்ரக்ருதிஸ் த்வாம் நியோக்ஷ்யதி || 59

ஸ்வபாவஜேந கௌந்தேய நிபத்த: ஸ்வேந கர்மணா |
கர்த்தும் நேச்சஸி யந் மோஹாத் கரிஷ்யஸ்யவசோऽபி தத் || 60

"என் நன்மை, தீமையை நான் அறிவேன்" என்று அஹங்கரித்து நீ இப்போது போர் செய்ய மறுத்தாலும், உன் எண்ணம் ஈடேறாது; உன் இயல்பு உன்னைப் போரிலேயே கொண்டு சேர்ப்பிக்கும்; உன் எண்ணம் பலிக்காது, பொய்த்துப் போகும்.

அர்ஜுனா ! நீ உன் அறிவின்மையினால் எந்தப் போரை வேண்டாம் என்கிறாயோ, உன் வீர்ய, சௌர்ய பராக்ரமத்தினாலும் பிறர் உன்னை ஏசுவதினாலும் அதை நீ செய்தே தீருவாய்; இதில் ஐயமில்லை.

இதுவரையில் ஸ்ரீ க்ருஷ்ணன், ஒருவனுக்கு பக்தி உண்டாகும் வழியையும், அந்த பக்தியே மோக்ஷஸாதனம் என்பதையும் விரிவாக உபதேசித்தான். இனி, மேல் ஆறு சுலோகங்களில் பக்தி ஒன்றினாலேயே ஒருவன் தன்னை அடைய முடியும் என்பதையும், அந்த பக்திக்குத் தடையான பாபங்களை யெல்லாம் தானே போக்கித் தருகிறவன் என்பதையும் இதுவே தன் முடிவான கருத்து என்று உறுதியாகச்சொல்லி, தன் உபதேசத்தை முடித்துக் கொள்கிறான்.

ஈச்வரஸ் ஸர்வபூதானாம் ஹ்ருத்தேசேऽர்ஜுந திஷ்டதி |
ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா || 61

அர்ஜுனா! உடலாகிய யந்திரத்தில் எல்லா உயிர்களையும் (ஜீவன்களை) தன் ப்ரக்ருதியான மாயையினால் கட்டி ஆட்டி வைத்துக் கொண்டு, அவைகளின் உள்ளத்தில் உறைபவன் ஸர்வேச்வரனான நானே.

ஒரு பொம்மலாட்டக்காரன் எப்படி தன் விரல்களில் நுண்ணிய ஒரு நூலினால் அந்த பொம்மையை கட்டிவைத்துக் கொண்டு, அதை ஆட்டுகிறானோ, அதுபோல எல்லோருடைய

acharya.org

இருதயத்திலும் மறைந்திருந்து, ப்ரக்ருதி என்னும் தனக்கு கட்டுப்பட்ட மாயையினால் மற்றவரைக் கட்டி, அவரவரின் முற் பிறவியின் பயனுக்குத் தக்கபடி ஆட்டி வைக்கிறான் (செயல் படுத்துகிறான்) ஸர்வேச்வரன். அவன் ஒரு சூத்ரதாரி.

தமேவ சரணம் கச்ச ஸர்வபாவேந பாரத |
தத்ப்ரஸாதாத் பராம் சாந்திம் ஸ்தாநம் ப்ராப்ஸ்யஸி சாச்வதம் || 62

அர்ஜுன! உள்ளத்தில் உறையும் அந்தத் திருமாலை எல்லாப் படியாலும் நீ சரணமாகப் பற்று; அவனுடைய அருளினால் நிறைந்த மனச்சாந்தியையும், ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுதலை யும் அடைந்து, நிலையான மோக்ஷ இன்பத்தை அடைவாய்.

கீழ்ச்சொன்ன ப்ரக்ருதியின் கட்டிலிருந்து விடுதலை அடையும் உபாயத்தை இதில் சொல்லுகிறான், 'மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாம் ஏதாம் தரந்திதே'' என்று கீழேயே இதைக் கூறியுள்ளான் கண்ணன்.

நம்மை ஸம்ஸாரத்தில் கட்டி வைப்பதில் அவன் எப்படி, சத்ய சங்கல்பனோ அதே போல அக்கட்டிலிருந்து நம்மை விடுவிப் பதிலும் ஸத்ய ஸங்கல்பனாகிறான். நம்மால் நம் முயற்சியினால் அக்கட்டை அவிழ்க்கப் போகாது; அவன் காலை நாம் கட்டினால் (சரணம் அடைந்தால்; அக்கட்டு தானே அவிழ்ந்துவிடும்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

ஸ்ரீ கீதா சரம சுலோகார்த்தம் ஆரம்பம்

உலகிலுள்ள உயிர்களை உடலாகிய யந்திரத்தில் பிணைத்து ப்ரக் ருதியான மாயையினால் அவர்களை ஆட்டி வைக்கிறான் பகவான்; அவர்களின் உள்ளத்தே உறையும் திருமாலை உணர்ந்து அவனையே சரணம்பற்றினால், நீ ஆத்ம நன்மையை அடைவாய் என்று சொல்லி, க்ருஷ்ணன் தன் உபதேசத்தை ஒருவாறு முடித்துக் கொண்டான் கீழ்.

கீதா சாஸ்திரத்தின் ஸாரமான (உயிரான) சரம சுலோகத்தை, உபதேசிக்கும் முன் அர்ஜுனன் அதற்குத் தகுதி உள்ளவனா என்ப தைச் சோதிக்கிறான் மேல் சுலோகத்தினால்.

acharya.org

இதி தே ஜ்ஞாநம் ஆக்யாதம் குஹ்யாத் குஹ்யதரம் மயா |
விம்ருச்யைதத் அசேஷேண யதேச்சஸி ததா குரு || 63

அர்ஜுனா! இது வரையில் சிறந்த பல தர்மங்களை உனக்கு என்னால் சொல்லப்பட்டன அவை அனைத்தையும், நீ ஆராய்ந்து பார். அவைகளினால் எதை நீ செய்ய விரும்புகிறாயோ, அதைச் செய்,'' என்கிறான்.

''யச், ச்ரேயஸ் ஸ்யாந் நிச்சிதம் ப்ரூஹி தந்மே'' எதைச் செய்தால், ஆத்ம நன்மை உண்டாகுமோ, அதை நீயே நிச்சயித்துச் செய்வாயாக'' என்பது அர்ஜுனனின் வேண்டுகோள். ஆனால் கண்ணன் ஒன்றை நிச்சயித்துச் சொல்லாமல்,'' உனக்கு எது இஷ்டமோ அதைச் செய்'' என்கிறான். இதைக் கேட்டதும் அர்ஜுனனுக்குக் கலக்கம் உண்டாயிற்று. பகவான் நம்மைக் கைவிடப் பார்க்கிறான் என்று கலங்கினான்.

பஞ்சவடியிலே ஸ்ரீராமன் லக்ஷ்மணனைப் பார்த்து, நீரும் நிழலும் வாய்த்துள்ள ஓர் இடத்தை நீயே தேர்ந்தெடுத்து, அங்கு ஒரு பர்ண சாலை அமைத்திடு'' என்று சொன்னான்; ராமனுடைய இச்சையையே அநுசரித்து நடக்கும் பரதந்திரனை தன் தலையில் தன் இச்சைக்குச் சேரத் தேர்ந்தெடுக்கும் உரிமையை இப்போது ராமன் தன் தலையில் வைக்கிறானே என்று லக்ஷ்மணன் கலங்கினாப்போல இங்கே அர்ஜுனன் கலக்க முறுகிறான்.

இது வரையில் க்ருஷ்ணன் சொன்னவற்றை, ஆராய்ந்து பார்க்கிறான். அர்ஜுனன் முதன் முதலில் உனக்குரிய கர்மாநுஷ்டானத்தைச் செய், இதுவே ஆத்ம நன்மை; ஆத்ம சிந்தனம் செய், இதுவே உனக்கு ச்ரேயஸ் என்று இப்படி, பல தர்மங்களை கூறி, ஒவ்வொன்றையுமே சிறந்தது என்று சொல்லியிருக்கிறான். அவைகளில் எதைச் செய்வது எதை விடுவது என்பது அர்ஜுனனுக்கு விளங்கவில்லை, கலங்குகிறான்

மேலும், ஜீவாத்மா அனைத்தும் எனக்குச் சரீரம், அவைகளுக்கெல்லாம் நானே, ஆத்மாவாகயிருக்கிறேன். உடலின் நன்மையை ஆத்மாவே தேடிக் கொள்கிறது, ''என் உடம்பின் அழுக்கை நானே போக்கிக் கொள்வேனோ'' உடலான நீ ஒன்றும் செய்வதற்கில்லை'' என்றும் க்ருஷ்ணன் சொல்லியிருக்கிறான்.

acharya.org

அவன் சொன்ன கர்ம யோகம், ஜ்ஞான யோகம், பக்தியோகம் இவைகளைச் செய்வதா, அல்லது ஆத்ம சரீர உறவை விட்டு ஒன்றையும் செய்யாமல் விடுவதா? என்பதே அர்ஜுனனின் கலக்கம்.

பல்லி சாஸ்திரம் தெரிந்த ஒருவன் பழம் பறிக்க ஒரு மரத்தின் மீது ஏறுகிறான்; பாதி மரம் ஏறினதும் ஒரு பல்லி அவனை ஏறாதே என்கிறது; அவன் இறங்கப் பார்க்கிறான்: அப்போது மற்றொரு பல்லி 'நீரே இறங்காதே' என்கிறது; இதுபோல உள்ளது கண்ணனின் முன் பின் உபதேசங்கள்.

இதுவரையில் கிருஷ்ணன் செய்த உபதேசமெலாம் அர்ஜுனன் மனத்தைச் சோதிப்பதற்காகவே; இப்போது உன் இஷ்டப்படி செய் என்று சொன்னதும் அதையொட்டியதே. உயர்ந்த சரம சுலோக அர்த்தத்தைப் பெற அர்ஜுனன் அதிகார பூர்த்தி (தகுதி) பெற்றிருக்கிறான் என்று அறிவதே கண்ணனின் கருத்து.

அர்ஜுனனுடைய இக்கலக்கத்தைக் கண்ட க்ருஷ்ணன், "அர்ஜுன நீ இப்போது அதிகார பூர்த்தி பெற்றவன். உனக்கு சிறந்த சாஸ்திரப் பொருளை இப்போது சொல்லுகிறேன் என்று கூறி, மேல் சுலோகத்தில் பக்தியின் சிறப்பைக் கூறுகிறான்.

ஸர்வகுஹ்யதமம் பூய: ச்ருணு மே பரமம் வச: ।
இஷ்டோऽஸி மே த்ருடமிதி ததோ வக்ஷ்யாமி தே ஹிதம் ॥ 64 ॥

அர்ஜுனா! நீ எனக்கு மிகப் பிரியமானவன்; இதுவரையில் உனக்கு நான் சொன்ன எல்லா தர்மங்களைக் காட்டிலும் மிக ரஹஸ்யமான தர்மத்தை மறுபடியும் உனக்குச் சொல்லுகிறேன் கேள் என்று சொல்கிறான்.

கர்மயோகம் குஹ்யம், ஜ்ஞான யோகம் குஹ்யதரம், பக்தி யோகம் குஹ்யதமம் என்றும் கண்ணன் கீழே கூறியிருக்கிறான். இவைகளைக் காட்டிலும் இனி கூறப்போவது மிக மிகச் சிறந்தது என்பதை ஸர்வ குஹ்ய தமம் எனபதினால் அறிவிக்கிறான்.

மன்மனா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு ।
மாமேவைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதிஜாநே ப்ரியோஸி மே ॥ 65 ॥

இதில் 'மத் பக்த:' என்னும் பதத்தை முன்னும் பின்னும் சேர்த்துப் பொருள் கொள்ள வேண்டும்.

acharya.org

பக்தியுடன் எப்போதும் உன் மனத்தை வைத்திரு, பக்தியுடன் (அன்புடன்) என்னை பூசித்து எனக்கு நமஸ்காரம் (வணக்கம்) செய். நீ என்னையே அடைவாய், உனக்கு எல்லா நன்மையும் உண்டாகும். இது முற்றிலும் உண்மை, எனக்கு நீ ப்ரியனாகையினால் உனக்கு இதை நான் சத்யம் செய்து கொடுக்கிறேன்.

மனத்தை எப்போதும் பகவானிடம் வைத்திருப்பது என்றால் என்ன ?

பகவானிடம் செய்யும் அன்பே பக்தி. எப்போதும் பகவானைச் சிந்தித்திருக்க வேண்டும். இதுவே த்யானம், அல்லது மனத்தை அவனிடம் வைத்திருப்பதாகும் அன்புடன் அவனுக்கு (பூஜை) வழிபாடுகளைச் செய்ய வேண்டும்; இப்படி செய்து கொண்டிருந்தால் அர்ஜுனா! நீ என்னையே அடைவாய்'' என்கிறான். அதாவது, மறு பிறவியில்லாத மோக்ஷம் பெறுவாய்; உனக்கு எல்லா ஆத்ம நன்மையும் உண்டாகும். இது ஸத்யம், பொய்யல்ல; நீ எனக்கு மிகவும் அன்பனாகையினால் இதை நான் உனக்குச் சூளுரைத்துச் சொல்லுகிறேன் என்கிறான் கண்ணன்.

பகவான் ஸ்வாமி, நாம் அவனுடைய சொத்து, அதாவது அறிவுள்ள அடிமை. தாஸன், இதை அறிந்து அவனுடைய உகப்புக்காகச் செய்யும் கைங்கர்யம் எதுவாயினும் அவனுக்கு ஆராதனமாகும். (வழிபாடு) அவனே புருஷோத்தமன் என்பதைத் தெரிந்து அவனை வழிபட வேண்டும். இவைகளை மனோ வாக் காயம் மூன்றினாலும் செய்யலாம்.

இப்படி நீ செய்து வந்தால் ''மாமேவ ஏஷ்யஸி'' நீ என்னையே அடைவாய், மோக்ஷம் பெறுவாய் பத்ரம்தே – உனக்கு நன்மை உண்டாகும். தே ப்ரிய: ப்ரதிஜாநே – நீ என் அன்பனாகையினால் இதை உனக்குச் சத்யமாகச் சொல்லுகிறேன் என்கிறான். யத் ச்ரேயஸ் ஸ்யாந் நிஸ்சிதம் ப்ரூஹி தந்மே'' என்ற அர்ஜுனனின் கேள்விக்குப் பதிலாக, பக்தியே ஆத்ம நன்மைக்கு வழி என்பதை நிச்சயித்து இந்த சுலோகத்தினால் சொல்லுகிறான்.

''த்யௌ பதேத் ப்ருதிவீ; சீர்யேத் ஹிமவாந் சகலீ பவேத், சுஷ்யேத் தோயநிதி—க்ருஷ்ணே! நமே மோகம் வசோ பவேத்'' ஆகாசம் கீழே விழுந்தாலும் விழலாம், பூமியும் பிளக்கலாம்; ஹிமயம் பொடியாகச் சிதறலாம், கடல் நீரும் அற வற்றலாம்; ஆனால் க்ருஷ்ணே (த்ரௌபதியே) என் வார்த்தை ஒருபொழுதும்

பொய்யாகாது என்று கண்ணன் திரௌபதிக்கு சத்யம் செய்து கொடுத்தது போல், இங்கே தன் தோழனான அர்ஜுனனுக்குப் பக்தியே தப்பாத மோக்ஷோபாயம் என்று சத்யம் செய்து கொடுத்திருக்கிறான். இதனால் மோக்ஷமே ஒரு ஜீவன் பெறக் கூடிய சிறந்த புருஷார்த்தம், அதைப் பெற பக்தியே ஸாதனம் என்பது கீதையின் ஸாரமான பொருள் என்பது விளங்குகிறது.

ஸ்ரீ கீதா சரமச்லோகம்:

ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச: 66

அவதாரிகை

ஸ்ரிய: பதியான ஸர்வேச்வரன் தர்மத்தை நிலைநாட்ட; "தேவகீ பூர்வா ஸந்த்யாம் ஆவிர்பூதம் மஹாத்மநா" என்கிறபடி வடமதுரையில் தேவகியின் புத்திரனாய் சங்கு சக்கரங்களுடன் வந்து அவதரித்தான். பூதனை, சகடாசுரன், கம்ஸன் போன்ற துஷ்டர்களைக் கொன்றும், அக்ரூரர், மாலாகாரர் விதுரர் போன்ற நல்லோரை வாழ்வித்தும், தன் பக்தர்களான பாண்டவர்களுக்கு தூது நடந்தும், தேரை நடத்தி இழி தொழில்களைச் செய்தும் உதவி புரிந்தான்; கோபியரோடு ஒரு நீராகக் கலந்து உவந்தான்; இளம்பிராயத்திலேயே கோவர்த்தன மலையைத் தன் விரல் நுனியில் ஏழு நாள் நிறுத்தி இந்திர கோபத்திலிருந்து, ஆயர்களையும், பசுக்களையும் காத்தான் இப்படி பல அரிய பெரிய செயல்களினாலே தன் மேன்மை, நீர்மை உயிர்களைக் காக்கும் திறன் முதலான கல்யாண குணங்களை, வெளிப்படுத்தியிருக்கிறான்.

இவற்றுக்கெல்லாம் மேலாக, உடலே ஆத்மாவென்று அபிமானித்து, ஆத்ம பரமாத்ம ஞானத் தெளிவில்லாத அர்ஜுனனை "அமலங்களாக விழிக்கும்" என்கிறபடி, குளிர நோக்கி ஞானத் தேனாய் இனிக்கும் அமுதமான கீதா சாஸ்திரத்தை அவனுக்கு உபதேசித்தருளினான்.

முதல் முதலில் சரீர ஆத்ம வேற்றுமை குறித்தும். ஆத்ம பரமாத்ம பேதத்தையும், அர்ஜுனனுக்கு உபதேசித்தான்; பிறகு பரம புருஷார்த்தமான மோக்ஷத்தில் அவனுக்கு ருசியை விளைவித்து, அதற்கு விரோதியான அஜ்ஞானம் பாப வாஸனை, விஷயங்களில் பற்று இவைகளைபோக்கி அருளினான். அதற்கு மேல்,

acharya.org

தேதம் புங்க்த்வா ஸ்வர்க லோகம் விசாலம்
க்ஷீணே புண்யே மர்த்ய லோகம் விஸந்தி"

போன்ற பல சுலோகங்களில் ஐச்வர்யம் சுவர்கம் முதலானவை அற்பமாயும், நிலையற்றதாயுமிருக்கும் என்பதைச் சொல்லி, "ஜரா மரண மோக்ஷாய" என்பதில் ஆத்மானுபவமான கைவல்யத்தைக் கழித்து, "மாமுபேத்யது கௌந்தேய" போன்ற பல சுலோகங்களில் ஒருவன் பெறக்கூடிய மேலான புருஷார்த்தம் (பயன்) பகவதனுபவமே என்பதையும் அருளிச் செய்தான். இந்த உயர்ந்த பயனைப் பெற "தஸ்மாத் அசக்தஸ் ஸததம்" போன்ற சுலோகங்களில் கர்ம, ஜ்ஞான, பக்தி யோகங்களே உபாயம் என்பதை விரிவாக எடுத்துரைத்தான்.

இதைக் கேட்ட அர்ஜுனன், பாம்பின் வாயில் அகப்பட்ட தேரை போல, ஸம்ஸாரமாகிற பெருங்கடலில் விழுந்து நோவுபடுகிற நம் துர்கதியைக் கண்டு, "மம மாயா துரத்யயா" என்று அவன் கூறுகிறபடி அதைப் போக்கிக் கொள்ள நம் அசக்தியையும் கர்ம ஜ்ஞான பக்தி யோகம் செய்வதற்குத் தடையாயுள்ள தன் பாபத்தையும் அறிந்து கலக்கமுற்றான்.

அதைக் கண்ட கண்ணன் அர்ஜுனனைப் பார்த்து, கீழே நான் சொன்ன எல்லா தர்மங்களையும் மோக்ஷோபாயமாகச் செய்வதை விட்டு, சித்தோபாயமாய், சுலபனுயுள்ள என் ஒருவனையே பற்று; மோக்ஷத்திற்குத் தடையான உன் பாபம் அனைத்தையும் நான் போக்குகிறேன்; அஞ்சாதே; என்கிறான், "ஸர்வதர்மாந் பரித்ஜ்ய" என்கிற இந்த சுலோகத்தில்.

இதுவே கீதா சாஸ்திரத்தின் கடைசி சுலோகமாகும். இதற்குப் பின்புள்ளவை முடிவுரை. கீழே சில உபாயங்களைச் சொல்லி, முடிவாக அதற்கு அவ்வருகில்லாத உபாயத்தைச் சொல்லுவதினால், இதற்குச் சரம சுலோகம் எனப்பெயர். ஸ்ரீராமாநுஜர் இந்த சுலோகத்திற்கு பக்தி பரமாக இரண்டு விதமாக பொருள்கள் அருளிச் செய்திருக்கிறார்.

முதல் நிர்வாகம் :

கர்மயோகம், ஜ்ஞான யோகம் பக்தியோகம் சிரந்தவைகள்; இவற்றைச் செய்யும்போது, தன்னைச் செய்பவனாகவும் (கர்த்ருத்

acharya.org

வம்), அந்தச் செயல் தன்னுடையது (மமதை) என்றும், அந்தச் செயலின் பயன் தனக்கு (பயன்) என்றும் எண்ணுமல், பகவானே அவற்றுக்குக் கர்த்தா, அந்தச் செயல் பகவானைச் சேர்ந்ததே, அச் செயலால் அடையும் பயனும் அவனுடையதே என்ற நினைவோ டேயே செய்ய வேண்டும். அப்படிச் செய்பவனுக்குத் தடையா யிருக்கிற பாபங்கள் அனைத்தையும் நான் போக்கிவிடுகிறேன்; கவலையுருதே என்று அர்ஜுனனுக்குக் கண்ணன் கூறுகிருன்.

கீழே சொன்ன கர்ம ஜ்ஞான பக்தி யோகங்கள் தர்மங்களே. அவற்றை அறவிடச் சொல்லவில்லை கண்ணன். அவைகளில், கர்த்ருத்வம், மமதை, பயன் இவைகளைப் பற்றிய புத்தியை மட்டுமே விடச் சொல்லியிருக்கிருன் பகவான்.

ஒருவன் தான் ஒரு செயலைச் செய்யும்போது, அதை நான் செய்ய வில்லை என்று நினைப்பது எப்படி? "தேன விநா திரணமபி ந சலதி" என்றும் "அவனின்றி அணுவும் அசையாது" என்றும் சொல்லி யுள்ளபடி, பகவானின் சங்கல்பம் (நினைவு) இன்றி ஒரு செயலும் நடைபெறுது. எல்லாச் செயல்களுக்கும் ஆரம்ப கர்த்தா பகவானே' ஜீவனில்லை என்பதை இந்த அத்யாயத்தில 13, 14, 15 சுலோகங் களில் பகவான் விவரித்திருக்கிருன்.

அப்படியாஞல், "ஸத்யம் வத; தர்மம் சர" என்று சில நற் செயல்களை ஜீவனுக்கு விதித்திருக்கும் பகவானே, சிலரைத் தீய செயலில துாண்டுவானேன்? ஒரு செயலைச் செய்யத் தூண்டுவதும் நடத்துவதும் ஒரு பலனோடு முடிப்பதும் பகவானே அந்தச் செயல் நல்ல செயலா, தீய செயலா என்பதுமட்டும் அவரவர் விதிவழி அமைவதாகும். ஊழ்வினைக்கு ஏற்பவே வாஸனையும் ருசியும் ஜீவனுக்கு ஏற்படுகிறது; அதைத் தலைக்கட்டித் தருபவஞகவே பகவான் விளங்குகிருன்.

எம்பெருமான் தாயுள்ளம் படைத்தவன்; ஒருதாய் தன் குழந்தை முகம் கோணுமல் அதன் விருப்பப்படி செயலபட அனு மதித்து பின்னர் அதற்குப் பரிகாரத்தைத் தேடுவது போல, பகவானும் நம்மை நம் விருப்பப்படி முதலில் செயலபட அனு மதித்து, பின்பு அதற்குத் தகுந்த பரிகாரம தேடுகிருன். "வத்ஸலை யான மாதா பிள்ளை பேகணியாமல் மண்தின்னவிட்டு பின் பிரத் யௌஷதம் இடுமாப் போலே" என்பது லோகாசாரியன் வார்த்தை

acharya.org

இரண்டாம் நிர்வாகம்:

கலங்கியிருக்கும் அர்ஜுனனைப் பார்த்து, மாசுச:—கலங்காதே என்கிறான் கண்ணன்; அர்ஜுனனின் கலக்கம் என்ன? பக்தி செய்தால் என்னையே அடைவாய் என்கிறானே கண்ணன் 'நராணாம் க்ஷீண பாபானாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே'' என்று சொல்லப் பட்டிருக்கிறதே—நமக்கோ பாபம் அதிகம்; நம் பாபம் போனா லன்றோ நமக்கு பக்தி உண்டாகும். பாபத்தை அனுபவித்தே போக்கிக் கொள்ள வேண்டும்; அல்லது சாஸ்திரத்தில் விதிக்கப் பட்டபடி அதற்கான பிராயச்சித்தங்களைச் செய்து போக்கிக் கொள்ள வேண்டும். இவை இரண்டும் நம்மால் ஆகாததன்றோ! நாம் செய்ய அடுப்பது என்? என்ற கலக்கமே அர்ஜுனனுக்கு உண்டாயிருக்கிறது.

இதைக் கண்ட கண்ணன், அர்ஜுன! உன் பாபம் விலக சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட எல்லா ப்ராயச்சித்த தர்மங்களையும் விட்டு, ஸர்வ பாப ப்ராயசித்தமாக என் ஒருவனையே பற்று; நான் உன் பாபங்களைப் போக்குகிறேன்; கலங்காதே என்கிறான்.

இப்படி முதல் நிர்வாகத்தில் கர்த்ருத்வம், மமதை, பலன் இவை களை விட்டு, கர்ம ஜ்ஞான பக்திகளைச் செய் என்பது பொருள்.

இரண்டாம் யோசனையில், பக்திக்குத் தடையான உன் பாபங்கள் நீங்க, நீ செய்ய வேண்டிய ப்ராயச்சித்தங்களை விட்டு, என்னை ஒருவனையே பற்று என்பது பொருள்.

இவ்விரண்டு பொருளுமே ஸ்ரீராமானுஜர் தமது கீதா பாஷ்யத் தில் அருளிச் செய்திருக்கிறார்: ஆனால், திருக்கோட்டியூர் நம்பி என்ற மஹானிடம், பதினெட்டு தடவை ஸ்ரீரங்கத்திலிருந்து திருக்கோட்டியூருக்கு நடந்து சென்று, கீதையின் சரம சுலோகப் பொருளைக் கேட்டு, எம்பெருமானார் கத்ய த்ரயத்தில் சரணாகதி பரமாகவே இதற்கு அர்த்தத்தை ஆசரித்துக் காட்டியிருக்கிறார் என்பது நம் பூர்வாசாரியர்களின் கருத்து. இந்த அர்த்தமே எம்பெருமானாருக்கு அபிமதமானது. (திருவுள்ளக் கருத்து) வேத புருஷனும் பல தர்மங்களைச் சொல்லி வந்து, கடைசியில் ''முமுக்ஷுர்வை சரணம் அஹம் ப்ரபத்யே'', மோக்ஷத்தில் இச்சை யுள்ள நான் பகவானைச் சரணம் பற்றுகிறேன் என்று ஆசரித்துக் காட்டியிருப்பது போல அதே வழியில் ஸ்ரீராமானுஜரும் சென்றுள் ளார் என்பதே பின்புள்ள ஆசார்யர்களின் கருத்து.

acharya.org

சரணாகதி பரமான பொருள் :

ஒரு பலனைக் கொடுக்கும் செயலே தர்மம் எனப்படும். ஸர்வ தர்மாந் - எல்லா தர்மங்களையும் கண்ணால் காணக்கூடிய பலனான வீடு வாசல் நிலம் பெண்டு புத்திரர் போன்ற செல்வங்களையும், கண்ணால் காணவொண்ணாத சுவர்கம் போன்ற அல்ப பலனையும், கொள்ளமாளா இன்பவெள்ளமான மறுபிறவியில்லாத மோக்ஷத்தையும் கொடுக்கக்கூடிய எல்லா தர்மங்களையும் — அதாவது, கர்ம ஜ்ஞான பக்தி யோகங்கள், இவற்றுக்கு அங்கங்களான நித்ய நைமித்ய கருமங்கள், மற்றும் அவதார ரஹஸ்ய ஜ்ஞானம், புருஷோத்தம வித்யை, புண்யக்ஷேத்திர வாஸம், திருநாம ஸங்கீர்த்தனம்; திருவிளக்கு எரிக்கை திருமாலை தொடுக்கை முதலானவை

பரித்யஜ்ய - த்யஜித்து, விட்டு, அந்த தர்மங்களை செய்வதையே விட்டு என்பது பொருளல்ல; அவைகளை மோக்ஷோபாயம் என்று நினைக்கிற புத்தியை விட்டு என்பதே பொருள்; எங்ஙனே என்னில், அவைகளுக்குத் தானே மோக்ஷம் கொடுக்கும் சக்தியில்லை; அவை அறிவில்லாத செயல்கள்; ஒரு அறிவுள்ள ஜீவன் செய்யும்போது மட்டுமே உண்டாகும் தன்மையவை; ஈச்வரனிட்ட வழக்காயுள்ள ஜீவாத்மாவின் ஸ்வரூபத்திற்குச் சேராதவை என்பதை அறிந்து, அச்செயல்களையே உபாயமாக நினைக்கும் புத்தியை விட்டுவிட வேண்டும்; அவைகளை உபாயமாக நினைப்பதே குற்றமாகும்.

ஓர் ஊருக்குப் போகிறவன் சரியான வழியை விட்டு எதிர் நோக்கி, வெகுதூரம் போன பின்பு தன் தவறுதலைத் தெரிந்து எப்படி வருந்தி வெட்கமுற்று, அவ்வழியை விட்டு மீள்கிறானோ, அதே போல உபாயமில்லாதவைகளை, இது வரையில் உபாயமாக எண்ணியிருந்தோமே என்று வருந்தி, வெட்கமுற்று அவை உபாயம் என்கிற புத்தியை விட்டுத் திரும்பு என்கிறான்.

நாம் செய்யும் சரணாகதி என்ற செயல் உள்பட எல்லாச் செயல்களையும் உபாயமாக நினைக்கும் நினைவு நாம் மோக்ஷம் பெறத் தடையாகும். இராவணன் செயலற்றுத் தோற்று நிற்கும் நிலையில், அவன் கையில் இருந்த வில், ராமன் அவனை "கச்சாநு ஜாநாமி, இன்று போய் நாளை வா" என்று சொல்வதற்குத் தடையாகயிருந்தது; அது போர் புரிவதற்கும் அவனுக்கு உதவவில்லை: அது போல மற்ற தர்மங்கள் மோக்ஷம் தர வல்ல சக்தியற்றவை என்பது மாத்திரமில்லை; சித்த தர்மமான பகவான் நமக்கு ஆத்ம நன்மை செய்யவும், குறுக்கே தடையாக நிற்கின்றன. ஆகையால் அவற்றின் பலனற்ற தன்மையை அறிந்து அவற்றை விலக்க வேண்டும்.

acharya.org

"ஸ்நாத்வா புஞ்ஜீத" என்பது போல முன்னர் அவை உபாயமென்கிற புத்தியை விட்டே பின்னர் பகவானையே உபாயமாகப் புத்தி பண்ண வேண்டும், இப்படி மற்றவற்றை உபாயம் என்று எண்ணும் புத்தியை விட்ட பிறகே—பகவானைப் பற்ற வேண்டும் என்பது கண்ணன் விதித்த விதி.

மாம் ஏகம் - என் ஒருவனையே. அறிவு ஆற்றல் மிக்கவனாக இருந்தும் உன் ஸாரதியாய், உனக்குக் கையாளாய் உன் இசைவு பார்த்து உனக்கு நன்மை செய்யக் காத்திருக்கும் என்னை.

"கையும் உழவு கோலும், பிடித்த சிறுவாய்க்
கயிறும், ஸேனா தூளி தூஸரிதமான திருக்குழலும்
தேருக்குக் கீழே நாற்றின திருவடிகளுமான
ஸாரத்ய வேஷத்தை மாம் என்று காட்டுகிறான்"

தர்ம ஸம்ஸ்தாபனம் செய்யப் பிறந்த அவனே, தர்மங்களை விடு என்று சொல்லலாமா? எந்த தர்மத்தையும் கண்ணன் விடச் சொல்லவில்லை; அவை மோக்ஷ பலனைக் கொடுக்கக் கூடியவை என்கிற புத்தியையே விடச் சொல்லுகிறான்; 'க்ருஷ்ணன் தர்மம் ஸநாதனம் என்கிற சித்த தர்மமான அவனே மோக்ஷோபாயம்' என்று புத்தி பண்ணச் சொல்லுகிறான்.

மற்ற தேவதைகள், அதுபோல இவன் செய்யும் கர்ம, ஜ்ஞான பக்தி யோகங்கள், இவை உபாயம் அல்ல என்று தவிர்ப்பது போல இவன் செய்யும் ப்ரபத்தியும் உபாயமன்று; 'ப்ரபத்தி''யில் தான் செய்யும் சரணாகதியை உபாயமாக எண்ணுவது, தன்னை மலடி மகன் என்று சொல்லிக் கொள்வது போலாகும்

மேலும் சித்த தர்மமான சரண்யன் (பகவான்) மற்ற எதையும் நாம் உபாயமாக எண்ணுவதை சகிப்பதில்லை; ஏனெனில் அப்படி நினைப்பதினால் பகவானைச் சரணம் பற்றுகிறவனுக்கு மஹாவிச்வாசம் (த்ருடநம்பிக்கை) இல்லை என்று தேறி விடுகிறது. அப்போது சணல் கயிறு பட்ட ப்ரஹ்மாஸ்த்திரம் போல பகவான் இவனை தன் ரக்ஷணத்திலிருந்து நழுவ விடுவான்.

சரணம் வ்ரஜ— உபாயமாக புத்தி பண்ணு. சரணம் என்பதற்கு ரக்ஷகன், வீடு, உபாயம் என பல பொருள்களிருந்தாலும், இங்கு உபாயம் என்பதே பொருந்திய பொருள். அவனுடைய ரக்ஷணத்திற்கு, நாம் அதிகாரி (தகுதி)யாக வேண்டும். அதற்கு நாம் அவனை

acharya.org

மெய், நா, மனத்தினால் பற்றலாம். ஆனால் 'ஜ்ஞானந் மோக்ஷ!' என்று சொல்லியிருப்பதினால், மனத்தினால் பகவானே உபாயம் என்று புத்தி பண்ணுவதே மிக முக்கியமானது.

''ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய'' என்பதினால் ''ஆகிஞ்சன்யம்'' அதாவது உபாயத்துக்கு உறுப்பாக என்னிடம் ஒன்றுமில்லை; என்பது சொல்லப்படுகிறது; சரணம் வ்ரஜ என்பதினால் 'அநந்ய கதித்வம்', உன்னைத் தவிர எனக்கு வேறு புகல் இல்லை என்பது சொல்லப்படுகிறது. சரணாகதி செய்பவனுக்கு ஆகிஞ்சன்யமும், அநன்ய கதித்துவமும் இன்றியமையாதவை.

இப்படி, ''ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ'' என்கிற முதல் வாக்கியத்தினால், மற்ற எல்லா தர்மங்களும், தான் செய்யும் சரணாகதி உட்பட மோக்ஷோபாயம் என்கிற புத்தியை விட்டு சாக்ஷாத் தர்மமான என் ஒருவனையே பற்று என்று, சரணாகதன் செய்ய வேண்டியதைச் சொல்லிற்று; இனி இரண்டாம் வாக்கியத்தினால் சரண்யனான பகவான் தான் செய்யுமதைச் சொல்லுகிறான்.

அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச :— கீழே மாம் என்பதினால் பற்றுவதற்கு எளிமைக்கு எல்லைநிலமான தன் ஸாரத்ய வேஷத்தைக் காட்டினான் கண்ணன். இதைக் கேட்ட அர்ஜுனனுக்கு நம் தேரோட்டியான இவன் காலில் விழச்சொல்லுகிறானே! இவன் நம்மை எப்படி ரக்ஷிக்க முடியும் என்று ஐயம் எழ, கிருஷ்ணன், அர்ஜுனா! நான் யார் தெரியுமா? என்று தன் பரத்வமெல்லாம் தோற்ற அஹம் என்கிறான். என்னை உனக்கு ஸாரதியென்று எண்ணாதே; மூவகைப்பட்ட சேதனாசேதனங்களையும் படைத்து, காத்து, அழிக்க வல்லவன். உயிர்களின் இருப்பு, அவைகளை ஒரு செயலில் தூண்டுவது, ஒன்றில் நின்றும் விலக்குவது அனைத்தையும் நடத்திப்போருகிறவன், (அறிவு ஆற்றல் நிறைந்தவன்) என்று தன் மேன்மையெல்லாம் தோற்ற அஹம் ''நான்'' என்கிறான்.

த்வா — அறிவிலியாய், தன்னைத் தானே காத்துக் கொள்ள ஆற்றலும் (சக்தியும்), உரிமையும் இல்லாதவனாயிருக்கும் உன்னை, ஸர்வ வல்லமை பொருந்திய என்னையே அடைக்கலமாகப் பற்றியிருக்கும் உன்னை.

ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி — மோக்ஷத்திற்குத் தடையாக உள்ள எந்தப் பாபமாயினும் அவைகளையெல்லாம் நான் போக்கு

acharya.org

கிறேன்; நீ எனக்குச் சரீரம். நான் உனது ஆத்மா, என் உடலின் அழுக்கை நானே போக்கிக் கொள்ளேனே என்கிருன் கண்ணன்.

மாசுச ! நீ அஞ்சாதே, ஸர்வ ரக்ஷகனான என்னிடம், உன் ரக்ஷணத்தை ஒப்படைத்த பின் நீ அஞ்ச வேண்டுமோ!

ஆக, ''ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய'' என்னும் இந்த சுலோகத்தினால், ''அர்ஜுன, கர்ம ஜ்ஞான பக்திகளை மோக்ஷோபாயமாக நீ எண்ணியிருக்கும் உன் தவருன எண்ணத்தை அறவே விட்டு என் ஒருவனையே மோக்ஷோபாயமாகப் பற்றியிரு; அறிவாற்றல் மிக்க நான் மோக்ஷத்திற்குத் தடையான, எல்லா பாபங்களிலிருந்தும் உன்னை விடுவிக்கிறேன்; நீ அஞ்சாதே என்று சுதந்திர ப்ரபத்தி பரமான அர்த்தத்தையே பூர்வாசாரியர்கள் எல்லோரும் ஆதரித்திருக்கிருர்கள்.

இதில் உன் பாபங்களையெல்லாம் போக்குகிறேன் என்று மட்டும் க்ருஷ்ணன் சொல்லியிருக்கிருனே ஒழிய, ''நீ மோக்ஷம் அடைவாய்'' என்று பலனைச் சொல்லவில்லையே என்கிற சந்தேஹம் சிலருக்குத் தோன்றக் கூடும்.

மோக்ஷத்திற்குத் தடையான பாபம் போனால், மோக்ஷம் தன்னடையே சித்திக்கும் என்று கொள்ளலாம். அங்ஙனன்றிக்கே, ''மந்மநா பவ மத்பக்த'' என்னும் முன் சுலோகத்தில் ''மா மேவைஷ்யஸி'' என்னையே அடைவாய் என்று பலனைச் சொல்லி, இந்த சுலோகத்தில் அதற்கு உபாயத்தைச் சொல்லியிருக்கிருன் என்பதைக் காணலாம். தன்னைச் சரணம் பற்றுபவர்களுக்கு, பகவான் செய்யும் காரியம் தனிச் சிறப்புற்றதாக யிருக்கும். ஆதலால், பலனை முந்துறச் சொல்லி, உபாயத்தைப் பின்பு இச் சுலோகத்தினால் சொல்லியிருக்கிருன்.

சரணுகதனை, எம்பெருமான் தன் தொண்டர்கள் கையில் காட்டிக் கொடாமல், தானே நேரில் வந்து, அவனை அன்போடு அணைத்து வழி நடத்தி, பரமபதத்தில் கொண்டு சேர்ப்பிக்கிருன். இதை ஸ்ரீ வராஹப்பெருமாள் தன் சரம சுலோகத்தில் தெளிவாக அருளிச் செய்திருக்கிருர்!

இதைத் தவிர மற்ருேர் சிறப்பும் சரணுகதிக்கு உண்டு; பகவானைச் சரணம் பற்றினவனின் ப்ராரப்த கர்மா, ஸஞ்சித கர்மா இரண்டும் தொலைந்து இப் பிறவியின் இறுதியிலேயே மோக்ஷம் கிடைக்கிறது. பக்தனுக்கோ எனில் ஸஞ்சித கர்மாமாத்திரம் போகிறது. அவன் அனுபவித்து வரும் ப்ராரப்த கர்மா முழுமை

acharya.org

யும், அது எத்தனை பிறவியானாலும் எடுத்து, அனுபவித்து தீர்ந்த பிறகே மோக்ஷம்; அது வரையில் எத்தனை ஜன்மமானாலும் அவன் பக்தியை விடாமல் செய்து கொண்டே யிருக்க வேண்டும். ஆதலால் சரணாகதனுக்குள்ள இச் சிறப்பெல்லாம் தோற்ற மோக்ஷ பலனை, தனித்து முன் சுலோகத்தில் சொல்லி, அடுத்த இந்த சுலோகத்தில் உபாயத்தைச் சொல்லி யிருக்கிறான் கண்ணன். (பல பிறவிகளில் செய்து, சேர்த்து வைத்திருக்கும் புண்ய பாபங்கள், ஸஞ்சித கர்மா: இப்போது அனுபவித்து வரும் வினைப் பயன்கள் ப்ராரப்த கர்மா எனப்படும்).

மந்மநா பவ மத் பக்த: "என்று பக்தியை முன் சுலோகத்தில் விதித்திருக்கிறானே, அதற்குக் கருத்து என்ன? இங்கே சொல்லுவது ஸாதன (மோக்ஷோபாயமான) பக்தி அன்று.

"ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய" என்கிற இந்த சுலோகத்தில் சொல்லப்பட்டபடி, பகவான் ஒருவனையே மோக்ஷோபாயமாகச் சரணம் பற்றினால், பக்திக்குத் தடையான நம் பாபமெல்லாம் போய், "மாமேவ ஏஷ்யஸி" என்னையே அடைவாய் என்று பலத்தையும் சொல்லி, அப்படி மோக்ஷம் அடைந்தவனுக்கு இருக்க வேண்டிய ஸாத்ய பக்தியையே—அதில் மந் மநாபவ மத் பக்த: என்பதினால் சொல்லி யிருக்கிறான். "உற்றேன் உகந்து பணி செய்து" என்கிறபடி, பகவானுக்குத் தொண்டு செய்ய வேண்டிய, உகப்பே ஸாத்ய பக்தி, எம்பெருமானுக்குச் செய்யும் பூஜை, நமஸ்காரம் த்யானம் மற்றும் பணிவிடைகள் அன்புடனிருந்தே செய்ய வேண்டும் என்பதையே அங்கே சொல்லி யிருக்கிறான்.

பகவானை அடைவதற்கு உபாயமான ஸாதன பக்தியை ஒன்பதாம் அத்யாயம் இறுதியில் "மந்மநா பவ மத் பக்த:" என்கிற சுலோகத்தில் சொல்லியிருக்கிறான். அங்கு அந்த ஸாதன பக்தியை குஹ்யதமம்" என்று சொல்லி, இங்கே இந்த ஸாத்ய பக்தியை "ஸர்வ குஹ்ய தமம்" என்று சிலாகித்து கூறியிருக்கிறான்.

ஆக, முதல் சுலோகத்தில் "மாமேவைஷ்யஸி" என்று பலனையும், அந்தப் பலனை அடைந்தவனுக்கு இருக்க வேண்டிய ஸாத்ய பக்தியையும் சொல்லி, 'ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய' என்னும் இந்த சரம சுலோகத்திற்கு சித்த தர்மமான பகவானே உபாயம் என்பதை அறுதியிட்டு கீதையின் உபதேசத்தைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறான் ஸ்ரீ கிருஷ்ணன்.

acharya.org

சரணாகதியும் விளக்கமும்

''அஹமஸ்ய அபராதானும் ஆலய : அகிஞ்சந : அநந்யகதி : த்வ மேவ

உபாயபூதோ மே பவ'' இதி ப்ரார்த்தனா மதி : சரணாகதி :

ஒரு சேதனன் பரமபுருஷன் சந்நிதியைக் கிட்டி, நான் அகிஞ்சனன், எனக்குப் புண்யம் சிறிதுமில்லை; பாபமே நிறைந்தவன், எனக்கு வேறொன்றும் நன்மை தராது; வேறு புகலற்றவன், நீயே எனக்குக் கதி, எனது ஆத்ம ச்ரேயஸுக்கு நீயே உபாயமாக வேண்டும் என்று, பிரார்த்திப்பதே சரணாகதி எனப்படும்.

மோக்ஷத்தில் இச்சையுள்ள முமுக்ஷு, இவ்விதம் சரணாகதியைச் செய்ய வேண்டும் என்பதை ஸ்ரீ வைஷ்ணவ ஆசார்யர்கள் எல்லோரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

எம்பெருமான் சித்தோபாயம்; நாம் செய்யும் சரணாகதி ஸாத்யோபாயம். சித்தோபாயமான பகவான் எப்போதும் இருந்தாலும், சரணாகதியே அவனை நமக்கு சாதித்து (பெறுவித்து)க் கொடுக்கிறது. ஆதலால் சரணாகதி ஸாத்யோபாயமாகிறது — அதாவது நாம் அவனைச் சரணம் பற்றினால் தான் பகவான் நமக்குக் காரியம் செய்கிறான். இது ஒரு கருத்து.

இன்னும், சிறந்த ஜ்ஞான சக்தி பெற்றவன் மோக்ஷம் பெற பக்தி யோகத்தையே செய்ய வேண்டும். அப்படி ஜ்ஞான சக்தியில்லாதவன் பகவானைச் சரணம் பற்றினால், பகவான் அவனுக்கு பக்தி ஸ்தானத்தில் இருந்து காரியம் செய்கிறான். இவன் செய்யும் ப்ரபத்தி பகவானை பக்தி ஸ்தானத்தில் கொண்டு வந்து சேர்ப்பிக்கிறது. அப்போது அவன் பயனுக்கு உபாயமாகிறான். ஆதலால் ப்ரபத்தி ஸாத்யோபாயம் என்பது இரண்டாவது கருத்து. இவ்விரண்டு கருத்துக்களும் உள்ளது ஒரு பக்ஷம்.

acharya.org

லோகாசாரியன் ஸம்பிரதாயத்தில் இதை ஒப்புக் கொள்ள வில்லை; 'த்வமேவ உபாய பூதோமே பவ' நீயே எனக்கு ஸாதனம்; வேறு உபாயமெதுவும் இல்லை, என்று வாயினால் சொல்லி சரணாகதி யைச் செய்து; மனத்தினால் இவன் செய்யும் சரணாகதியை உபாய மாக நினைப்பானாகில், இவனுடைய சொல்லும் நினைவும் மாறுபட் டிருக்கும். இப்படிச் செய்யும் சரணாகதி பொய்யேயாகும். சரணாகதி பலிக்காது-பகவான் இவனுக்குக் காரியம் செய்யான். இது "மம மாதா வந்த்யா"—எனது தாயார் மலடி என்பது போலேயாம்.

அஸ்திரங்களுக்குள் உயர்ந்தது ப்ரஹ்மாஸ்திரம். அதனால் கட்டப்பட்ட ஒருவனை வேறு கயிறு கொண்டு கட்டினால் அந்த ப்ரஹ்மாஸ்திரத்தின் கட்டு விட்டு விடும். இதை "சாணல் கயிறு கண்ட ப்ரஹ்மாஸ்திரம் போலே" என்பர். அதே போல அவனைத் தவிர வேறொன்றை உபாயமாக எண்ணினால் சித்த தர்மமான பகவான் தான் ரக்ஷணத்திலிருந்து நழுவி விடுவான். ப்ரபன்ன னுக்கு இருக்க வேண்டிய மஹா விச்வாஸம் பகவானிடம் (த்ருட நம்பிக்கை) போய் விடுகிறபடியால், சரணாகதி பலிக்கிறதில்லை. ஆதலால் லோகாசாரியன் ப்ரபத்தியை சாத்யோபாயம் என் பதையோ, அது பகவானை பக்தி ஸ்தானத்தில் கொண்டு சேர்ப்பிக் கிறது என்பதையோ ஒப்புக் கொள்ளவில்லை. முமுக்ஷு என்பது பொதுவான தர்மம். இவன் சரணாகதி செய்ய வேண்டும். சரணாகதி செய்தால் தான் இவன் மோக்ஷத்திற்கு அதிகாரி யாகிறான். அதா வது தகுதியுள்ளவனாகிறான். பகவான் தனக்குக் காரியம் செய்ய தன்னைத் தகுதியுள்ளவனாக்கிக் கொள்கிறான்; தான் செய்யும் சரணா கதி உள்பட எல்லா தர்மங்களையும் மோக்ஷோபாயம் என்கிற புத்தியை விட்டு, பகவான் ஒருவனே உபாயம் என்று பற்றுவதே அதிகாரம், விலக்காமை என்னும் தன் தகுதியைக் காட்டுவதே சரணாகதி; இது ஸத்ஸம்ப்ரதாயார்த்தம்.

ஸ்ரீ வைஷ்ணவத்துக்கு ப்ரதமாசாரியர் நம்மாழ்வாரே யாவர்; இவர் தம் திருவாய் மொழியில், கீதையின் ஸாரப் பொருளை "நீர் நுமது என்றிவை வேர் முதல் மாய்த்து இறை சேர்மின் உயிர்க்கு அதன் நேர் நிறை இல்லே" என்ற ஒரு பாசுரத்தில் கடுகைத் துளைத்து கடலை மடுத்தாற் போல் சுருக்கி அருளியிருக்கிறார்.

இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந |
ந சாசுச்ருஷவே வாச்யம் ந ச மாம் யோऽப்யஸூயதி || 67

acharya.org

க்ருஷ்ணன் வளர்ந்தருளும் காலத்தில் எல்லோரும் பீஷ்ம த்ரோணாசார்யர்களையே ஞானவான்களாகக் கருதி, அவர்களையே ஆசார்யர்களாகப் பற்றினர்கள். க்ருஷ்ணனை எவரும் ஆசார்யனாகப் பற்றவில்லை. இது அவனுக்கு பெருங்குறையாக இருந்தது. 'சிஷ்யஸ் தேஹம் சாதிமாம் த்வாம் ப்ரபந்நம்' என்று சொல்லி அர்ஜுனன் க்ருஷ்ணனைப் பற்றின உடனே, நமக்கு ஓர் சிஷ்யன் கிடைத்து விட்டானே, நாம் ஓர் ஆசார்யனாக ஆகிவிட்டோம் என்கிற சந்தோஷத்தினால் அரிய பெரிய சாஸ்திரார்த்தங்களையெல்லாம் கீதா உபதேச மூலம் வாரி இறைத்து விட்டான். ஆனால் சொல்லி முடித்த உடன் அவன் மனம் முறைகெடச் சொல்லி விட்டோமோ என்று பதண் பதண் என்று அடித்துக் கொண்டது; உடனே அர்ஜுனனைப் பார்த்து அர்ஜுனா! என் உபதேசம் மிக மிக உயர்ந்த சாஸ்திரம், மிக ரஹஸ்யமானது; என்னிடம் பக்தியில்லாதவர்க்கோ என்னிடம் அஸூயை இருப்பவர்களுக்கோ, மற்றும் இதைக்கேட்க விரும்பாதவர்களுக்கோ, இந்த சிறந்த சாஸ்திரத்தைச் சொல்லக் கூடாது என்கிறான்.

ய இதம் பரமம் குஹ்யம் மத்பக்தேஷ்வபிதாஸ்யதி |
பக்திம் மயி பராம் க்ருத்வா மாமேவைஷ்யத்யஸம்சய: || 68

ந ச தஸ்மாந் மநுஷ்யேஷு கச்சிந் மே ப்ரியக்ருத்தம: |
பவிதா ந ச மே தஸ்மாத் அந்ய: ப்ரியதரோ புவி || 69

அத்யேஷ்யதே ச ய இமம் தர்ம்யம் ஸம்வாதம் ஆவயோ: |
ஜ்ஞாநயஜ்ஞேந தேநாஹம் இஷ்டஸ்யாமிதி மே மதி: || 70

ச்ரத்தாவாந் அநஸூயச்ச ச்ருணுயாதபி யோ நர: |
ஸோऽபி முக்த: சுபாந் லோகாந் ப்ராப்நுயாத் புண்யகர்மணாம் || 71

மிக ரஹஸ்யமான இந்த கீதாசாஸ்திரத்தின் உண்மைப் பொருளை தெளிவாக என் பக்தர்களுக்கு, எவன் எடுத்துச் சொல்லுகிறானோ, அவனுக்கு என்னிடம் பக்தி உண்டாகி என்னையே அடைவான் என்பதில் சந்தேஹமேயில்லை.

அவனைவிட மேலான ப்ரியன் எனக்கு மண்ணிலுமில்லை; விண்ணிலுமில்லை எவன் இந்த உயர்ந்த தர்மமான நம் இருவரின் ஸம்வாத ரூபமான கீத சாஸ்திரத்தை, பாராயணம் செய்கிறானோ—

acharya.org

(ச்ரத்தையுடன் படிக்கிறானோ), அவன் சிறந்த ஜ்ஞான ஜ்ஞானத்தி னால் என்னை ஆராதித்தவனாகிறான் என்பது எனது கருத்து.

சிரத்தையுடன் என்னிடம் அஸூயை யில்லாமல் இந்த கீதா சாஸ்திரத்தைக் கேட்பவன் பக்திக்குத் தடையான எல்லாப் பாவங் களிலிருந்தும் விடுபட்டு, என் பக்தர்களில் ஒருவனாகிறான்.

கச்சித் ஏதத் ச்ருதம் பார்த்த த்வயைகாக்ரேண சேதஸா |
கச்சித் அஜ்ஞாநஸம்மோஹ: ப்ரநஷ்டஸ்தே தநஞ்ஜய ॥ 72

அர்ஜுனா! என்னால் சொல்லப்பட்ட இந்த சிறந்த சாஸ்திரத்தை கவனமாய்க் கேட்டு, அறிந்தாயல்லவா! போர் செய்யேன் என்று, உன் அறிவின்மையினால் சொன்ன உன் மயக்கம் இப்போது, உனக்குத் தெளிந்து விட்டதன்றோ!

நஷ்டோ மோஹ: ஸ்ம்ருதிர் லப்த்தா த்வத்ப்ரஸாதாந் மயாऽச்யுத |
ஸ்த்திதோऽஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ ॥ 73

க்ருஷ்ண! உன் அருளினால் என் அறியாமை நீங்கி, எனக்கு சரி யான அறிவு உண்டாயிற்று; ஐயம் எல்லாம் தீர்ந்தது. எனக்குரிய க்ஷத்திரியத் தன்மை எழுச்சியுற்றது! உன் சொல்படி நான் போர் புரிவேன் என்கிறான் அர்ஜுனன்.

ஸஞ்சய உவாச— ஸஞ்ஜயன் கூறியது.

இத்யஹம் வாஸுதேவஸ்ய பார்த்தஸ்ய ச மஹாத்மந: |
ஸம்வாதமிமம் அச்ரௌஷம் அத்புதம் ரோமஹர்ஷணம் ॥ 74

வ்யாஸப்ரஸாதாத் ச்ருதவாந் ஏதத் குஹ்யம் அஹம் பரம் |
யோகம் யோகேச்வராத் க்ருஷ்ணாத் ஸாக்ஷாத் கதயத: ஸ்வயம் ॥ 75

ராஜந் ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ஸம்வாதம் இமம் அத்புதம் |
கேசவார்ஜுநயோ: புண்யம் ஹ்ருஷ்யாமி ச முஹுர்முஹு: ॥ 76

த்ருதராஷ்ட்ர மன்னனே! இந்த ஆச்சர்யமான க்ருஷ்ணார்ஜுன ஸம்வாதத்தை நான் நேரில் கேட்டு, இது வரையில் உமக்குச் சொன்னேன்.

acharya.org

வியாஸரின் அருளினால் இந்த மேலான ரஹஸ்யத்தை, ஸகல கல்யாண குணங்களுக்கும் இருப்பிடமான க்ருஷ்ணன் தானே சொல்ல நான் நேரில் கேட்டேன்.

அரசே! ஆச்சர்யமான இந்த புண்யமான க்ருஷ்ணார்ஜுன சம்பாஷணையை, நினைத்து நினைத்து நான் மிக சந்தோஷமடைகிறேன்.

தச்ச ஸம்ஸம்ருத்ய ஸம்ஸ்ருத்ய ரூபம் அத்யத்புதம் ஹரே: |
விஸ்மயோ மே மஹாந் ராஜந் ஹ்ருஷ்யாமி ச புந: புந: ‖ 77

மஹாராஜனே! அவ்விருவரின் உரையாடலுக்கு மேல் பகவானின் விச்வரூபத்தை வியாஸரின் அருளினால், என் கண்களால் கண்ட நான் அதை நினைத்து, நினைத்து மகிழ்ந்து வியந்து மகிழ்கிறேன்.

ஸ்ரீ க்ருஷ்ணன் அர்ஜுனனுக்குத் தெளிவை உண்டாக்கினான்; அர்ஜுனன் தன் காண்டீபத்தைக் கையில் எடுத்து விட்டான்; இனி க்ருஷ்ணனின் அருள் பெற்ற அவர்களுக்கே வெற்றி நிச்சயம்; என்று தெளிவாக ஸஞ்சயன் த்ருத்ராஷ்ட்ரனுக்குச் சொன்னான்.

யத்ர யோகேச்வர: க்ருஷ்ணோ யத்ர பார்த்தோ தநுர்த்தர: |
தத்ர ச்ரீர் விஜயோ பூதி: த்ருவா நீதிர்மதிர்மம ‖ 78

சேதநாசேதன ஸ்வரூபஸ்திதி ப்ரவர்த்தியை நடத்திச் செல்லும் க்ருஷ்ண பகவான் (உலகம் யாவையும் தாமுள வாக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா விளையாட்டுடையன்) எந்த பக்கத்திலிருக்கிறானோ சூரனும், சிறந்த வில்லாளியுமான அர்ஜுனன் தன் காண்டீபத்தை ஏந்தி எந்தப் பக்கத்திலிருக்கிறானோ அந்தப் பக்கத்தில் தான் வெற்றி செல்வி விளங்குகிறாள். அங்குதான் நீதியும், கொற்றமும், வெற்றியும், ஆளும் திறமையும் நிலை பெற்று இருக்கும் என்பது எனது திடமான கருத்து.

acharya.org

"தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே......கிமகுர்வத ஸஞ்சய" என்ற த்ருத்ராஷ்டிரன் கீதை ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்கு, ஸஞ்சயன் இந்த கீதா சாஸ்திர இறுதி சுலோகத்தில் க்ருஷ்ணனும் அர்ஜுனனும் இருக்கும் பக்கத்தில் விஜயஸ்ரீயும் நீதியும் நிலைத்திருக்கிறது என்று பதில் சொல்லுகிறான்.

ஸகல உபநிஷத் ஸாரமான க்ருஷ்ணார்ஜுன ஸம்வாத ரூபமான கீதா சாஸ்திரம் முற்றிற்று.

ஸ்ரீஆளவந்தார் அருளிச் செய்த கீதார்த்த ஸங்க்ரஹம்

ஈச்வரே கர்த்ருதா புத்தி:ஸத் வோபா தேயதாZந்திமே
ஸ்வ கர்ம பரிணமச்ச சாஸ்த்ர ஸாரார்த்த உச்யதே

ஸர்வேச்வரனே ஸர்வ கர்த்தா என்கிற ஸாத்விக த்யாகத்வமும், ஜ்ஞாந கர்ம ஸங்கங்களில் ஸாத்விகமே கொள்ளத் தக்கது என்பதும், அவைகளுக்குள்ள வர்ணாச்ரம தர்மமே ஸாத்விகமாகச் செய்தால் மோக்ஷம் வரையில் அவை சேர்ப்பிக்கும். பகவானைப் பெற சரமோபாயமும் இந்தக் கடைசி அத்யாயத்தில் சொல்லப் பட்டது.

ஸ்ரீ ஆளவந்தார் திருவடிகளே சரணம் !

acharya.org